உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 30 புதன்கிழமை (15.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 293

# இன நல்லிணக்கம் செயலில் தேவை; சொல்லில் அல்ல என்கிறது பிரிட்டன்

## இலங்கை குறித்து நாடாளுமன்றில் அமைச்சர் பேர்ட்



லண்டன், செப்ரெம்பர் 15

இலங்கையில் இன நல்லிணக்கம், நடைமுறையிலேயே - செயலிலேயே- தேவை; வெறும் சொல்லில் - வார்த்தைகளில் - அல்ல.

இலங்கையில் போர் முடிந்த கையோடு அந்நாட்டு அரசாங்கம் அங்கு நல்லிணக்கத்தை கொண்டு வர உழைக்கப்போவதாக எமக்குத் தெரிவித்தது.

ஆனால், இதுவரை அந்தத் திசை நோக்கி எதுவும் நகர்வதாக இல்லை. முன்னர் கூறியதை செயலில் காட்டுமாறு அந்நாட்டு அரசாங்கத்துக்கு நாம் அழுத்தம் கொடுத்து வருகிறோம்.

இவ்வாறு தெரிவித்தார் மத்திய கிழக்கு மற்றும் தென்னாசியப் பிராந்தியத்துக்கான அமைச்சர் அலிஸ்ரால் பேர்ட்.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் நேற்றைய கேள்வி நேரத்தில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இலங்கை நிலை குறித்து எழுப்பிய வினா ஒன்றுக்கு பதில் அளித்து பேசுகையிலேயே அமைச்சர் பேர்ட் மேற்கண்டவாறு கூறினார். (24ஆம் பக்கம் பார்க்க)

## உயர் நீதிமன்றில் நேற்று ஆஜரானார் பொன்சேகா

கொழும்பு, செப். 15

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான மனு மீது நடைபெறும் விசாரணைகளைப் பார்வையிடுவதற்காக ஜனநாயக தேசியக் கூட்டணியின் தலைவர் சரத் பொன் சேகா நேற்று உயர்நீதிமன்றத்திற்குச் சென்றிருந்தார்.

வழக்கு விசாரணைகளில் கலந்து கொள்ள இடமளிக்கப்பட வேண்டும் என சரத் பொன்சேகாவின் சட்டத்தரணி விடுத்த கோரிக்கையை அடுத்து, பிரதம நீதியரசர், பொன்சேகாவை விசாரணைகளில் கலந்துகொள்ள செய்யுமாறு இராணுவத் தளபதிக்கு நேற்றுமுன்தினம் உத்தரவிட்டிருந்தார். (அ-சி)

## ஜனாதிபதியைச் சந்திக்க அடம் பிடித்தவர் கைது

### உயரமான கம்பிக்கூட்டின் மீது 8 மணி நேரப்போராட்டம்

கொழும்பு, செப்.15

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்னுடன் பேசவேண்டும் என அடம்பிடித்து விளம்பரம் பொருத்தும் உயரமான கம்பிக் கூட்டில் ஏறி 8மணித்தியாலங்கள் தொங்கி நின்ற இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

காலி பிரதேசத்தைச் சேர்ந்த இந்த இளைஞர் ஹெல்மெட் ஒன்றை அணிந்து தனது முகத்தை மறைத்திருந்தார்.

இவர் தன்னைப் பலவந்தமாக இந்த விளம்பரம் பொருத்தும் கம்பிக் கூட்டில் இருந்து இறக்க முயற்சித்தால் தான் தற்கொலை செய்து (24ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் குடியிருப்புகள் தீக்கிரை; இரத்தினபுரியில் பதற்ற நிலை!

### 100 குடும்பங்கள் இடம்பெயர்வு; பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, செப். 15

இரத்தினபுரி, நிவித்திகலைப் பொலிஸ் பிரிவிலுள்ள தோட்டம் ஒன்றில் தமிழர்களின் குடியிருப்புகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் அச்சம் காரணமாக தமிழ்க் குடும்பங்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிவித்திகலையிலுள்ள தேல குக்குல கலைத் தோட்டத்தைச் சேர்ந்த பெரும்பான்மையினக் காவற்காரர் ஒருவர் கரவிட்ட திமியாவ என்னுமிடத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து இந்தத் தோட்டத்தைச் சேர்ந்த இரண்டு வீடுகள் தீக்கிரைக்கப்பட்டன எனவும் பத்துக்கும் மேற்பட்ட வீடுகளிலிருந்து பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குக்குலகல பகுதியிலுள்ள பெரும்பான்மையினத் தோட்டக்காவலர் ஒருவர் கடந்த சனிக்கிழமை காணாமல் போனதைத்தொடர்ந்து அவர் திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து இந்தத் தோட்டத்திலுள்ள தமிழர்களின் வீடுகள் (24ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சியின் தேசிய மாநாடு டிசெம்பரில் இளம் தலைவர்களுக்கு முக்கிய பொறுப்பு

### தலைவர் ரணில் நேற்று அறிவிப்பு



கொழும்பு, செப். 15

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய மாநாடு எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறும். இம் மாநாட்டில் கட்சி மறுசீரமைப்புக் குழுவினரின் சிபார்சின்பேரில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுடன் கட்சி யாப்பு முன்வைக்கப்படும். அத்துடன், கட்சியின் இளம் தலைவர்களுக்கு முக்கிய பொறுப்புகளும் ஒப்படைக்கப்படும் என்று ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்றுப் பகல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. இச்செய்தியாளர் மாநாட்டில் நாடாளுமன்றத்தில் சுயேச்சையாக இயங்கப்போவதாக அறிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

ரணில் விக்கிரமசிங்க இங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:- (24ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி 18 ஆம் திகதி நியூ யோர்க் செல்கிறார்

### கனடாவில் தமிழ்த் தேசிய அவை எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தும்

கொழும்பு, செப்.15

நியூயோர்க்கில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபை ஆண்டுக் கூட்டத் தொடரில் பங்குபற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இம்மாதம் 18ஆம் திகதி அமெரிக்கா புறப்பட்டுச் செல்கின்றார். ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றவுள்ள ஜனாதிபதி அங்கு ஐந்து நாள்கள் தங்கியிருந்து பல்வேறு கூட்டங்களிலும் வைபவங்களிலும் கலந்து கொள்வார் எனத் தெரிவிக் கப்ப டுகிறது.

இதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வருகையைக் கண்டித்து கனேடியத் தமிழர் தேசிய அவை கனடா, டொரண்டோவில் உள்ள அமெரிக்கத் துணைத் தூதரகத்தின் முன்னாலும் மொன்றியலிலுள்ள அமெரிக்கத் துணைத் தூதரகத்தின் முன்னாலும் நாளைமறுதினம் 17ஆம் திகதி கவன ஈர்ப்புப் பேரணி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமெரிக்காவுக்கு வருகை தந்தால் இலங்கையில் நடைபெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பாக அவரிடம் விசாரணை நடத்த வேண்டும் எனவும் கனேடியத் தமிழர் தேசியப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ-சி)

## யாழ்.வருகின்றார் அமைச்சர் பஸில்; அபிவிருத்தித் திட்டங்களை ஆராய்வதற்கு



யாழ்ப்பாணம், செப்.15

யாழ்.மாவட்ட அபிவிருத்தித்திட்ட மீளாய் வுக் குழுக் கூட்டம் பொரு ளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேச செயலர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்வர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இக்கூட்டத்தில் பங்கேற்பர் என்று கூட்டமைப்பின் வட்டாரங்கள் தெரிவித்தன. (24ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகரசபைத் தலைவருக்கு எதிராக உறுப்பினர்கள் போராட்டம்

### கூட்டமைப்பு எம்.பிக்களின் தலையீட்டால் நிலைமை தணிந்தது

வவுனி, செப். 15

வவுனியா நகரசபைத் தலைவரின் ஜனநாயக விரோத போக்கைக் கண்டிப்பதாகத் தெரிவித்து நேற்று நகரசபையின் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோ நோகராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரின் தலையீட்டை அடுத்து போராட்டம் முடிவுக்கு வந்தது.

வவுனியா நகரசபை மாதாந்தக் கூட்டத்தை தலைவர் நேற்று செவ்வாய்க்கிழமை இடைநிறுத்தியமைக்கு ஆட்சேபித்து, சபை உறுப்பினர்கள் 10 பேரும் கொளுத்தும் வெயிலில் சுமார் இரண்டு மணிநேரம் வாய்களைக் கறுப்புத் துணியினால் கட்டிய வாறு நகரசபை மைதானத்தின் நடுவில் அமர்ந்திருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உப தலைவர் முகுந்தன் உள்ளிட்ட ஐந்து உறுப் (24ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## துயர் பகிர்கின்றோம்

எமது பழைய மாணவர் சங்கத்தின்-உபசெயலாளர்
ஆசிரியை திருமதி விக்டோறியா எல்விஸ் பிறஸ்லி
அவர்களின் அன்புக் கணவர் **எல்விஸ் பிறஸ்லி**

அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/உ.பரப்புலம் மெ.மி.த.க. பாடசாலை,
ஆனைக்கோட்டை.

(571114)

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம்
ஆதனப் பெயர் மாற்றம்
வட்டாரம் 01, குரங்கிலிப்பான் விதி
ஆதன இல. 129

வட்டாரம் 1, குரங்கிலிப்பான் வீதி ஆதன இலக்கம் 129 இல் அமைந்துள்ள ஆதனமானது அப்பாத்துரை தம்பிராசா என்பவரால் அறுதியாக விற்கப்பட்டு சின்னராசா தனபாலனும் பெண் இரஞ்சினிதேவியும் என்பவர்களால் 6936/14.04.2004 ஆம் திகதி எழுதப்பட்ட உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் என்பதை தெரியப்படுத்தி. எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காக பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து சின்னராசா தனபாலன் பெண் இரஞ்சினிதேவி எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் புவியியல்பாட ஆசிரியர்
வி.செந்தூரன்
அவர்களின் பாசமிகு மாமியார்
**திருமதி சற்குணதேவி பரமேஸ்வரன்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஏசியன் கல்வி நிலையம்,
மீசாலை.

(571109)

## சனச வங்கிக் கிளையைநாமல் எம்.பி திறந்துவைப்பார்

கிளிநொச்சி, செப். 15

சனச அபிவிருத்தி வங்கியின் கிளிநொச்சிக்கிளை இன்று புதன்கிழமை காலை திறந்து வைக்கப்படு கின்றது.

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள வங்கிக் கட்டடத்தில் இன்று புதன் கிழமை நடைபெறும் திறப்பு விழா நிகழ்வில் ஜனாதிபதியின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கிளையைத் திறந்து வைப்பார்.

சனச அபிவிருத்தி வங்கியின் தலைவர் கலாநிதி வி.ஏ.கிரிவந்தெனிய தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெறும்.

(த-405)

## கருத்தரங்கு

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளின் தரம் 10, 11 வகுப்புக்களில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடை பெறும்.

(ஒ-207)

## விற்பனைக்கு

CBZ- xtreme ரக, சிவப்பு நிற NPVT-xxxx இலக்கமுடைய, சில நாள்கள் மட்டுமே பயன்படுத் திய மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு : 0783016104

## முக்கிய அறிவித்தல்

இலங்கையின் புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தால் விநியோகம் செய்யப்படும் மணல் விநியோகத்தால் பாதிக்கப்பட்ட லொறி உரிமையாளர்கள் அனைவரும் நீதியும், நிவாரணமும் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தங்களை நிரூபிக்கும் ஆவணங்களுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தொடர்புகளுக்கு :
க.நா.சச்சிதானந்தன்,
இராகுலசூரியன்,
சந்திரசபா,
தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை.
தொ.பே. : 0213214922




Keep your fingers on the pulse of the Stock Market

• Securities Trading • Internet Trading
• Margin Trading • Technical Analysis
• Corporate Finance • Equity Research

capitaltrust
Capital TRUST Securities (Pvt) Ltd.
42, Mohammed Macan Markar Mawatha,
Colombo 03, Sri Lanka.
Tel: (011)5335225 Fax: (011)5365725

Our branches:
Kandy; Negombo;
Matara; Kurunegala;
Kalutara; Jaffna

பதவி வெற்றிடம்
Investment Advisor
Jaffna Branch

Capital Trust Securities
பங்குச்சந்தை வருமானம் மற்றும் வலையமைப்பு அடிப்படையில் இலங்கையில் முதலிடத்தில் திகழும் பங்குத்தரகர் நிறுவனமாகும்.
எமது நிறுவனத்தின் தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் துரித வாடிக்கையாளர் பெருக்கம் காரணமாக, இலட்சிய நோக்குடைய பட்டதாரிகள் தேவைப்படுகின்றனர்.

எதிர்பார்க்கும் தகைமைகள்:
★ CIMA\ ACCA\ ICASL\ கற்கைநெறிகளை தொடர்பவர்கள் அல்லது
★ முகாமைத்துவ/ நிதியியல்/ கணக்கியல்/ சந்தைப்படுத்தல் பட்டதாரிகள்.

பொறுப்புக்கள்
★ நேர்த்தியான வாடிக்கையாளர் உறவுகளைப் பேணுதல்
★ புதிய வர்த்தக தொடர்புகளை நாடுதல்
★ பங்குச்சந்தை நிலவரங்களை ஆராய்தல்

தெரிவு செய்யப்பட்டவருக்கு தகைமை மற்றும் அனுபவ அடிப்படையில் தகுந்த சம்பளமும் வேலை முன்னகர்வு வாய்ப்புக்களும் காத்திருக்கின்றன.
இப்பதவிக்கு தகைமை உடையவர்கள் 16.09.2010 (வியாழக்கிழமை) அன்று மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரையிலான காலப்பகுதிக்குள் உங்கள் முழு சுயவிபரக்கோவையுடன் கீழ்காணும் முகவரிக்கு சமுகமளிக்கவும்.
Capital Trust Securities - Jaffna Branch Office, Colombo Stock Exchange
Jaffna Branch:
398/1 Hospital Road (1st Floor), Jaffna.


## மரண அறிவித்தல்கள்

### அருணாசலம் தம்பையா கணேசன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் தம்பையா கணேசன் நேற்று (14.09.2010) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - இராசமணி தம்பதியரின் மகனும் கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - இலட்சுமி தம்பதியரின் மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் உதயஜோதி, உதயகுமார், உதயரூபன் (ஆசிரியர், யா/வல்வெட்டி, சிதம்பரா கல்லூரி) உதயபாலன் (France) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகநாதன், விஜயகுமாரி, நிர்மலா, கடம்பரூபி (France) ஆகியோரின் மாமனாரும் ஜோகப்பிரசாத் (France), விஷ்ணுப்பிரியன், மோகனப்பிரியான், கௌதமப்பிரியன், ஹம்சப்பிரியா, கோகுலப்பிரியா, லதுஷோபன், நம்ரிதா, சஜீகன் (France) ஆகியோரின் பேரனும் பத்மாவதி (Canada), காலஞ்சென்ற ராமச்சந்திரன் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், செல்லம், பரமேஸ்வரி, மகேஸ்வரி, செல்வராஜா மற்றும் ராஜேஸ்வரி, ரத்னேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2010) புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கோகுலம்",
சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.
0213001086

தகவல் :
குடும்பத்தினர்.
க.உதயகுமார்,
க.உதயரூபன் (மகன்மார்).

(103344)

### திருமதி வேலும்மயிலும் இராஜேஸ்வரி

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலும்மயிலும் இராஜேஸ்வரி நேற்று (14.09.2010) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் திருமதி பரமேஸ்வரி (வியாபாரி, சங்கானை) தம்பதியரின் பாசமிகு மகளும் வேலும்மயிலும்மின் அன்பு மனைவியும் கஜனி (மானிப்பாய் மகளிர் கல்லூரி A/L கலைப்பிரிவு), தனுசியன் (மானிப்பாய் இந்துக்கல்லூரி தரம் 8), தனுசியா ஆகியோரின் அன்புத் தாயாரும் முருகானந்தன் (தாசன்), பவானந்தன் (AB சவுண்ஸ், துரை), சிவானந்தன், யோகேஸ்வரி, புவனேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய்
குடியேற்றத்திட்டம்,
கட்டுடை.

தகவல் :
சகோதரன் பவானந்தன்
(துரை).

(சி/571118)

வாழ்க வையகம் குருவேதுணை வாழ்க வளமுடன்



## முழுமைநல வாழ்விற்காக மனவளக்கலை

தத்துவஞானி வேதாத்ரி மகரிஷி அவர்களினால் 40 ஆண்டுகால ஆராய்ச்சியின் பின் அறிமுகப்படுத்தப்பட்ட மனவளக்கலைப் பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 18.09.2010 தொடக்கம் 22.09.2010 வரை 5 நாள்கள் பகுதிபகுதியாக நடைபெறவுள்ளது. இப்பயிற்சியின் மூலம் பயன்பெற்ற பலரின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்ப்பாணம், சாவகச்சேரி போன்ற இடங்களில் இப்பயிற்சிகள் வழங்கத்திட்டமிடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

உடல், உயிர், மனம், அறிவு மற்றும் சமுதாய வாழ்க்கைக்கு ஆற்றலையும் வளத்தையும் அமைதியையும் அளிப்பதோடு பல்வேறு நோய்களுக்கும் மருந்தாக அமையும். இப்பயிற்சிகளை இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் மூத்த பேராசிரியர் அருள்நிதி M.லோகநாதன் (தமிழ்நாடு) அவர்கள் வழங்கவுள்ளார்.

எளியமுறை உடற்பயிற்சி, தியானம், காயகல்பப்பம் போன்ற பயிற்சிகள் யாழ். மண்ணில் நீண்டகாலத்திற்குப் பின்னர் அறிமுகப்படுத்தப்படுகின்றது. பயிற்சிகள் நடைபெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

உங்கள் பதிவுகளுக்குக் கீழ்க்காணும் முகவரிகளோடு தொடர்புகொள்ளுங்கள்.

இல. 175, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கங்கள் : 0217390190
0712208808
0213214341
0778010491

இலங்கை மனவளக் கலைமன்றம்,
யாழ்ப்பாணம்.

(சி/571101)

## காலநிலை தொடரும்

யாழ்ப்பாணம், செப்.15

யாழ்.குடாநாட்டில் இன்று மப்பும் மந்தாரமுமான காலநிலையே நிலவும் என்றும் தற்போது நிலவும் அசாதாரணமான காலநிலை இன்னும் சில தினங்களுக்குத் தொடரும் என்றும் யாழ்ப்பாணம் திருநெல்வேலி வளிமண்டலத் திணைக்களப் பொறுப்பதிகாரி எஸ்.புஸ்பநாதன் தெரிவித்தார்.

மேலும் நேற்றைய தினம் 30 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது.

இதேவேளை ஒகஸ்ட் மாதம் 127.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பெறப்பட்டுள்ளது என்றும் இது கடந்த ஒகஸ்ட் மாத மழை வீழ்ச்சியிலும் பார்க்க மிக அதிகமாகும் என்றும் கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் 41.1மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியே பதிவாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-322)


Quick Learning Course
Spoken English with Grammar

Duration 1 Month Rs.2000.00

உரையாடட் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற் கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்

திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special

20-09-2010 & 23-09-2010
Batch-1 08.30am-10.30am & 11.00am - 01.00pm
Batch-2 01.30pm-03.30pm & 03.45pm-05.45pm

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road,
Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel பேக்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அரசின் உடனடி நடவடிக்கை தேவை

ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையை ஏழாம் ஆண்டுக்கு மாற்றுவது உகந்தது.

இப்போதைய ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்கள் பத்து வயதில் தோற்றுகிறார்கள். அதனால் அவர்களில் மிகப் பலருக்கு உளவியல் தாக்கங் களும் உடல் ஆரோக்கியம் குன்றுதலும் அபரிமிதமாகக் காணப்படுகின்றன. பத்து வயதில் அவர்களது மூளைக்கும் உடலுக்கும் அதிகமான பளுவையும் களைப்பையும் உண்டாக்குவதாக ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சை அமைகிறது. அந்தப் பரீட்சையை அவர்கள் பன்னிரண்டு வயதாக இருக்கும் போது நடத்துவது இப்போதைய பாதிப்புகளை வெகுவாகக் குறைக்கும்; இல்லாமற் செய்யும்.

இவ்வாறு வைத்திய நிபுணர் குழு ஒன்று கல்வி அமைச்சருக்கும், கல்வி அமைச்சுக்கும் சிபார்சு செய்துள்ளது. இந்த வைத்திய நிபுணர்கள் குழுவில் நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் பிரசன்ன குணசேன தலைமையில் குழந்தை வைத்திய நிபுணர்கள் இருவர் மற்றும் கண் வைத்திய நிபுணர் ஒருவர் அங்கம் வகிக்கின்றனர்.

ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மட்டுமன்றி, ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை மற்றும் ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிக்கப்படுவதாக வைத்திய நிபுணர் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

மேற் குறிப்பிட்ட மூன்று பொதுப் பரீட்சைகளுக்கும் தோற்றும் மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் மற்றும் ஆராய்ச்சிகளில் இருந்து பரீட்சைக் காலங்களில் இவர்கள் மத்தியில் மனப்பாதிப்பும் உடல் நலக் குறைவும் அதிகரித்திருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக வைத்திய நிபுணர்கள் கூறுகிறார்கள்.

சம்பந்தப்பட்ட மூன்று பரீட்சைகளுக்குரிய பாடவிதானங்களையும், வினாப்பத்திரங்களின் தரங்களின் தன்மைகளையும் ஆராய்ந்து பார்க்கும்போது, சம்பந்தப்பட்ட மாணவர்களின் உளநலமும் உடல் நலமும் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இதனையும் ஆராய்ச்சிகள் மற்றும் மதிப்பீடுகள் மூலம் கண்டறிந்ததாக வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட மூன்று பரீட்சைகளுக்கும் வினாத்தாள் தயாரிப்பவர்களுடன் கலந்தாலோசனை நடத்தி புதிய மாற்றங்களைக் கொண்டு வருவது குறித்து விவரமாக ஆராய்வதற்கு விசேட குழு ஒன்றை நியமிப்பது நல்லது. மாணவர்கள் மீதான இப்போதைய உளநலம், உடல் நலம் சம்பந்தப்பட்ட பாதிப்புக்களைக் குறைக்க பரீட்சை வினாத்தாள்களை மாற்றுவது குறித்து அவர்களுடன் கலந்துரையாட வேண்டும் என்றும் வைத்திய நிபுணர்கள் குழு கல்வி அமைச்சின் உயர்பீடத்திற்குச் சிபார்சு செய்திருக்கிறது.

ஜி.சீ.ஈ. சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சைக்குரிய இப்போதைய வினாத்தாள்கள் உலகளாவிய ரீதியில் நடத்தப்படும் லண்டன் பரீட்சை வினாத்தாள்களை விடக் கூடிய தரமுள்ளவை என்றும் வைத்திய நிபுணர் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டின் எதிர்காலப் பிரசைகளான மாணவர்களின் கல்வி, கல்வி வளர்ச்சி என்பன ஒவ்வொரு பெற்றோருக்கும் சமூகத்துக்கும் நாட்டுக்கும் முக்கியத்திலும் முக்கியம். இன்னொரு விதமாகச் சொல்வதானால் மேற்குறிப்பிட்ட மூன்று தரப்புகளின் முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் அவை அத்திபாரமாக அமைவதால் வைத்திய நிபுணர்களின் குறிப்பிட்ட கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்படுவதும் நடைமுறைப்படுத்தப்படுவதும் இன்றியமையாதவை.

வைத்திய நிபுணர்கள் குழு ஆராய்ச்சி மற்றும் பாதிக்கப்பட்ட மாணவர் மீதான வைத்திய பரிசோதனைகளின் பெறுபேறுகளை அடிப்படையாக வைத்து வெளியிட்டிருக்கும் சிபார்சு அல்லது கருத்து அனுபவ ரீதியாகவும் சரியானது. மாண்வர்கள், பெற்றோர்கள், சமூக ஆர்வலர்கள் இவற்றை ஏற்கனவே அனுபவ ரீதியாகக் கண்டறிந்தவர்கள்.

தனது பிள்ளை பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று முன்னணிக்கு வரவேண்டும் என்று பெற்றோர் விரும்புவது தவறல்ல; இயற்கையே. அதன் பொருட்டு மாணவனின் உளநலமும் உடல் நலமும் பாதிக்கப்படும் அளவுக்கு அதிக மன அழுத்தத்தையும், உடல் நலக் கெடுதியையும் உண்டாக்கும் வகையில் கல்வியைக் காட்டி நெருக்கீடுகளைக் கொடுத்தால் அது பிள்ளைக்கும் கெடுதி; பெற்றோருக்கும் கெடுதி, நாட்டு வளர்ச்சிக்கும் கெடுதியானது.

பரீட்சை எழுதியவர்கள் அதிசிறப்பு, சிறப்புத்தரமுள்ள பெறுபேறுகளை அடைந்தால் தமது சமூக மதிப்பு உயரும் என்ற பகட்டுக்காக, பரீட்சைக்கு முன்னர் பல பெற்றோர் தமது பிள்ளைகள் - மாணவர்கள் - மீது கொள்ளளவுக்கு அதிகமாகவும் திணிக்கப் பாடுபடுவது இப்போது 'கல்வி நாகரிகம்' ஆகிவிட்டது. இந்தப் போலித்தனத்தாலும் மாணவர்களின் - தமது பிள்ளைகளின் - உடல், உள நலன்கள் பாதிப்படையும். அதன் விளைவு அவர்களது எதிர்காலத்தை எல்லா வழிகளிலும் எல்லா வகைகளாலும் நாசமாக்கும் என்பதனை போலித்தனத்தில் 'போதை' கொண்ட பெற்றோர்கள் தவிர்ப்பது அவசியம். மாணவர் கல்வி குறித்து வைத்திய நிபுணர்களின் ஆராய்ச்சிகளும் வைத்திய பரீட்சைகளும் வெளிப்படுத்திய பாதகங்களை மனதில் கொண்டு ஆசிரியர்களும் தமது கல்விப் போதனையைச் சமநிலையில் ஆற்ற வேண்டும்.

மொத்தத்தில் கல்வி அமைச்சு, அரசாங்கம் ஆகியன இதுகுறித்து உடனடிக் கவனம் செலுத்துவது இன்றியமையாதது. மாணவர்களையும், சமூகத்தையும் அவர்கள் வழியாக நாட்டையும் பரீட்சைகள் குட்டிச்சுவராக்க இடம் தராது கண்காணித்துக்கொள்வது முக்கியம். ஆரோக்கியம் குன்றிய, நலிந்த மாணவர் சமூகத்தை, எதிர்கால சந்ததியினரை உருவாக்காது இருக்க உணர்வு பூர்வமாக விரைந்து செயலில் இறங்கவேண்டும்.

---

தமிழருக்கான அரசியல் தீர்வுப் பொதி

# ஜனாதிபதியின் அவசரமின்மை குறித்து இந்தியாவுக்கு மகிழ்ச்சி இல்லை

## அரசியல் விமர்சகர் ஹரிஹரன் கருத்து

கொழும்பு, செப் 15

ஜனாதிபதி ராஜபக்ஷ தீர்மானிக்கும் சமயத்தில்தான் தமிழருக்கான தீர்வு பொதி வழங்கப்படுவதாய் இருக்கும். இதில் அவர் அவசரப்படுவதாகத் தெரியவில்லை. அதனால் இந்தியாவுக்கு மகிழ்ச்சியில்லை. அண்மையில் இந்திய வெளியுறவு செயலாளர் நிருபமா ராவ் வெளியிட்டிருந்த கருத்தும் இதனை உறுதிப்படுத்துகின்றது.

இவ்வாறு முன்னாள் இந்திய அமைச்சரவைச் செயலாளரும் தற்போது சென்னையிலுள்ள சீனவிவகாரங்களுக்கான ஆய்வு மையத்தைச் சேர்ந்தவரும் நவகால விடயங்கள் தொடர்பான ஆய்வுமையத்தின் பணிப்பாளருமான கேணல் ஆர். ஹரிஹரன் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளார். கேணல் ஹரிஹரன் தமது கட்டுரையில் மேலும் தெரிவித்துள்ள சில கருத்துக்கள் வருமாறு:

குறிப்பாக சொல்வதானால் அரசமைப்பு மாற்றங்கள் ஆவன இலங்கையின் உள் விவகாரங்கள் தொடர்பான கட்டமைப்பு ஏற்பாடாகும். எதுவானாலும் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மேலும் விஸ்தரிக்கப்படுவதும் எதிர்வரும் 10, 15 ஆண்டு காலத்தில் அவை மேலும் இறுக்கம் பெறுவதும் இந்தியாவுக்கு விசேட அக்கறையுள்ள விடயங்களாகும். ஜனாதிபதி ராஜபக்ஷ பதவியில் உறுதியாக அமர்ந்து கொண்டு விட்டார். முன் எப்போதையும் விட எதிர்க்கட்சிகள் பலவீன மடைந்துள்ளதுடன் பிரிந்து கிடக்கின்றன. அவரது ஆட்சிமுறையின் அதிகாரத் தன்மை இனிவரும் பதவிகாலத் தில் மாறும் என்று கூறமுடியாது. தமது நோக்கங்களை அடைவதற்காக தமது நீண்ட கால திட்டங்களை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரமும் கால அவகாசமும் இருக்கின்றன. இந்த வசதிகள் இந்திய பிரதம மந்திரிக்குக் கிடையாது. எனவே இலங்கையின் நீண்ட காலக் கொள்கைக்கேற்ப இந்தியா சில உறுதியான தன்மைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டியிருக்கும்.

இது முக்கியத்துவம் பெறுகின்றது ஏனென்றால் தென்னாசியா மற்றும் இந்திய பெருங்கடல் பகுதியில் சீனா தன் கால் பதித்தலை இறுக்கமாக்கி வருகின்றது. அத்துடன் இலங்கையுடனான பாதுகாப்பு கால்பதித்தலை இந்தியா உறுதியாக்கிக் கொள்வதும் அவசியமாகின்றது. அத்துடன் தடைகளை நீக்கி வர்த்தக உறவுகளையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழருக்கான அரசியல் தீர்வு ஜனாதிபதி இருக்கும் நிலையில் தமிழருக்கான அரசியல் தீர்வுப் பொதியானது அவர் விரும்பும் போதும் தீர்மானிக்கும் போதும் தான் வழங்கப்படுவதாய் இருக்கும். இதைச் செய்வதற்கு அவர் அவசரப் படுவதாகத் தெரியவில்லை. இதில் இந்தியா மகிழ்ச்சி அடைந்திருப்பதாக தெரியவில்லை. அண்மையில் இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் வெளியிட்டுள்ள கருத்தில் இது தெரியவந்துள்ளது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த திருமதி ராவ் கூறியிருந்ததாவது:

அவர் (ராஜபக்ஷ) அடிக்கடி கூறியிருக்கிறார் தமது கவனத்தை அதன் தேவை (அரசியல் தீர்வு) குறித்து திருப்பியிருப்பதாக. அதன் மீது செயற்பட திட்டமிட்டு வருவதாக. அவரது பார்வையை இப்போது அதன்மீது திருப்பியிருப்பதாக. இந்த விடயம் பொருளாதார மற்றும் விஸ்தரிப்பு விடயங்கள் மீது கவனம் செலுத்துவதை விட முக்கியமானதாகும். அவைகளுக்கு அப்பால் பார்க்க வேண்டிய விடயம். நாங்கள் அதனை எவ்வாறு நோக்குகிறோம் என்பதை அரசாங்கத்தில் உள்ள எல்லோருமே உணர்ந்திருக்கிறார்கள். அந்த வகையில் இந்தியா எவ்வாறு அணுகுகின்றது அல்லது இந்தப் பிரச்சினையைப் பார்க்கிறது என்பதை அவர்கள் அறிவார்கள் என்று தெரிவித்திருந்தார்.

தமிழ்நாட்டின் தேர்தல் ஜுரம் சூடு பிடிக்கும் போது இந்த விடயம் இன்னும் தீவிரம் அடையும். இந்த விடயம் இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இலங்கைக்கு ஒக்ரோபரில் விஜயம் செய்யும் போது விவாதிக்கப்படவிருக்கிறது.

அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றத்தில் நினைவேற்றப்பட்டதை அமெரிக்கா கண்டித்திருக்கின்றது. இது ஜனநாயகத்தை தரம் குறைக்கின்றது என்று அமெரிக்கா கூறியுள்ளது. ஏனைய மேற்கு நாடுகளும் இதே விதக் கருத்தினையே கொண்டிருக்கக் கூடும். எனவே மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பான குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக புதிய எதிர் செயற்பாடுகளை சர்வதேச மட்டத்தில் இலங்கை எதிர்கொள்ளவேண்டி ஏற்படலாம். மனித உரிமை மீறல் தொடர்பான தனது நிலைப்பாட்டை சர்வதேசக் கருத்துக்களுக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளப்போவதில்லை என்று அண்மையில் இலங்கை வெளியுறவு அமைச்சர் கூறியிருந்த கருத்து இதை மேலும் தூண்டுவதாக இருக்கலாம்.

**இந்தியாவின் ஆதரவு தேவை**

எனவே முன்பு எப்போதையும் விட சர்வதேச மன்றங்களில் இந்தியாவின் ஆதரவு இலங்கைக்குத் தேவைப்படுகின்றது. சர்வதேச மட்டத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார சங்கடங்களை சமாளிக்க இந்தியாவின் பொருளாதார ஆதரவு இலங்கைக்குத் தேவைப்படலாம். பொருளாதார உதவி, முதலீடுகள், மீள்கட்டுமானத்துக்கான நிதியுதவியுடன் பொருளாதார அபிவிருத்திக்கான உதவிகளும் தேவைப்படலாம்.

எனவே, ஜனாதிபதி ராஜபக்ஷவின் அழுத்தமான நிலைப்பாட்டினை எதிர்கொண்டு சமாளிப்பதற்கு சிறப்பானதொரு உபாயத்தை இந்தியா உருவாக்கிக் கொள்ளவேண்டியிருக்கும். இவ்வாறு அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

(நன்றி: 'டெய்லி மிரர்')

---

# 'நிக்கொட்' நிறுவனத்தின் யாழ்., மன்னார் அலுவலகங்களுக்கு விரைவில் மூடுவிழா

யாழ்ப்பாணம், செப். 15

'நிக்கொட்' நிறுவனத்தின் யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களின் அலுவலகங்கள் மூடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உத்தரவின்பேரிலே இந்த இரண்டு அலுவலகங்களும் மூடப்படுவதாக 'நிக்கொட்' நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 2002 ஆம் ஆண்டுமுதல் 'நிக்கொட்' நிறுவனத்தின் யாழ்.அலுவலகம் யாழ்.மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டுவந்தது.

யாழ்ப்பாணத்தில் மட்டும் 3 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் 234 திட்டங்களை அது மேற்கொண்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த மாதம் 30 ஆம் திகதி முதல் 'நிக்கொட்' நிறுவனத்தின் யாழ்.அலுவலகத்தை மூடுமாறும் அதன் ஊடாக மேற் கொள்ளப்படுகின்ற பணிகள் யாவும் நிறுத்தப்படவேண்டுமெனவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இதனால் அங்கு கடமையாற்றிய இரண்டு சாரதிகள், இரண்டு சிற்றூழியர்கள் ஆறு முகாமைத்துவ உதவியாளர்கள், கணக்காளர் ஒருவர், உதவித் திட்டப் பணிப்பாளர் ஒருவர் என 12 பேர் தமது வேலைகளை இழக்க நேரிட்டுள்ளது

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறிய 22 ஆயிரம் குடும்பங்களுக்கு வாழ்வாதார கொடுப்பனவாக தலா 25 ஆயிரம் ரூபாவினை 'நிக்கொட்' நிறுவனத்தின் யாழ். அலுவலகம் வழங்கியிருத்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை -

'நிக்கொட்' நிறுவனத்தின் மன்னார் அலுவலகம் கடந்த ஆறு வருடங்களாக பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

அது மூடப்படுவதால் அங்கு பணிபுரிகின்ற எட்டு உத்தியோகத்தர்கள் தமது வேலையை இழக்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் - என்றும் தெரியவருகின்றது. (த-9)

---

# ஏ-9 வீதியூடாகப் பயணிப்பவர்களுக்கு இடையில் எந்த விசாரணையும் இல்லை

## அரச பேருந்துகளில் படையினர் துண்டுப்பிரசுரம்

யாழ்ப்பாணம், செப்.15

ஏ-9 நெடுஞ்சாலை வீதியூடாக யாழ்.மாவட்டத்தில் இருந்து பேருந்தில் பயணம் செய்பவர்கள் விசாரணை என்ற பெயரில் இறக்கப்படுவதற்கு தாம் அனுமதி வழங்கவில்லை என பாதுகாப்புப் பிரிவினர் துண்டுப் பிரசுரங்கள் மூலம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு பயணம் செய்பவர்களை எவராவது விசாரணை என்ற பெயரால் இடையில் இறக்குவதற்கு முயற்சிசெய்தால் அது பற்றி உடனடியாக ராணுவத்தினருக்கு தெரியப்படுத்துமாறும் அந்தத் துண்டுப் பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் அச்சிடப்பட்ட இந்தத் துண்டுப் பிரசுரங்கள் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகளின் உள் கண்ணாடிகளில் ஒட்டப்பட்டுள்ளன.

இவ்வாறான சம்பவங்கள நிகழ்ந்தால் உடனடியாக 56 ஆவது படைப் பிரிவு, 561 ஆவது பிரிக்கேட் மற்றும் ஓமந்தை ராணுவ முகாம் போன்றவற்றிற்கு அறிவிக்கலாம் என்று உள்ளதுடன் மேற்படி ராணுவ முகாம்களின் தொலைபேசி இலக்கங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. சி.ஐ.டி. என்று கூறியாராவது யாரையாவது இடையில் இறக்க முயற்சிசெய்தால் அருகில் உள்ள ராணுவமுகாம் அல்லது பொலிஸ் நிலையத்தில் பாரம் கொடுப்பது சாரதி மற்றும் நடத்துநர்களின் கடமை என்றும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஓமந்தையில் உள்ள ராணுவத்தினரே இந்தத் துண்டுப்பிரசுரங்களை பேருந்தில் ஒட்டுமாறு சாரதி மற்றும் நடத்துநரிடம் வழங்கியதாகவும் தமக்கு இது உத்தியோகபூர்வமான நிலையில் அறிவிக்கப்படவில்லை எனவும் போக்குவரத்துச் சபையின் யாழ். சாலையினர் தெரிவித்தனர். இது குறித்து பயணிகளிடையே அச்ச நிலை தோன்றியுள்ளதையும் அவதானிக்க முடிவதாகவும் கூறப்படுகின்றது. (க)

---

## நாளை

ஆவணி 31 16.09.2010
வியாழக்கிழமை
திதி: : நவமி
பி.இ.05.11 வரை
நட்சத்திரம் : மூலம்
மு.இ.09.19 வரை
[illegible] 07.33-09.03 வரை
[illegible] : 01.33-03.03 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு RENT

திருநெல்வேலி மருத்துவ பீடத்திற்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்ட ஐந்து அறைகள் (ஏசியுடன்), இரண்டு ஹோல், பத்து வாகனம் விடக்கூடிய தரிப்பிடம் வாடகைக்கு உண்டு. (நிறுவனங்களுக்கு மட்டும் விரும்பத்தக்கது)

தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்:

0771909253, 0772294985, 0778791917, 021 4590983, 021 4920223, 0773228704


## அறிவித்தல்

### மாவட்ட நீதிமன்றம் - யாழ்ப்பாணம்

கதிரவேலு கதிர்காமநாதன்
சாவகச்சேரி வீதி, புத்தூர் கிழக்கு, புத்தூர்.
வழக்காளி

வழக்கு.இல.மணநீக்கம்/891

எதிராக:-
கதிர்காமநாதன் பெண் பரமநாயகி
(சுப்பிரமணியம் மகள்)
கல்வளை வீதி, சண்டிலிப்பாய்.
எதிராளி

மேற்படி எதிராளியான கதிர்காமநாதன் பெண் பரமநாயகியிடம் இருந்து மணநீக்கம் பெறுவதற்காக இவ்வழக்காளியினால் மன்றில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி எதிராளி மேற்காட்டிய விலாசத்தில் இல்லை என அறிக்கை செய்யப்பட்டுள்ள காரணத்தினால் இந்த மணநீக்கத்தை இம்மன்று ஏன் அனுமதிக்கக்கூடாது என்பதற்குக் காரணம் ஏதும் இருப்பின் எதிராளி, அல்லது அக்கறை உள்ள எவரும் 2010.09.30ஆம் திகதி இம்மன்றில் தோன்றிக் காரணம் காட்டுமாறு பணிக்கப்படுகிறீர்கள்.

நீதிமன்றின் கட்டளைப்படி-

வரைவு
சி.வீரகத்திப்பிள்ளை L.L.B (103338) பதிவாளர்.


## தேவை

புறொயிலர், ஊர்ச்சேவல், ஊர்ப்பேடு, கல்பேட், விறாத்துக்குஞ்சுகள் என்பன கொள்வனவு செய்யப்படும்.
158/4, தாசன் பாம்,
கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 9733513

## கணனிகள் விற்பனைக்கு

புதிய, பழைய மடி கணனிகள் (Laptop) விற்பனைக்குண்டு.
தொடர்பு: - 0714624900

## விற்பனைக்கு உண்டு

கடைக்குரிய 30 அடி இறாக்கைகளும், மேசையும் விற்பனைக்குண்டு. தொடர்பு:
198, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (சலூன் முன்பாக)
தொ.பே.: 0774404231, 0774685157

## வேலை ஆள் தேவை

பண்ணை ஒன்றில் வேலை செய்வதற்கு லான்ட் மாஸ்ரர் ஓட்டக்கூடியவர் தேவை. வயதெல்லை தேவையில்லை. விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்:
077 3249872 / 021 3218461


### வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம் (வ/து)

பிரதான வீதி, கிளிநொச்சி.

### கட்டடத் திருத்தத்திற்கான கேள்வி அறிவித்தல்

எமது நிறுவனத்தின் 60 அடி நீளமும் 16.9 அடி அகலமும் கொண்ட ஒரு மாடிக் கட்டடத்தைத் திருத்தம் செய்ய வேண்டியுள்ளதால் கேள்வி அறிவித்தல் கோரப்படுகின்றது. இக்கட்டடத்தைத் திருத்தம் செய்ய விரும்புவோர் இதற்கான விண்ணப்பப்படிவத்தை எமது அலுவலகத்தில் கடமை நேரத்தில் பெற்று (காலை 8 -மாலை 4.30) பூர்த்தி செய்து 25.09.2010 திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வண்ணம்,
கூட்.சேவையிலுள்ள,
**சோ.திலகராஜ்**
பொது முகாமையாளர்,
வடமாகாண ப.தெ.வ.அ.கூ.நி.பேரிணையம்,
கிளிநொச்சி.


கிளிநொச்சியில் !

யாழ்.நகரில் நீண்டகாலமாக வைத்திய சேவை செய்து மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றிருக்கும்


## சம்பந்தர் மொடேன் வைத்திய நிலையம்

கிளிநொச்சி கச்சேரி முன்பாக்
நாளை (16.09.2010) வியாழன் காலை 8.30 மணி முதல் தனது சேவையை ஆரம்பிக்கின்றது.

நிர்வாகம்.


## மரண அறிவித்தல்

### *பொன்னையா சுந்தரலிங்கம் (ஐயா)*



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சுந்தரலிங்கம் கடந்த (11.09.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2010) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் ஒரு மணியளவில் கோப்பாய் கந்தன்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேம்படி, கோப்பாய் மத்தி,*
*கோப்பாய். 0770200735*

தகவல்:
குடும்பத்தினர்.

## அறிவித்தல்

### மானிப்பாய் கிராம உப அலுவலகம்

ஆதனப் பெயர் மாற்றம்
வட்டாரம் 04
சுதுமலை வீதி
ஆதன இல.47

வட்டாரம் 04, சுதுமலை வீதி, ஆதன இலக்கம் 47 இல் அமைந்துள்ள ஆதனமானது இராமர் கிருஸ்ணகுமார் என்பவரால் சீதனமாக வழங்கப்பட்டு சிவகுமார் பெண் சுகீதா என்பவர்களால் 12002/05.05.2010ஆம் திகதி எழுதப்பட்ட உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி, எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காக பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து சிவகுமார் பெண் சுகீதா எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

செயலாளர்.
(103328) வலி.தென்மேற்குப் பிரதேச சபை. மானிப்பாய்.

# மரண அறிவித்தல்



## நாதஸ்வர வித்துவான்

# நல்லரசு இராஜேஸ்வரன்

## [இராசன்]

**நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நல்லரசு இராஜேஸ்வரன் நேற்று (14.09.2010) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.**

**அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லரசு - இராசாம்பாள் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பிச்சையப்பா - சறோஜா தம்பதியரின் மருமகனும், பிறேமராணியின் பாசமிகு கணவரும், பிரியதர்சினி, இராஜதர்சன் (நாதஸ்வரம்), சப்தஸ்வரன், தணிகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகிந்தன், மாதங்கி ஆகியோரின் அன்பு மாமனும், காருண்யன், அக்ஷயா, சுபீக்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2010) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**259, சங்கிலியன் தோப்பு, நல்லூர்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(103342)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எம்.ஐ கிறீன்' புதிய மிளகாய் இனம் யாழ். விவசாயிகளுக்கு விரைவில் அறிமுகம்

யாழ்ப்பாணம்,செப்.15

திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையம் அண்மையில் ஆராய்ச்சி செய்த எம்.ஐ கிறீன் (MI Green) எனப்படும் புதிய மிளகாய் இனத்தை யாழ்.விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தவுள்ளதாக யாழ்.விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி திருமதி செ.விஜயரட்ணம் தெரிவித்தார்.

இந்த இனம் விவசாயிகளால் விரும்பிப் பயிரிடக்கூடியது எனவும், நன்கு செழிப்பாகவும் அடர்த்தியாகவும் வளரும் இயல்புடைய இதன் காய் 10 சென்ரி மீற்றர் நீளமும் 3 சென்ரி மீற்றர் சுற்றளவும் கொண்டது எனவும், இதன் தோற்ற அமைவு விவசாயிகள் நுகர்வோரைக் கவரக்கூடியது எனவும் அவர் கூறினார்.



எம்.ஐ - 2, கே.ஏ. 2 ஆகிய இனங்களுடன் ஒப்பிடும்போது இதில் இலைச்சுருள் நோய், பனிப்பூச்சி, சிற்றுண்ணித் தாக்கம் என்பன குறைவாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது எனவும், பரீட்சார்த்தமாக இதை உஷ்ண வலயமான யாழ்ப்பாணத்தில் செய்கை பண்ணியபோது இதன் சிறப்பம்சம் உணரப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தற்சமயம் 500 மீற்றர் சதுர நிலப்பரப்பில் இது உற்பத்தி செய்யப்படுவதாகவும், சிறிய அளவிலே இதன் விதைகளை விவசாயிகளுக்கு வழங்கக்கூடியதாக உள்ளதால் விதை உற்பத்தித்திட்ட நிறுவனங்கள் அடிப்படை விதைகளைப் பயன்படுத்தி கூடுதல் விதை உற்பத்திகளே மேற்கொள்ள முடியும் எனவும் திருமதி விஜயரட்ணம் தெரிவித்தார். (த-7)

## பராமரிப்பு வேலைகளுக்காக நாளையும் சனியும் மின்தடை

யாழ்ப்பாணம்,செப்.15

பராமரிப்பு வேலைகள் காரணமாக நாளை வியாழக்கிழமையும் எதிர்வரும் சனிக்கிழமையும் பின்வரும் இடங்களில் காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை மின்தடை அமுலில் இருக்குமென இலங்கை மின்சாரசபையின் யாழ்.பிரதேச அலுவலக வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது;

உயர் அழுத்த மின் மார்க்கங்களில் பராமரிப்பு வேலை காரணமாக சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப் பகுதி என்பவற்றில் நாளை வியாழக்கிழமையும்,

உரும்பிராய், கோண்டாவில் மருத்துவப் பீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப் பகுதி, நீங்கலாக யாழ். மாநகரசபைப் பகுதி என்பவற்றில் எதிர்வரும் சனிக்கிழமையும் மின்தடை அமுலில் இருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை இன்று மின்தடை அமுலில் இருக்கமாட்டாது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய உதயனின் இன்று மின்தடை அமுலில் இருக்குமெனத் தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. (த-16)




## பிரதேச செயலகங்கள் தோறும் ஓய்வூதிய நம்பிக்கை நிதியம்

நாவற்குழி,செப்.15

அரசாங்க ஓய்வூதியத் திணைக்களம் யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகப் பிரிவுகள் தோறும் பகிரங்க சேவைகள் ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தைச் செயற்படுத்தி வருகிறது.

ஓய்வூதியர்களின் அந்தஸ்து மற்றும் மதிப்பைப் பேணிப் பாதுகாக்கவும், நலன்களை உயர்த்தவும் 1999ஆம் ஆண்டு 40 ஆம் இலக்க நாடாளுமன்ற நிதியச் சட்டத்தின் மூலம் இந்நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஓய்வூதியர் எவரும் 20 ரூபா செலுத்தி அங்கத்தவராகச் சேர முடியும்.

இறப்பு மானியக் கொடுப்பனவு, அரச வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றால் சகாயக் கொடுப்பனவு, விழி வெண்படலம் நீக்கும் சத்திர சிகிச்சைக்கான மானியக் கொடுப்பனவு, அங்கத்தவரின் ஒரு பிள்ளை பல்கலைக்கழகத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டால் புலமைப் பரிசில்கள் போன்ற நன்மைகளைப் பெறமுடியும்.

அரசசேவை ஓய்வூதியர்களின் பொறுப்பு நிதியத்தின் விசேட மரண சகாய நிதித் திட்டம் என்னும் புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அங்கத்தவர்களின் வயதெல்லையின் படி தவணைக்கட்டணம் செலுத்தி இத்திட்டத்தில் சேர்ந்து கொள்ள முடியும். இதில் வருடாந்தக் கட்டணமாக வயதடிப்படையில் நிர்ணயிக்கப்படும் கட்டணத்தை 7 வருடங்களுக்குச் செலுத்துதல் வேண்டும். 07 வருடக் கட்டணத்தையும் மொத்தமாக ஒரே தடவையில் செலுத்தினால் 10வீதக் கழிவு வழங்கப்படும்.

அங்கத்தவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் தீர்மானிக்கப்படும் விஷேட மரண சகாயநிதி ரூபா 1 லட்சத்திலிருந்து இரண்டரை இலட்சம் வரை அமையும். ஒருவர் விரும்பினால் 7 வருடத்தின் பின்னரும் மேலும் ஐந்து வருடங்களுக்கு அங்கத்துவப் பணத்தை செலுத்திவர முடியும்.

அதற்கேற்ப விசேட நன்மைகள் கிடைக்கும். மேலதிக விவரங்களை பிரதேச செயலகப் பிரிவுகளின் ஓய்வூதிய நம்பிக்கை நிதியச் சபை உறுப்பினர்களிடமோ அல்லது, அரசசேவை ஓய்வூதியர்களின் பொறுப்பு நிதியம், ஓய்வூதியத் திணைக்களக் கட்டடம் 3ஆம் மாடி மாளிகாவத்தை, கொழும்பு - 10 என்னும் முகவரியிலோ பெறமுடியும். (த-121)

## மிதிவெடி அபாயக் கல்வி திட்டத்தில் இணைக்கப்படுபவர் குறித்து விளக்கம்

யாழ்ப்பாணம்,செப்.15

மிதிவெடி அபாயக் கல்வித் திட்டத்தில் இணைக்கப்பட்டவர்கள் திட்டமிட்ட முறையில் புறக்கணிக்கப்படவில்லை என்று தேசிய சர்வோதய சிரமதான சங்கத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் எஸ்.ரேணுகா தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் பணியாற்றியவர்கள் தாம் புறக்கணிக்கப்பட்டதாக அரச அதிபருக்கு மகஜர் கையளித்திருந்தனர்.

இதற்குப் பதில் அளிக்கும் வகையில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மாவட்டத்தின் தேவை கருதி மிதிவெடி அபாயக் கல்வித் திட்டமானது யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட சர்வோதய நிறுவனத்தினால் 7 ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் ஆள்சேர்ப்பு முறையானது சர்வோதய சட்டத்துக்கு அமைவாக நேர்முகத் தேர்வின் மூலமே நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டமானது 2007 மார்கழி மாதம் நிறைவுபெற்று ஆறுமாதத்தின் பின்பு மீண்டும் புதிய திட்டமானது ஒருவருட காலத்திற்கு 2008ஆம் ஆண்டு ஆனி மாதம் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

2008ஆம் ஆண்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட சேவையாளர்கள் நேர்முகத் தேர்வின் மூலமே தெரிவுசெய்யப்பட்டு ஒரு வருட காலம் ஒப்பந்த அடிப்படையில் வேலையில் அமர்த்தப்பட்டனர். அரச அதிபருக்கு கடிதம் சமர்ப்பித்த அனைவரும் 2008ஆம் ஆண்டு ஆனி மாதம் ஒரு வருட வேலைக்கு ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்பட்டவர்களே ஆகும்.

இந்த ஒருவருட ஒப்பந்தம் முடிவுற்ற பின்பு சுய விருப்பத்தின் பேரில் ஒரு மாத காலம் தொண்டர் அடிப்படையில் பணியாற்றினர். அதன் பின்பு 5 மாத காலத்திற்கு விழமையான சம்பளத்துடன் சிறிய திட்டத்தின் கீழ் பணியாற்றினர். இவர்களது சர்வோதய சேவைக் காலப் பகுதியில் வெளிக்கள உத்தியோகத்தருக்கிடையில் காணப்பட்ட கருத்து முரண்பாடுகளும் மற்றும் வேலைத் தரம் பற்றிய மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தினதும், முன்னாள் அரச அதிபரினதும் மற்றும் யுனிசெவ் நிறுவனத்தின் அறிக்கைகளைக் கவனத்தில் கொண்டு நாம் 2010 ஆம் ஆண்டு புதிய உத்தியோகத்தருக்கான தெரிவினை பங்குனி மாதம் அறிவித்திருந்தோம். அந்த நேர்முகத்தேர்வில் அவர்களினதும் புள்ளிகளையும் கடந்த கால வேலைத் திட்டத்தினையும் கவனத்திற் கொண்டு புதிய சேவையாளருக்கான ஆள்சேர்ப்பு நடைபெற்றது.

இத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட அனைவரும் நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டவர்களே மேற்படி கடிதத்தை சமர்ப்பித்தவர்களுடைய ஒப்பந்தம் நிறைவு பெற்ற பின்பும் தமது மனித உரிமை மீறல் எனக் கூறுவது மிகவும் மன வருத்தத்திற்குரிய செயலாகும். இனிவரும் காலங்களில் இவ்வாறானவர்களை வேலைக்கு அமர்த்தும் போது மற்றைய நிறுவனங்களும் இவற்றைக் கவனத்திற் கொண்டு செயற்படுவது சாலச் சிறந்தது ஆகும்.

சர்வோதய மாவட்ட நிலையமானது யாழ்.மாவட்ட மக்களுக்கான அர்ப்பணிப்புடன் தமது வேலைத்திட்டத்தைக் கொண்டு செல்லும்போது இவ்வாறான அவதூறான செயற்பாடுகள் எமக்கு மிகவும் மன வருத்தத்தினை அளிக்கிறது - என்றுள்ளது. (ஐ)

## உள்ளூர் மீனவர்களின் வலைகளை நாசமாக்கும் இந்திய இழுவைப் படகுகள்

வடமராட்சி,செப்.15

வடமராட்சி கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் உள்ளூர் மீனவர்களின் மீன்பிடி வலைகளை அறுத்துச் சேதமாக்கும் சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன.

இதனால் பல லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளை இழந்துள்ள இப்பிரதேச மீனவர்கள் மீளவும் தொழிலை ஆரம்பிக்க மீன்பிடி வலைகளைக் கொள்வனவு செய்ய முடியாமல் திண்டாடி வருகின்றனர்.

தினமும் வடமராட்சி வடக்கு கடற்பகுதியில் கரையில் இருந்து 5 கிலோ மீற்றர் தூரம் வரை வந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வரும் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளினால் பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் அழிக்கப்பட்டு வருவதாகவும் இதன் காரணமாக மீனவர்கள் தொழிலை மேற்கொள்வதில் சோதனைகளையும் கஷ்டங்களையும் அனுபவித்து வருவதாக வடமராட்சிக் கடற்பகுதியில் தொழில் புரிந்துவரும் மயிலிட்டித்துறை கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (த-236)






யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட சிரேஷ்ட விரிவுரையாளர்களான கலாநிதி சின்னத்தம்பி நோபிள் சுரேந்திரன், கலாநிதி புண்ணியமூர்த்தி ரவிராஜன் ஆகியோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட விஞ்ஞான ஆராய்ச்சிகள் சர்வதேச விஞ்ஞானச் சஞ்சிகைகளில் ஆய்வுக் கட்டுரைகளாக வெளியிடப்பட்டுள்ளன. இதனைக் கௌரவித்து தேசிய ஆராய்ச்சிச் சபையின் சிபார்சுக்கமைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, விரிவுரையாளர் சுரேந்திரன், விரிவுரையாளர் ரவிராஜன் ஆகியோருக்கு விருதுகளை வழங்குவதை முதல் இரு படங்களிலும் நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி மற்றும் விருந்தினர்களை இறுதிப் படத்திலும் காணலாம். விரிவுரையாளர் சுரேந்திரன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியினதும் விரிவுரையாளர் ரவிராஜன் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியினதும் பழைய மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

17.01.1994

★ இலங்கை அரசு இந்த ஆண்டையுத்த ஆண்டாகப் பிரகடனப்படுத்தி இருப்பதால் அதனை ஏதிர்கொள்ள நாம் எம்மைத் தயார்ப்படுத்துவோம் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுப்பு.

★ போர் நிறுத்தம் ஒன்றை அறிவித்தால் அரசமைப்புத் தெரிவுக்குழுவுக்கு யோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுத்திருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என பி.பி.ஸி வானொலி விமர்சிப்பு.

18.01.1994

★ ஐரோப்பிய நாடுகள் பலவும் தத்தமது நாடுகளில் உள்ள ஈழத்தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதற்காக இலங்கை அரசுடன் விரைவில் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள இருப்பதாக அறிவிப்பு.

★ பூநகரி இராணுவ - கடற்படைக் கூட்டுத்தளத்தை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தபோது அந்த முகாமின் தளபதி ஒருவர் தொடர்ந்து ஒன்றரை மணி நேரம் தூக்கத்தில் இருந்ததாக அச்சம்பவம் குறித்து விசாரணை நடத்திய இராணுவ விசாரணை மன்றத்தின் அறிக்கையில் தெரிவிப்பு.

19.01.1994

★ கடல் வழிப் போக்குவரத்தை கட்டுப்படுத்தும் நோக்குடன் தடை செய்யப்பட்ட வலயங்களை உருவாக்க ஜனாதிபதி கொழும்பு விதிகளைப் பிறப்பிப்பு.

★ ஐ.தே.கட்சியின் தலைமைத்துவத்தில் தமக்கு நம்பிக்கையில்லை என அமைச்சர் தொண்டமான் தன்னிடம் தெரிவித்ததாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிப் பிரமுகர் ஜி.எம்.பிரேமச் சந்திர தெரிவிப்பு.

20.01.1994

★ அனுராதபுர மாவட்டம் - ரம்பாவவில் தனியார் பஸ் ஒன்றில் குண்டு வெடித்ததால் 11 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

★ ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த காமினி திஸநாயக் காவும், ஜி.எம்.பிரேமச்சந்திராவும் ஐ.தே. கட்சியில் இணையவுள்ளதாகத் தெரிவிப்பு.

21.01.1994

★ அரசாங்கம் கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதை ஆட்சேபித்து எதிரணி எம்பிக்கள் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பியதாகத் தெரிவிப்பு.

★ விடுதலைப் புலிகளுடன் பேச அரசு விரும்புவதாகவும் அதற்காக அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருப்பதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

22.01.1994

★ தமிழ் நாட்டில் தங்கியிருக்கும் ஈழத்தமிழ் அகதிகளை முழுமையாகத் திருப்பி அனுப்புவதே தமது குறிக்கோள் என தமிழ் நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவிப்பு.

★ தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஏதிராக சிங்கள இனவாத அமைப்பொன்றை நிறுவ முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிப்பு.

23.01.1994

★ வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது குறித்து விடுதலைப் புலிகள் வெளியிட்ட யோசனையை அரசாங்கம் பரிசீலித்துப்பார்க்க வேண்டும் என "லங்காதீப" சிங்கள நாளிதழ் தனது அரசியல் விமர்சனத்தில் தெரிவிப்பு.

★ பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து வரும் சவாலைச் சமாளித்து கட்சிக்குள் தனது நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காகவே ஜனாதிபதி விஜேதுங்க, காமினி திஸநாயக்காவை மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்ள முயல்வதாக "ராவய" பத்திரிகை தெரிவிப்பு.

24.01.1994

★ இலங்கை வெளியுறவுச் செயலாளராகப் பணிபுரியும் பேர்னாட் திலகரத்தினா இந்தியாவுக்கான இலங்கைத் தூதராக நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிப்பு.

★ உள்ளூராட்சித் தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் கிழக்கு மாகாணத்திலும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிப்பு.

25.01.1994

★ மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகாவின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரவும் அதன் மூலம் எதிர் அணியின் வசமுள்ள மேல் மாகாண சபையைக் கலைப்பதற்கும் ஐ.தே.கட்சியின் தலைமையிலான அரசு முயற்சிப்பதாகத் தெரிவிப்பு.

★ யாழ்.குடாவில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டுவரும் ஷெல் தாக்குதல்கள் குறித்து யாழ். அரச அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு விரிவாக எடுத்துரைத்துள்ளதாகத் தெரிவிப்பு.

26.01.1994

★ தரைக் கண்ணிகளை எதிர்த்துச் செயற்படும் விசேட வாகனங்களைக் கொள்வனவு செய்வது குறித்து இராணுவத் தரப்பு தீவிரமாக பரிசீலித்து வருவதாகத் தெரிவிப்பு.

★ மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகாவுக்கு எதிராகக் கொண்டுவரப் படவிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை மேல்மாகாண சபையிலுள்ள 17 ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்களும் ஆதரித்து வாக்களிப்பர் எனத் தெரிவிப்பு.

27.01.1994

★ ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திஸநாயக்க ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க முன்னிலையில் நேற்று ஐ.தே.கட்சியில் இணைந்து கொண்டதாகத் தெரிவிப்பு.

★ அகதிகளுக்கான ஐ.நா.தூதரக பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து வடக்கில் தமது நிவாரணம் மற்றும் வேலைத்திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க முடிவு செய்துள்ளதாகத் தெரிவிப்பு.

28.01.1994

★ யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் அதிமேற்றிராணியார் அதிவண. மார்க்கஸ் பெர்னாண்டோ தாம் கொழும்பு திரும்பியதும் யாழ் மக்களின் கஷ்டங்களை நீக்கும் வகையில் அரசுடன் தொடர்பு கொண்டு உதவவுள்ளதாகத் தெரிவிப்பு.

★ சமாதானப் பேச்சுக்களுக்கு வழி வகுக்கும் முதல் நடவடிக்கையாக தமது காவலில் உள்ள பொலிஸாரையும் படையினரையும் விடுதலைப் புலிகள் விடுவிக்கவேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுப்பு.

29.01.1994

★ சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகளை அரசு தீர்த்தால் ஒழிய விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே சமாதானம் ஏற்பட வாய்ப் பில்லை என ஐ.தே.கட்சியில் இணைந்து கொண்டுள்ள காமினி திஸநாயக்க தெரிவிப்பு.

★ தென்மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே.கட்சி வெற்றியீட்டுமானால் அரசு உடனடியாக பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த முயலக் கூடும் என கொழும்பு ஆங்கில வார இதழொன்று தெரிவிப்பு.

30.01.1994

★ கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தலில் அங்குள்ள தமிழ் மக்களை அச்சுறுத்தி வாக்களிக்க வைக்கும் முயற்சியில் அரச படையினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

★ காமினி திஸநாயக்க மீண்டும் ஐ.தே.கட்சியில் இணைந்து கொண்டுள்ளமை அக் கட்சிக்குள் பாரிய பிளவுகள் ஏற்பட வழிவகுக்கும் என "ராவய" பத்திரிகை தெரிவிப்பு.

31.01.1994

★ விடுதலைப் புலிகளைப் பயன்படுத்தி தென்னிந்தியாவில் ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்த வேண்டாம் என பாகிஸ்தானை அமெரிக்காவும் பிரிட்டனும் எச்சரித்து இருப்பதாகத் தெரிவிப்பு.

★ டிசெம்பரில் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலிலும் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றியீட்டுவதற்காகவே ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க இனவாதம் பேச ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிப்பு.

## கொதிநீர் சிந்தியதில் சிறுமி படுகாயம்

உயரத்தில் வைக்கப்பட்டிருந்த சுடுநீர்ப் போத்தல் கை தவறிக் கீழே இருந்த சிறுமியின் மீது வீழ்ந்து உடைந்து கொதி நீர் சிந்தியதில் அச்சிறுமி காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த 12ஆம் திகதி மட்டுவிலில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ம.சங்கீர்த்தனா (வயது 10) என்னும் மாணவி காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-207)

## கம்யூனிஸ்ட் கார்த்திகேசனின் நினைவு தினம் 19 ஆம் திகதி

வண்ணை,செப்.15

இடதுசாரி இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரும் சிறந்த கல்விச் சிந்தனையாளருமாகிய கம்யூனிஸ்ட் கார்த்திகேசனின் 33ஆவது நினைவுகூரல் நிகழ்வு எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் அறக்கட்டளை நிதியம் மற்றும் இலங்கை முற்போக்குக் கலை இலக்கிய மன்றம், யாழ்.ஆய்வறிவாளர் அணி ஆகியன கூட்டாக எற்பாடு செய்துள்ள நிகழ்வுக்கு வழக்கறிஞர் ரெங்கன் தேவராஜன் தலைமை வகிப்பார்.

• நினைவுரைகளை வழக்கறிஞர் எஸ்.ஜி.புஞ்சிதேவா, யாழ்.மாநகர முன்னாள் துணை முதல்வர் எம்.ஜி.பசீர், கலாநிதி செல்வி திருச்சந்திரன், இளைப்பாறிய ஆசிரியர் வீ.சின்னத்தம்பி ஆகியோர் ஆற்றுவர். (த-160)

## அறிவித்தல்

மாவிட்டபுரம் கிராம உப அலுவலகம்
ஆதனப் பெயர் மாற்றம்,
வட்டாரம் 11, பொன்னுச்சாமி வீதி,
ஆதன இல.22.

வட்டாரம் 11, பொன்னுச்சாமி வீதி ஆதன இலக்கம் 22 இல் அமைந்துள்ள ஆதனமானது வேலுப்பிள்ளை செல்லத்துரையும் பெண் பொன்னம்டிா என்பவர்களால் சீதனமாக வழங்கப்பட்டு நாகராசா சசிக்குமார் பெண் தர்மினி என்பவர்களால் 5532/15.11.2009ஆம் திகதி எழுதப்பட்ட உறுதிமூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் என்பதைத் தெரியப்படுத்தி, எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காக பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து நாகராசா சசிக்குமார் பெண் தர்மினி எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

திருமதி பு.சிவலிங்கம்,செயலாளர்,
வலி.தென் மேற்கு பிரதேச சபை, மானிப்பாய். (103327)

## மரண அறிவித்தல்கள்

### சூசைப்பிள்ளை சகாயராஜா (குயின்ரஸ்)



48/14, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை சகாயராஜா (10.09.2010) வெள்ளிக்கிழமை கட்டாரில் காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றி விவரம் பின்னர்அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.48/14,
புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சூசைப்பிள்ளை ரெஜீனா (தாய்),
சகாயராஜா ஜெயந்தி (மனைவி).
(103325)

### மரியான்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை
(உரிமையாளர், லைடன் சலூன், கொட்டடிச் சந்தி, யாழ்ப்பாணம்)



கரம்பன், ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் 99/5, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம், 28/1, பெர்ணடேற் மாவத்தை, சிலாப்ம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட மரியான்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை (13.09.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர்அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

99/5, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(103324)

தகவல்:
திருமதி வ.எட்வீனா (மனைவி),
திருமதி லிண்டன் கிரிஜா (மகள்).


Computer Express
Institute of Information Technology

6வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
அதிரடிக் கட்டணக் கழிவு

| | | |
|---|---|---|
| * Dip. in computer science. | 4 Months | 1000/= |
| * Dip. in web page Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Graphic Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Desk top publishing. | 4 Months | 1000/= |
| * Dip. in Hardware Engineering. | 3 Months | 1000/= |
| * Dip. in Auto CAD. | 3 Months | 1000/= |
| * Dip. in MicroSoft Office. | 3 Months | 1000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book,Tally) | 3 Months | 1000/= |
| * Honours Dip. in computer science. | 5 Months | 1000/= |

20/09/2010 க்கு முன்னர் பதிவுகளுக்கு முந்துங்கள்

Advance Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

Batch i -15/09/2010
Batch ii -17/09/2010
9-10 am
Batch iii -18/09/2010
Batch iv -19/09/2010
3-4 pm

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி
கொழும்பில் இருந்து வருகை தரும் பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

No.15 ,Sirampiyady lane
off Stanly Road,
(Cosy Hotel 2nd floor)
Jaffna.
021 222 8250, 0777222422,
0774907444

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=
மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் மருத்துவக் கழகத்தினால் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட பேராசிரியர் சி.சிவஞானசுந்தரம் (நந்தி) நினைவுப் பேருரை நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

வைத்திய அதிகாரிகள் மண்டபத்திற்கு அழைத்துவரப்படுவதை முதல் படத்திலும், 'யாழ்ப்பாணத்தில் மருத்துவக் கல்வி' என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் கே.சிவபாலன் நினைவுப் பேருரை நிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும், இந்த வைபவத்தில் இடம்பெற்ற நடன நிகழ்வை மூன்றாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.

*(படங்கள்: லக்ஸ்மன்)*

# தொழில் திணைக்கள யாழ்.அலுவலகத்துக்கு ரூ.89 மில்லியன் செலவில் புதிய கட்டடம்

## நவம்பர் மாதத்தில் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.15

தொழில் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்துக்கான புதிய மூன்று மாடிக் கட்டடம் 89.5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான பணிகள் எதிர்வரும் நவம்பர் மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தொழில் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்துக்கான கட்டடம் அமைப்பதற்காக பண்ணைப் பகுதியில் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்துக்கு அருகில் இடம் ஒதுக்கப்பட்டுப் பலவருடங்களாக கட்டடப் பணிகள் எதுவும் ஆரம்பிக்கப்படாமல் இருந்தது.

எனினும் கடந்த 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொழில் திணைக்களத்தின் தற்போதைய யாழ்.அலுவலகத்துக்கு வருகைதந்த இலங்கை கட்டடத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் டி.சி.ஏ.எஸ். பத்மதிலக, வடக்கு மாகாண கட்டடத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் பிரின்லி ஆகியோர் இக்கட்டப் பணிகள் தொடர்பாக யாழ். தொழில் திணைக்கள உதவித் தொழில் ஆணையாளர் எஸ்.கனகேஸ்வரனுடன் நடத்திய கலந்துரையாடலை அடுத்தே மேற்படி கட்டடப் பணிகளை ஆரம்பிப்ப தற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட் டுள்ளன.

முன்னர் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் தீர்மானிக்கப்பட்ட செலவைவிட 15 வீதத்தால் தற்போதைய கட்டடப் பணிக்கான செலவு அதிகரித்திருப்பதால் அதற்கான மேலதிகத் தொகையை தொழில் திணைக்களம் வழங்கவுள்ளது.

இது தொடர்பாக எதிர்வரும் 17ஆம், 18ஆம், 19ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ள உதவித் தொழில் ஆணையாளர்களின் மாநாட்டில் ஆராயப்படவுள்ளதாகவும் யாழ்.மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் தெரிவித்தார்.

இருவருட காலத்தில் அமைக்கப்படவுள்ள இம்மூன்று மாடிக்கட்டடத்தில் முதல் மாடியில் மாகாண தொழில் திணைக்கள அலுவலகமும், இரண்டாம் மாடியில் மாவட்ட தொழில் திணைக்கள அலுவலகமும், மூன்றாம் மாடியில் தொழிற்சாலைப் பரிசோதகர்களின் காரியாலயமும் அமையவுள்ளன.

தொழில் திணைக்களத்துக்கான தற்போதைய தலைமை அலுவலகம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தின் 4ஆம் மாடியில் அமைந்துள்ளதால் உழியர் சேமலாப நிதியைப் பெறுவது தொடர்பாக செல்லும் முதியவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவது குறிப்பிடத்தக்கது. (த-16)

## துருசுப் பலகைகளை அகற்றி விசமிகள் சிலர் அட்டகாசம்

தென்மராட்சி,செப்.15

சாவகச்சேரி, தனங்கிளப்பு வீதியில் நெல்வயல்களுக்கு கடல்நீர் புகாமல் தடுப்பதற்காக அமைக்கப்பட்ட தடுப்பணையில் உள்ள துரிசுப் பலகைகள் விஷமிகளால் அகற்றப்பட்டுள்ளதால் கடல்நீர் வயல்களுக்குள் புகும் அபாயம் உள்ளதாக நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

காலபோக நெற்செய்கைக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாலும் மழை காலத்தில் கடல்நீர் வயல்களுக்குள் புகும் அபாயம் உள்ளதாலும் இந்த நீர்த்தடுப்பு துரிசுப் பலகை போடுவதற்கு சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் முன்வர வேண்டுமெனவும் தெரிவித்தார். (த-207)

## 'நிக்கொட்' நிறுவனத்துக்கு புதிய பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,செப்.15

''நிக்கொட்'' நிறுவன தலைமையகத்தின் புதிய பணிப்பாளராக திருமதி எல். ஆர். ரஞ்சினி நியமிக்கப்பட்டுள்ளார்.

நிக்கொட் நிறுவனத்தின் பணிப்பாளராகக் கடந்த 10வருடங்களாகக் கடமையாற்றிய எல்.லங்காநேசன் தனது ஒப்பந்த காலம் முடிவுற்று ஓய்வுபெற்றுள்ள நிலையிலே அந்நிறுவனத்தின் பணிப்பாளராக திருமதி எல்.ஆர்.ரஞ்சினி கடந்த 6ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-9)

## இரண்டு பெண்கள் பாம்பினால் கடியுண்டனர்

தென்மராட்சி,செப்.15

கர்ப்பிணிப் பெண் உட்பட இரு பெண்கள் பாம்பினால் கடியுண்டனர்.

கடந்த 12ஆம் திகதி இரவு பளை, அரசன்கேணி, செந்தில்நகரைச் சேர்ந்த தர்மாகௌரி (வயது 31), பாலாவி வடக்கைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண்ணான தங்கவேலாயுதம் லோகேஸ்வரி (வயது 30) ஆகியோரே பாம்புகளினால் கடியுண்டவர்களாவர்.

பாம்புகளினால் கடியுண்ட இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கர்ப்பிணிப் பெண்ணான த.லோகேஸ்வரி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (த-202)

# சம்பந்தன் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,செப்.15

இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை நினைவாக வழங்கப்பட்டு வரும் சம்பந்தன் விருதுக்காக நூலாசிரியர்கள் தங்கள் நூலின் ஒரு பிரதியை அனுப்பி வைக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

ஆண்டுதோறும் வழங்கப்பட்டுவரும் இந்த விருது 10ஆயிரம் ரூபா பணப் பரிசையும் கொண்டுள்ளது. இதனை எழுத்தாளர் சம்பந்தனின் மகள் திருமதி திரிவேணி கஜன் வழங்கிக் கௌரவிக்கின்றார்.

இந்த விருதுக்காக தங்கள் நூலின் ஒரு பிரதியை அது எத்துறை சார்ந்ததாயினும் தனித்துவமானதெனக் கருதினால் செங்கை ஆழியான், 75/10 ஏ, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (க)






இலங்கை வங்கியின் 71 ஆவது அகவை அன்று இலங்கை வங்கி சுன்னாகம் மேற்தரக் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்த வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் உரையாற்றுவதையும், அருகில் வங்கி முகாமையாளர் எஸ்.பி.அரசகுமார், அருட்தந்தை கே.நிருபன் நிசானந் அடிகள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (த)

# யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியின் 'மாணவர் மகிழ்களம்' நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.15

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'மாணவர் மகிழ்களம்' என்னும் தொனிப்பொருளிலான மாபெரும் கல்விக் கண்காட்சியும் சாகச நிகழ்வும் நாளை வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கண்காட்சி நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரிகளின் பிரதம ஆணையாளர் வை.ஏ.என்.டி.யாப்பாவும் சிறப்பு விருந்தினராக டபிள்யூ.பி.ஆர்.சில்வாவும் கலந்துகொள்வர்.

'உதயன்' பத்திரிகையின் ஊடக அனுசரணையில் நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் ஆரம்பக்கல்வி, விசேட கல்வி, கணிதம், விஞ்ஞானம், சித்திரம், நாடகம், சங்கீதம், நாடகமும் அரங்கியலும், இந்து சமயம், கிறிஸ்தவம், ஆங்கிலம், நூலக விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றைச் சேர்ந்த ஆரம்பக் கல்வித்துறை மற்றும் இடைநிலைக் கல்வித்துறை ஆசிரிய மாணவர்களால் அந்தந்த [illegible] கற்றல், கற்பித்தல் கண்காட்சியும் விளக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

இதற்கும் மேலதிகமாக சித்த மருத்துவத்துறை, உயிர்தொழில்நுட்பம், தபால் முத்திரைகள் மற்றும் புத்தகக் கண்காட்சிகளும் இடம்பெறவுள்ளன.

இதில் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையினரால் வைத்திய ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் உயிர்தொழில்நுட்பம் மூலமான உள்ளூர் உற்பத்தி, நீரிழிவு நோய்களைக் குணப்படுத்துதல் தொடர்பான விளக்கக் கண்காட்சிகளும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

அத்துடன் தபால் திணைக்களத்தினால் பாடத்துறைசார் சகல முத்திரைகளும் அதாவது இதுவரை வெளியிடப்பட்ட முத்திரைகள், கடித உறைகள் என்பனவும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

சாகாச நிகழ்வுகளாக ரயிலில் பயணம், பாதாளக் கிணற்றில் கார் மற்றும் சைக்கிள் ஓட்டம், வட்டக் கூட்டினுள் ஓடும் மோட்டார் சைக்கிள், மெரிக்கோ ரவுண்ட், பலூன் துள்ளல், மந்திர வித்தைகள் என்பனவும் நடைபெறவுள்ளன.

இக்கண்காட்சியில் கல்விக் கண்காட்சி நாளை தொடக்கம் எதிர்வரும் 19ஆம் திகதி வரை காலை 8மணி முதல் மாலை 4 மணிவரையும் நடைபெறும்.

சாகாச நிகழ்வுகள் நாளை தொடக்கம் எதிர்வரும் 21ஆம் திகதி வரை காலை 8 மணியிலிருந்து இரவு 10மணி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-16)

# சாட்டிக் கடலில் குளித்த பெண்களுடன் சேஷ்டை புரிந்த 8 இளைஞர் நீதிமன்றில்

யாழ்ப்பாணம்,செப்.15

வேலணை, சாட்டிக் கடலில் குளித்துக் கொண்டிருந்த தென்னிலங்கையைச் சேர்ந்த பெண்களுடன் சேஷ்டைகளில் ஈடுபட்ட 8 இளைஞர்கள் பொலிஸாரால கைதுசெய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தென்னிலங்கையிலிருந்து வந்த சுற்றுலாப்பயணிகள் கடந்த சனிக்கிழமை சாட்டியிலுள்ள வெள்ளைக் கடலில் குளித்துக்கொண்டிருந்தபோது அங்கு மது போதையில் வந்த இந்த 8 இளைஞர்களும் நீருக்கு அடியில் நீந்திச்சென்று அவர்களுடன் சேஷ்டையில் ஈடுபட்டதாகக் கூறப்படுகின்றது.

சம்பவநேரம் தற்செயலாக அங்கு வந்த ஊர்காவற்றுறைப் பொலிஸார் இவர்களைக் கைதுசெய்து திங்கட்கிழமை நீதிமன்றின் முன் நிறுத்தினார்கள். சம்பவத்தை விசாரித்த பதில் நீதிபதி ஜே.கஜநிதிபாலன் இவர்களில் ஒருவரை எச்சரிகை செய்து விடுதலை செய்தார். ஏனைய 7 பேரில் மூவருக்கு அரச செலவாக 2ஆயிரத்து 500 ரூபா செலுத்துமாறும், மற்றையோருக்கு 2 ஆயிரத்து 500 [illegible] செலுத்துமாறும் நீதிபதி தீர்ப்பளித்தார். (க-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களமயம், இராணுவக் கெடுபிடிகள் இல்லாத வடக்கு - கிழக்கு எட்டாக் கனியே!

இராணுவக் கெடுபிடிகள், சிங்கள மயப்படுத்தல்கள் என்பன இல்லாத இயல்பு வாழ்க்கையை வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற போதும் அது இவர்களுக்கு எட்டாக் கனியாகவே உள்ளது.

இந்த நிலைமை தொடர்பாக 'பி.பி.சி. உலகச் செய்திச் சேவை இணையத்தளத்தில் வெளியான செய்திக் கட்டுரை 'புதினப்பலகை'க்காக மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

அதன் முழுவடிவம் வருமாறு,

உடைந்துபோன கட்டடங்கள், ஐ.நாவின் அகதிகளுக்கான உயர் ஆணையகத்தினால் வழங்கப்பட்ட கூடாரங்கள், கொடிகளில் காயும் உடுப்புக்கள், கூடாரங்களுக்கு அருகே சிதறிக்கிடக்கும் பாத்திரங்கள் என்பன இந்தப் பகுதியில் மக்கள் வாழுகிறார்கள் என்பதைக் காட்டின.

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்த போர் மன்னார் விவசாயிகள் மத்தியிலிருந்து எண்ணற்ற உயிர்களைக் காவுகொண்டுவிட்டது. இன்றும் கூட இந்த விவசாயிகள் பாதுகாப்பின்மையை உணர்கிறார்கள்.

''அவதானமாக இருங்கள், ஒவ்வொரு வார்த்தையையும் வெளிவிடும் போது கவனத்துடன் இருங்கள். வெளியாருடன் நாங்கள் உரையாடுவதை இந்தப் படையினர் விரும்புவதில்லை'' என எங்களை அழைத்துச் சென்றவர் கூறினார்.

சோதனைச் சாவடியைக் கடந்து செல்லும் ஒவ்வொரு வாகனத்தையும் அதியுச்ச விழிப்புடன் காவலில் இருக்கும் படையினர் பரிசோதிக்கிறார்கள். இந்தப் படைவீரர்கள் மிகவும் களைப்புற்றிருந்தாலும் நட்புடன் பழகுவதாகவே தெரிகிறது. குறிப்பாக வாகனத்தில் வந்திருப்பவர் யாராவது தென்பகுதியைச் சேர்ந்த சிங்களவராக இருந்தால் இந்தப் படைவீரர்கள் அதிக உரிமையுடனும் நட்புடனும் பழகுகிறார்கள்.

### பொதுமக்களின் துன்பகரமான வாழ்க்கை

இந்தப் பிராந்தியத்தில் மக்களின் வாழ்க்கை துன்பம் நிறைந்ததாகவே இன்னமும் இருக்கிறது. இதுநாள் வரைக்கும் இருந்த முகாம்களிலிருந்து தங்களது சொந்த ஊர்களுக்குத் திரும்பியவர்களுக்கு அங்கு எதுவுமே இருக்கவில்லை.

''2006ஆம் ஆண்டு ஓர் உழவு இயந்திரத்தில் ஏற்றிச்செல்லக்கூடிய அளவு பொருட்களை நாங்கள் விட்டுச்சென்றோம். ஆனால் இன்று இரண்டு 'சொப்பிங் பாக்கு'களுடன் ஊருக்கு வந்திருக்கிறோம்'' என ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பிராந்தியத்திலிருந்து விடுதலைப் புலிகள் பின்வாங்கிச் சென்றபோது அவர்களின் பணிப்புக்கமைய மடுத் தேவாலயத்தை அண்டிய இந்தப் பகுதியில் வசித்துவந்த இவர் தனது மனைவியுடனும் மூன்று பிள்ளைகளுடனும் இடம்பெயர்ந்து சென்றார்.

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வருவதற்கு சற்று முன்னதாக இவர் தனது குடும்பத்துடன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குப் பாதுகாப்பாக வந்து சேர்ந்திருந்தார்.

''மாணிக்கம் பண்ணை முகாமில் நாங்கள் தங்கவைக்கப்பட்டோம். ஓர் ஆண்டும் இரண்டு மாதங்களும் நாங்கள் அங்கு தங்கியிருந்தோம். தற்போது நாங்கள் எங்களது காணிக்குத் திரும்பிவிட்டபோதும் வீடு என அங்கு எதுவுமில்லை'' என்றார் அவர்.

குறிப்பிட்ட இந்த நபர் முருங்கன் பகுதியில் வசித்துவந்திருக்கிறார். தென்பகுதியில் வேலை செய்தமையினால் சரளமாகச் சிங்களத்தில் உரையாடும் இந்த நபர் நாளொன்றுக்கு 600 ரூபாய்க்கு கூலி வேலைக்குச் சென்று வருகிறார்.

''சமையல் எண்ணெய், அரிசி, கோதுமை மா மற்றும் சீனி ஆகியன எங்களுக்கு வழங்கப்படுகின்றன. ஆனால் தேவையான காய்கறிகளை வாங்குவதற்கு எங்களிடம் பணம் இல்லை. முருங்கையிலையை வறுத்தே பிள்ளைகளுக்கு சோறூட்டுகிறோம். இப்போது எங்களால் வேட்டைக்கும் போக முடியவில்லை. வேட்டைக்குச் செல்வதற்கான துப்பாக்கிகள் எங்களிடம் இல்லை. அத்துடன் நாங்கள் வேட்டைக்குச் செல்லும் காடுகளில் கண்ணிவெடிகள் நிறைந்து கிடக்கின்றன. ஆதலினால் ஊரிலுள்ள சிறிய பிராணிகளையே வேட்டையாடுகிறோம்'' என்றார் அவர்.

மீள்குடியேற்றப்பட்டிருப்பவர்கள் ஒவ்வொருவரிடமும் இதுபோன்ற சோகக் கதைகள் உள்ளன. பெரும்பாலான வீடுகள் தரைமட்டமாகிவிட்டன. இடிந்து அழிந்துவிட்ட தங்களது வீடுகளுக்கு அருகாக அமைக்கப்பட்டிருக்கும் கூடாரங்களிலேயே பலர் வாழுகிறார்கள்.

அடிமட்டத்திலிருந்தே இவர்கள் மீண்டும் தங்களது வாழ்க்கையை ஆரம்பிக்கவேண்டியுள்ளது. வாழ்வை மீண்டும் கொண்டுசெல்வதற்குத் தேவையான உதவிகள் போதியளவில் தமக்குக் கிடைப்பதில்லை என்கிறார்கள் இவர்கள்.

### துன்பத்தை அதிகரிக்கும் செயல்

''எங்களது வீடுகள் அனைத்தும் அமைத்துத் தரப்படும் என அரசு உறுதியளித்திருந்தது. ஆனால் அவர்கள் இதுவரை எதனையும் செய்யவில்லை'' என அவர் மேலும் கூறினார்.

''அரசின் மீள்எழுச்சித் திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட ஒரு வீட்டை நிர்மாணிப்பதற்கு 6,50,000 ரூபாய் தேவை. ஆனால் அரசிடம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்குவதற்காக 3,25,000 ரூபாவே இருப்பதாக இந்தப் பகுதியிலுள்ள அதிகாரிகளிடமிருந்து அறியமுடிகிறது.

நிரந்தரமில்லாத தற்காலிக வீடுகளைத் தமிழர்களுக்கு அமைத்துக்கொடுத்து அவர்களது துன்பங்களை அதிகரிப்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம்'' எனத் தமிழ்த் தலைவர் ஒருவர் என்னிடம் கூறினார்.

''வீடுகளை மீளவும் நிர்மாணிப்பது தொடர்பில் எந்தத் திட்டமிடலும் இல்லை. மீள்குடியேற்றம் தொடர்பில் உள்ளூர் மக்களுடனோ அல்லது இந்தப் பிராந்தியத்தின் தலைவர்களுடனோ கலந்துரையாடப்படவில்லை.

ஆழிப்பேரலை அனர்த்தத்தை விட இது மோசமானது. ஆனால் மக்களின் துன்பத்தைப் போக்கும் வகையில் எவரும் உருப்படியாக எதனையும் செய்யவில்லை'' என அவர் தொடர்ந்து கூறுகிறார்.

''மக்களுக்குத் தேவையான சேவைகளை அரசினால் வழங்கமுடியாதெனில் அதை சார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்கான சேவையைச் செய்வதற்கு முழுமையான அனுமதியை அரசு வழங்கவேண்டும். ஆனால் அரசாங்கம் இவ்வாறு நடந்துகொள்வதற்குத் தயாராக இல்லை.

மீள்குடியேற்றத் திட்டங்கள் என்ற போர்வையில் தமிழர்களது நிலங்களை அபகரித்து சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதிலேயே அரசாங்கம் அதிக அக்கறை காட்டுகிறது'' என்றார் அவர்.

''மன்னாரின் அரிப்பு பகுதியில் இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் குடியேறியிருக்கிறார்கள். முஸ்லிம்களின் வருகை இந்தப் பிரதேசத்தில் அமைதியை இல்லாது செய்துவிட்டது'' என உள்ளூர் தமிழர்கள் தங்களது அதிருப்தியினை வெளியிடுகிறார்கள்.

''குறிப்பிட்ட பிரதேசத்தில் தமிழர்கள் மீள்குடியேற்றப்படு முன்னரே முஸ்லிம்கள் குடியேறிவிட்டார்கள்'' என அரிப்புப் பகுதியில் வாழும் தமிழர்கள் கூறுகிறார்கள்.

மன்னாரின் திருக்கேதீஸ்வரம் பகுதியில் சிதைந்துபோன வீதிகளைத் திருத்தும் பணிகளிலும் ஆலயத்தின் உடைந்துபோன பகுதிகளைக் கட்டுவதிலும் சிங்கள ஒப்பந்தகாரர்களே ஈடுபட்டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டின் கீழ் இருந்த பகுதிகளில் பௌத்த ஆலயங்கள் வேகமாக முளைவிடுவதைக் காட்டும் சிறந்த உதாரணமாக மன்னார் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் மகாதித விகாரையைக் குறிப்பிடலாம்.

இவ்வாறாக தமிழர்கள் வாழும் பகுதிகளில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதைத் தமிழர்கள் முற்றாக வெறுக்கிறார்கள்.

இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்டு அவர்களின் பராமரிப்பின் கீழ் இருந்துவரும் இந்த விகாரையில் இரண்டு பௌத்த துறவிகள் நிரந்தரமாகவே வசிக்கிறார்கள்.

மகாதித விகாரை இந்தப் பிராந்தியத்தில் முன்னரே இருந்ததாக தொல்லியலாளரும் ஹெல உறுமய என்ற கட்சியின் முன்னாள் தலைவருமான எல்லாவல மேத்தானந்த தேரர் உறுதிப்படுத்தினார் என இந்தப் பகுதியில் இருக்கும் படையினர் வாதிடுகிறார்கள்.

''தங்களுக்குச் சொந்தமான நிலத்திலேயே இந்த விகாரை அமைக்கப்பட்டிருப்பதாக திருக்கேதீஸ்வரத்தின் ஆலய நிர்வாகத்தினர் கூறுகிறார்கள்'' என ஆலயப் பகுதியில் கடமையில் இருக்கும் படையினர் ஒருவர் கூறினார்.

### சிங்களப் பெயரில் வீதி

வன்னிப் பகுதியெங்கும் புத்தரின் சிலைகள் அதிகம் அமைக்கப்பட்டிருப்பதை ஏ-9 வீதி வழியாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குப் பயணிக்கும் போது நாம் உறுதிப்படுத்தலாம். எல்லாவற்றையும் விட மிக மோசமானது இந்தப் பகுதிகளில் குறிப்பிட்ட சில வீதிகளுக்குச் சிங்களப் பெயர்கள் இடப்பட்டிருப்பதுதான்.

விடத்தல்தீவு பகுதியில் காமினி குலரத்தின என்பவரின் பெயரால் ஹசாலக வீரையா என்ற பெயர் குறிப்பிட்ட ஒரு வீதிக்குச் சூட்டப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதியில் வசிப்பவர்கள் அனைவரும் தமிழர்களாக இருக்கின்றபோதும் வீதிகளில் உள்ள குறியீடுகள் சிங்களத்தில் மாத்திரம் எழுதப்பட்டிருக்கின்றன.

''பாதுகாப்பு என்ற போர்வையில் கடற்படையினரும் இராணுவத்தினரும் மக்களின் நிலங்களை அபகரித்திருக்கிறார்கள். எங்களது கலாசாரத்தையும் பாரம்பாரியத்தையும் இல்லாது செய்வதற்கு இவர்கள் முனைகிறார்கள்'' என தனது பெயரை வெளியிட மறுத்த உள்ளூர் வாசி ஒருவர் எம்மிடம் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டமையானது ஏற்கனவே நொந்துபோயிருக்கும் தமிழர்களை மேலும் துன்பத்துக்குள் தள்ளியிருக்கிறது. கடந்த காலப் போரின் விளைவாக அனைத்தையும் இழந்து நிற்கும் இந்த மக்களின் உரிமைக்காகக் குரல்கொடுக்கக்கூடிய மக்கள் அமைப்புக்களோ அல்லது அரசியல் அமைப்புக்களோ

## கொழும்பு ஆட்சியாளர் எதனை விரும்புகின்றார்களோ அதனை ஏற்கும் நிலைக்குத் தமிழர் தள்ளப்பட்டுள்ளனர்

அங்கில்லை.

''தங்களது நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கே நாதியற்றவர்களாக இருக்கும் இவர்கள் அரசியல் தொடர்பில் அலட்டிக் கொள்ளும் நிலையில் இல்லை'' என முன்னணி மதகுரு ஒருவர் என்னிடம் கூறினார்.

கொழும்பு ஆட்சியாளர்கள் எதனை விரும்புகிறார்களோ அதனை ஏற்கும் நிலைக்குத் தமிழர்கள் தள்ளப்படுகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. இது

**தமிழில்: வண்ணமதி**

இலங்கையில் நீடித்து நிலைக்கக்கூடிய அமைதி ஏற்படுவதற்கான ஏதுநிலையைப் பெரிதும் பாதிக்கும்.

வீதிகளை மீள நிர்மாணித்துவரும் அரசு உட்கட்டுமான மேம்பாட்டுத் திட்டங்களையும் முன்னெடுத்து வருகிறது. வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான உறவுப் பாலத்தை அகலப்படுத்தும் வகையிலேயே அரசு செயற்பட்டு வருகிறது.

ஒவ்வொரு 500 மீற்றருக்கும் பதுங்குகுழிகளும் காப்பரண்களும் அமைக்கப்பட்டிருப்பதோடு இராணுவத்தின் செறிவான பிரசன்னமும் அங்குள்ளது.

இது இரண்டு சமூகங்களுக்கு மிடையிலான உறவு மேம்படுவதற் கான அம்சமாகத் தெரியவில்லை. இராணுவ ஆட்சி நிலவும் பிராந்தியம் ஒன்றில் இருக்கிறோமோ என்ற எண்ணத்தையே இந்த நிலைமை எமக்கு ஏற்படுத்துகிறது.

ஆயுதங்கள் எதுவுமற்ற அமைதியானதொரு சூழல் ஏற்படுத் தப்படுவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்ற கேள்வியையே இந்தப் பகுதியில் கடமையில் இருக்கும் பாதுகாப்புப் படையினரும் போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ்ப் பொதுமக்களும் கேட்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 48 ஆயிரம் பேர் மீள் குடியமர்த்தப்பட்டனர்

## அரச அதிபர் வேதநாயகம் தகவல்

யாழ்ப்பாணம், செப்.15

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 16 ஆயி ரத்து 769 குடும்பங்களைச் சேர்ந்த 48 ஆயிரத்து 528 அங்கத்தவர்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் வேதநாயகம் உயதனுக்கும் தெரிவித்தார்.

மீள்குடியேற்ற விடயம் தொடர்பாக அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்:

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலுமுள்ள 86 கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதில், 20 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டுள்ள துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 577 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 102 அங்கத்தவர்களும்,

15 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டுள்ள மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 466 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 577 அங்கத்தவர்களும்,

27 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டுள்ள ஒட்டுசுட்டான் பிரதேச அலுவலர் பிரிவில் 4 ஆயிரத்து 484 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 3305 அங்கத்தவர்கள் 26 கிராம அலுவலர் பிரிவுகளிலும்,

46 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டுள்ள கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவில் 6 ஆயிரத்து 242 குடும்பங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்து 544 அங்கத்தவர்கள் 25 கிராம அலுவலர் பிரிவுகளிலும் இதுவரை மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வன்னிப் பகுதியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியிருந்த மக்களே இவ்வாறு மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் தற்போது மக்கள் மீள்குடியேற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக விசுவமடு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் மக்கள் குடியேற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. படிப்படியாக ஏனைய பகுதிகளுக்கும் மக்கள் மீள்குடியேற்ற அனுமதி அளிக்கப்படும்- என்றார். (14)

# 10 குடும்பங்களுக்கு மலசலகூடம்

யாழ்ப்பாணம், செப். 15

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த 10 குடும்பங்களின் பாவனைக்காக மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மலசல கூடங்களை சமூக சேவைகள் அமைச்சின் உதவியுடன் அமைத்துக் கொடுத்ததாகப் பிரதேச செயலாளர் ரி.முகுந்தன் தெரிவித்துள்ளார்.

(க-313-315)

# கிளிநொச்சி மாவட்ட மீள்குடியமர்வின் பின்னர் 24 ஆயிரம் மாணவர்களின் கற்றல் செயற்பாடு ஆரம்பம்

## மாகாணக்கல்விப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், செப்.15

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மீள் குடியேற்றப்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் 24 ஆயிரத்து 794 மாணவர்கள் கற்றல் நடவடிக்கையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கிளிநொச்சி மாவட்டத்தில் 121 பாடசாலைகள் உள்ளன. அவற்றில் இதுவரைக்கும் 81 பாடசாலைகள் திறக்கப்பட்டுக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இங்குள்ள ஏனைய பாடசாலைகள் அப்பகுதியில் உள்ள மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டதும் இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தற்போது இயங்குகின்ற பாடசாலைகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் யாவும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இங்கு 24 ஆயிரத்து 794 மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளிலும் ஆயிரத்து 357 ஆசிரியர்கள் கற்பித்தல் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

# வாழ்விழந்தோர் அபிவிருத்திச் சங்கம் புலோப்பளையில் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், செப்.15

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக்கு உட்பட்ட பளை நகர புலோப்பளை வீதியில் வாழ்விழந்தோர் அபிவிருத்திச் சங்கம் இன்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இச் சங்கத்தின் தலைவரான சி.இராமலிங்கம், உப தலைவரான சி.சிவப்பிரகாசம் ஆகியோர் இதில் கலந்துகொள்வார்கள்.




இச்சங்கத்தினை அமைப்பதற்குப் பளை நகரத்தின் லண்டன் வாழ் மக்களினால் சேகரிக்கப்பட்ட நிதி உதவிகள் அனுப்பி வைக்கப்பட்டன. இதன் மூலம் வாழ்விழந்தோர் நன்மைகளைப் பெறக்கூடிய வகையில் சங்கம் தனது சேவையினை வழங்கவுள்ளதாக வாழ்விழந்தோர் அபிவிருத்திச் சங்கத்தின் உப தலைவரான சி.சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார். (க-313-315)

# பளை வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இல்லை; வேறு இடங்களைத் தேடிச் செல்லும் நோயாளிகள்

யாழ்ப்பாணம், செப்.15

பளை நகரத்தில் அமைந்துள்ள பொது வைத்தியசாலைக்கு நிரந்தரமாக வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது இந்த வைத்தியசாலையில் நிரந்தரமாக வைத்தியர் ஒருவர் இல்லாதபடியால் சாவகச்சேரி வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவரே பகுதி நேரத்தில் பதில் கடமையாற்றி வருகின்றார். இதனால் மதியம் 12 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை மட்டுமே வைத்தியசாலை இயங்கக் கூடியதாக உள்ளது. இதனால் மீள்குடியேறிய மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள இந்தப் பிரதேச மக்கள் சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பொதுவைத்தியசாலைகளையும், தனியார் வைத்தியசாலைகளையும் நாடுகின்றார்கள். வசதி குறைந்த மக்கள் தனியார் வைத்தியசாலைக்குச் செல்ல முடியாத நிலையில் இருப்பதோடு பொது வைத்தியசாலைகளைத் தேடி நீண்ட தூரம் அலைய வேண்டியுள்ளது.

எனவே இந்த மக்களின் சிரமங்களைப் போக்கிச் சிறந்த வைத்திய வசதிகளை வழங்கும் பொருட்டுப் பளை வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு இந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-313-315)

# நாகேந்திரபுரம் பெண்களுக்கு உடுபுடைவைப் பொதிகள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வழங்கினார்

போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி நாகேந்திரபுரம் கிராம மக்களில் 45 குடும்பங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பனர் சுரேஷ் பிரேமச்சந்திரனால் உடுபுடைவைப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

புளியம் பொக்கணையில் உள்ள நாகேந்திரபுரம் பகுதிக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் கிராமத்தின் மாதர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலந்துரையாடலில் குறித்த கிராமத்தில் பாதிக்கப்பட்ட பெண்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கணவரை இழந்த, தாய் தந்தையரை இழந்த மற்றும் தனித்து வாழும் பெண்களுக்கென உடுபுடைவைப் பொதிகள் சுரேஷ் பிரேமச்சந்திரனால் வழங்கப்பட்டன.

இதன்போது கருத்துத் தெரிவித்த கிராம மக்கள்:

காணிகளுக்கான உரிமைப் பத்திரங்கள் இன்மையால் மீள்குடியேற்றத்திற்கென தாம் சென்ற போதிலும் தமக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படவில்லை என்று கவலை தெரிவித்துள்ளனர்.

நாகேந்திரபுரம் பாடசாலையில் எண்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்ற நிலையில் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை அதே கிராமத்தில் உள்ள முன்பள்ளியில் முப்பது மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். அவர்களுக்கு கல்வி பயிற்றுவிக்கும் ஆசியருக்கு இதுவரையில் எந்தக் கொடுப்பனவும் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்ததுடன், முன்பள்ளி சீரமைக்கப்படாமையால் சிறார்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாகவும் சுட்டிக்காட்டினர்.

இதனை அடுத்து கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் மழலைகள் முன்பள்ளி ஆசிரியருக்கான ஒரு ஆண்டுக்கான கொடுப்பனவினை வழங்குவதற்கான ஏற்பாட்டினை தான் மேற்கொள்வதாகவும், முன்பள்ளியினை புனரமைப்பதற்கான நிதியுதவியினை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

# பச்சிலைப்பள்ளியில் 'நேர்ப்' திட்டத்தின் கீழ் வீடுகள் அமைக்க 240 குடும்பங்கள் தெரிவு

யாழ்ப்பாணம், செப்.15

வடக்கு,கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் (நேர்ப்) கீழ் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக்கு உட்பட்ட 8 கிராமங்களில் 240 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

முகாவிலில் 55 பேரும், மாசாரில் 65 பேரும், சோரன்பற்றில் 93 பேரும், தர்மக்கேணியில் 45 பேரும், அரசர் கேணியில் 15 பேரும் மீள் குடியேற்றம் செய்யப்படாத இத்தாவிலில் 12 பேருமாக மொத்தம் 240 பேர் நியாப் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை விசேட ஆணையாளரும் பிரதேச சபைச் செயலாளருமான சி.சிவப்பிரகாசம் வழங்கியுள்ளார்.

(க-315-313)

# மன்னாரில் படைத்தளங்கள் தரம் உயர்வை ஒட்டி பிரார்த்தனை

மன்னார்,செப்.15

மன்னாரில் இயங்கிவரும் தள்ளாடி இராணுவத் தலைமையகம், 215ஆவது படைப்பிரிவு, 212ஆவது படைப்பிரிவு ஆகிய படைத்தளங்கள் தரமுயர்த்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய திட்டத்தின் பிரகாரம் தள்ளாடி பிரதம இராணுவ முகாம் 54ஆவது பிரிகேட்டாகவும், 212ஆவது படைப்பிரிவு 541 ஆவது பிரிகேட்டாகவும், 215 ஆவது படைப்பிரிவு 542ஆவது பிரிகேட்டாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

இவற்றைக் குறிக்கும் விசேட பிரார்த்தனை நிகழ்வுகள் மன்னாரில் இடம்பெற்றன. மன்னார் மூர்வீதி முகைதீன் ஜூம்மாப் பள்ளியில் இடம்பெற்ற துவாப் பிரார்த்தனைகளில் இராணுவ உயர் அதிகாரிகளான மைத்திரி டயஸ், முகாந்தரம் மற்றும் சகல படைப் பிரிவின் அதிகாரிகள், இராணுவ வீரர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



கிளிநொச்சி நாகேந்திரபுரம் கிராமத்துக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் 45 குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு உடுபுடைவைகளை வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் மத்தியில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உரையாற்றுவதை முதலாவது படத்திலும், உடுபுடைவைகளைப் பெண்களுக்கு வழங்குவதை அடுத்துள்ள இருபடங்களிலும் காணலாம். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாலை நிகழ்த்தும் அற்புதங்கள்



அதிகாலை நிகழ்த்தும் அற்புதங்கள் பல. உதித்து உயர்ந்தெழும் சூரியன், மலர்களை மட்டுமா மலரச் செய்கிறது. வாழ்க்கையில் உயர விரும்பும் பலரையும் மலரச் செய்யும் பொழுதல்லவா அது!

நீங்கள் நேற்றுவரை நித்திரையில் ஆழ்ந்திருந்தால் இனியாவது அதிகாலையின் அதிசயங்களை அனுபவிக்க விடி காலையிலேயே விழித்தெழுங்கள்.ஆமாம் காலையில் துயில் எழும் பழக்கம் நமக்கு பல்வேறு நன்மைகளைத் தருகின்றன. அதிகாலையில் எழுவது ஆரோக்கியமும், அறிவும் தரும் என்கிறார் பராங்கிளின்.

விரைவாக எழுந்தால் அதிகாலையைப் போன்ற அமைதி உங்களிடமும் ஒட்டிக் கொள்ளும். வாகன இயக்கம், வானொலி, தொலைக்காட்சி இரைச்சல், பக்கத்து வீடுகளின் கூச்சல், குழந்தைகளின் அழுகுரல் என்று எதுவும் உங்களுக்குத் தொந்தரவு செய்யாது.

எங்கும் அமைதி நிலவ நீங்கள் நிம்மதியாகச் செயற்படலாம். அதிகாலையைப் போன்ற அருமையான பொழுதை வேறு எப்போதும் அனுபவிக்கவே முடியாது. அந்த வேளைதான் சிந்திக்க, செயற்பட, படிக்க, சுவாசிக்க என பலவற்றுக்கும் ஏற்றது.

காலையில் படுக்கையில் இருந்து துள்ளிக்குதித்து எழுந்திருங்கள். சோம்பேறித்தனமாக எழுந்தால் அன்றைய தினமே சோம்பலாகத்தான் இருக்கும். அவசரம் அவசரமாக வேலைகளைச் செய்ய வேண்டிவரும். பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில் சிரமம் ஏற்படும். அலுவலகத்திற்குச் செல்வதற்கு தாமதம் ஆகும். இப்படி அடுக்கடுக்கான சிரமங்கள் தொடர, நிம்மதியே போய்விடும்.

விரைவாக எழுந்துவிட்டால் பாதி வேலையை சூரியன் உதிக்கும் முன்பே முடித்துவிட்டு நிதானமாக இருக்கலாம். இதனால் மகிழ்ச்சியாக ஆரம்பிக்கும் நாள் இறுதிவரை இன்பமாகவே தொடரும்.

காலையில் விரைவாக எழுந்திருந்தால் காலை உணவை நிதானமாகச் சமைத்து ருசித்து சாப்பிடலாம். காலை உணவு, நலமான வாழ்வுக்கு தினமும் சாப்பிடும் உற்சாக டொனிக் போன்றது. சுறுசுறுப்புக்கும் உதவும். சோம்பேறித்தனமாகப் படுத்திருந்து காலை உணவை சாப்பிடும் நேரத்திற்கு எழுந்திருந்தால், பணிக்குச் செல்லும் அவசரத்தில் உணவை தவிர்க்கும் சூழல்கூட வரும். இதனால் எரிச்சலும், சோம்பலும் ஒட்டிக் கொள்ளும்.

காலையில் எழுந்து சந்தோஷமாக அமர்ந்து தேனீர் குடித்துக் கொண்டே பத்திரிகை படித்துவிட்டு பரபரப்பில்லாமல் காலை உணவைச் சாப்பிட்டால் கிடைக்கும் சுகமே சுகம்.

தேகப்பயிற்சி செய்ய உகந்ததும் காலைப் பொழுதுதான். மற்ற நேரங்களைவிட அதிகாலை வேளை தான் உடற்பயிற்சிக்கு ஏற்ற வேளை. நலமாக வாழ்வதற்காக நாம் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்று உடற்பயிற்சி. அதனால் கிடைக்கும் பலன்களும் பலபல. காலையில் உடற்பயிற்சி செய்வதை எந்தக் காரணத்திற்காகவும் நிறுத்தாதீர்கள்.

உங்கள் இலட்சியத் திட்டங்கள் பற்றி அதிகாலையில் சிந்தியுங்கள். அப்போது குழப்பங்களுக்குக் கூட தெளிவான வழி கிடைக்கும். எழுந்தவுடன் அன்று முடிக்க வேண்டிய வேலைகளைப் பட்டியலிட்டுக் கொள்ளுங்கள். உடனே இலட்சியப் பயணத்தைத் தொடங்குங்கள். வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

ஒவ்வொரு வேலையையும் சரியாகச் செய்து முடிக்க வேண்டுமானால் அதற்கு காலையில் எழுவது தான் சரியான செயல். ஒரு வேலையில் தாமதமானாலும் அடுத்தடுத்த தாமதங்கள் உங்கள் மதிப்பைக் குறைப்பதோடு, வேலைகளையும் முடக்கும்.

நீங்கள் சொல்வதெல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. காலையில் எழுந்திருக்கத்தான் முடியவில்லை என்கிறீர்களா? அது ஒன்றும் பெரிய காரியமில்லை. முதலில் சில நாள்கள் அலாரம் வைத்து எழுந்திருக்கலாம். அலாரத்தைப் படுக்கையில் வைத்தால் மனம் அணைத்துவிட்டு தூங்கத்தான் சொல்லும். எனவே எழுந்து சென்று நிறுத்திச் செய்யும் தொலைவில் அலாரத்தை வையுங்கள்.

(நன்றி: தொழில்நுட்ப இணையம்)

# சூரிய ஒளி முகசுருக்கத்தை ஏற்படுத்தும்

சூரிய ஒளியில் விட்டமின் டி உள்ளது. இது மனிதர்களின் உடல் நலத்திற்கு நன்மை பயக்கும் என்ற கருத்து நிலவுகிறது. எனவே மேற்கத்திய நாட்டவர்கள் கடற்கரையில் படுத்தபடி சூரிய குளியல் செய்கின்றனர்.

ஆனால் சூரிய ஒளி முகத்தில் சுருக்கத்தை ஏற்படுத்தும் என விஞ்ஞானிகள் தற்போது கண்டுபிடித்துள்ளனர். லாண்காஸ்டர் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் டிரேவர் மேக்மிலன், சாரா அல்லிசன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். அதன் மூலம் கண்ணாடி வழியாக ஊடுருவி வரும் சூரிய ஒளியில் நீண்ட நேரம் இருந்தால் முகத்தின் வசீகரம் கெட்டுவிடும். ஏனெனில் ஊடுருவி வரும் சூரிய ஒளியின் கதிர்கள் முகத்தில் சுருக்கத்தை ஏற்படுத்திவிடும். இதனால் 7 ஆண்டுகள் அதிகமாக முதுமையான தோற்றம் ஏற்படும். அதேபோன்று காரில் தொடர்ந்து பல மணி நேரம் பயணம் செய்யும் போதும் இது போன்ற நிலை உண்டாகும். குறிப்பாக ஏப்ரல் மாதத்தில் பயணம் செய்தால் கடுமையாகத் தாக்கும்சூரிய ஒளியால் முக சுருக்கம் ஏற்படும் என்றும் ஆய்வில் தெரியவந்துள்ளது

# எச்.ஐ.வி.யை குணப்படுத்தும் புதிய மாத்திரை

நமிபீயாவைச் சேர்ந்த மெர்டக் ஷார்ப் அன்ட் டூஹோம் எனும் மருந்து தயாரிப்பு நிறுவனம் ஏச்.ஐ.வி.யைக் குணப்படுத்தும் அட்ரிப்லா, ஐசென்ட்ரசஸ் எனும் புதிய மாத்திரையினைக் கண்டுபிடித்துள்ளதாக அறிவித்துள்ளது.

நமீபயாவின் நம்பா நகரில் உலக அளவில் மருந்து தயாரிப்புப் பொருள்களை சப்ளை செய்யும் மெர்டக் ஷார்ப் அன்ட் டூஹோம் நிறுவனம் எச்.ஐ.வி. பாதிக்கப்பட்டவர்களின் தொடக்க நிலையில் உள்ள எச்.ஐ.வி.-1 எனும் கிருமியினைக் குணப்படுத்தக்கூடிய மாத்திரையினைக் கண்டுபிடித்துள்ளது. இது குறித்த அறிக்கையினை நமீபய அரசின் சுகாரதாரத்துறையினரிடம் அளித்து ஒப்புதல் பெறவுள்ளதாகக் கூறியுள்ளது. விரைவில் மருந்துக் கடைகளில் விற்பனைக்கு வரவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

-(நன்றி: மருத்துவ இணையம்)


TOSHIBA
Leading Innovation >>>
e-STUDIO

உங்களிடம் டொஷீபா e-studio அச்சு இயந்திரங்களும் பிரதியெடுக்கும் இயந்திரங்களும் இருக்குமானால், தரமுயர்ந்த அச்சுப் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு பெரும் செலவு ஏற்படுமே என்று கவலைப்படத் தேவையில்லை. மிகக் குறைந்த செலவில் நிமிடம் ஒன்றிற்கு 18 மற்றும் 21 பக்கங்களை அச்சிடக்கூடிய e-studio 181/211/182/212 இயந்திரங்கள், இந்த வகையிலுள்ள அதிசிறந்த பிரிண்டர்கள், கொப்பியர்கள் மற்றும் ஸ்கேனர்களாக முன்னணி வகிக்கின்றன. எளிதான பாவனை, A3 அளவு வரையிலான ஆவணங்களை அச்சிடக்கூடிய வசதி, அதிக இடம் பிடிக்காத வடிவமைப்பு என்பவற்றின் மூலம் அவை உங்கள் அலுவலகத்தின் வினைத்திறனை அதிகரிக்கும். நீடித்த உழைப்பு, குறைந்த பராமரிப்புச் செலவு, சிக்கனமான மின்சக்தி நுகர்வு ஆகிய சிறப்பம்சங்களையும் கொண்ட டொஷீபா e-studio உங்கள் அலுவலகச் செலவுகளைக் குறைக்க அருந்துணையாகும்.

ஒவ்வொரு பிரதியிலும் 40% சேமிப்பு




e-STUDIO181
e-STUDIO211

Print Copy Scan

- ஸ்ராண்டட் 32 MB மெமரி
- Access code
- 1-999 பல்தொகுதிப் பிரதிகள்
- 300 x 300 dpi/ 600 x 600 dpi பிரிண்ட் ரிசொலூஷன்
- 350 தாள் காகித உள்வாங்கு திறன்
- Win 2000/xp/vista/Server 2003/2008/7 Os support
- மனுவல் டுப்ளெக்ஸ் பிரிண்டிங் / ரிக்கவர் பிரிண்ட்
- 25 - 200% வரை 1% கூடிச்செல்லும் பிரதியெடுப்பு விகிதம்
- மூலப் பிரதிகளாக தாள்கள்/ நூல்கள்/ 3-d பொருள்கள் ஏற்கப்படும்

e-STUDIO182
e-STUDIO212

Print Copy Scan Fax

- ஸ்ராண்டட் 112 MB மெமரி
- LCD மற்றும் ஒளியூட்டிய கட்டுப்பாட்டு பனெல்
- 25 - 200% வரை 1% கூடிச்செல்லும் பிரதியெடுப்பு விகிதம்
- 350 தாள் காகித உள்வாங்கு திறன்
- 1-999 பல்தொகுதிப் பிரதிகள்
- 2400 x 600 dpi பிரிண்ட் ரிசொலூஷன்
- Win 2000/xp/vista/Server 2003/2008/7 மற்றும் Mac x 10.2.4/10.3/10.4/10.5/10.6 Os support
- Access code/ Department code
- Scan-to-Email/ 1000 பக்கங்கள் ஸ்கேனிங்
- மூலப் பிரதிகளாக தாள்கள்/ நூல்கள்/ 3-d பொருள்கள் ஏற்கப்படும்

விருப்பத்தேர்வு - டுப்ளெக்ஸ் பிரிண்டிங் | PCL6 & PS3 emulation

உங்கள் பழைய பிரதியெடுக்கும் இயந்திரத்தைக் கையளித்து ரூ.40,000 வரை தள்ளுபடி பெறுங்கள்.*

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்:
அஷோக் - 0777 725241/ அலீம் - 0777 278472/ சஞ்ஜீவ - 0777 386909

அதிகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்:
JKOA
ஜோண் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டொமேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
320/1, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
011 2431576, 011 4702611 /பெக்ஸ்: 011 2431745
www.jkoa.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூர் உயர் பாதுகாப்பு வலயத்தில் பூசைகள், வழிபாடுகளின்றி ஆலயங்கள்

மூதூர், செப்.15

மூதூர் கிழக்கில் உள்ள சம்பூர் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்திற்குள் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்து ஆலயங்கள் உட்பட சுமார் 14இற்கும் மேற்பட்ட இந்து வழிபாட்டுத் தலங்கள் கடந்த 5 வருடங்களாக பூசை வழிபாடு கள் இன்றிக் காணப்படுவது குறித்து திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் மற்றும் பிரதேச மக்கள் மிகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

சம்பூர் பிரதேசம் அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக கடற்கரைச்சேனையின் ஒரு பகுதி, சூடைக்குடா, கூனித்தீவு, சம்பூர் உட்படப் பல பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் மீள்குடியேற்றம் இன்றித் தொடர்ந்தும் கிளிவெட்டி, பட்டித்திடல், மனைச்சேனை, கட்டைபறிச்சான் ஆகிய பதிக ளில் உள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளனர்.

ஈழத்து வரலாற்றுப் புகழ்மிக்க சம்பூர் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம் மற்றும் கடற்கரைச்சேனை சம்புக்களி பத்தினி அம்மன் ஆலயம் ஆகியன முக்கியமாக - குறிப்பிடத்தக்க இந்து ஆலயங்கள் ஆகும்.

சம்பூர் ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயத்தில் வழமைபோல் பூசையும், வருடாந்த கேதார கௌரி பூசையும் சம்புக்களி பத்தினி அம்மன் ஆலயத்தில் வருடாந்த வைகாசி சடங்கும் பூசையும் நடத்துவதற்கு அப்பகுதி ஆலய பரிபாலனசபையினர் அப்பகுதிக்கான பாதுகாப்புக் கட்டளை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோதும், பாதுகாப்பு அமைச்சின் அனுமதிதான் இதற்குத் தேவை என அதிகாரிகள் தெரிவித்தனர். இவ்விடயம் தொடர்பாக அப்பகுதி ஆலய பரிபாலன சபையினர் மூதூர் பிரதேச செயலாளர் ஊடாக இவ் அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.




# கல்முனை மாநகரசபை உறுப்பினர் காத்தமுத்து கணேஸின் பதவி பறிப்பு

கல்லாறு, செப்.15

கல்முனை மாநகரசபை உறுப்பினர் காத்தமுத்து கணேஸ் மாநகரசபை உறுப்பினர் பதவியில் இருந்தும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்புரிமையில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

இவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு கல்முனை மாநகரசபை உறுப்பினராக வெற்றிபெற்றிருந்தார். இவர் கடந்த காலங்களில் கட்சிக் கட்டுப்பாட்டை மீறிச் செயற்பட்டார் எனக் கட்சி இவர் மீது குற்றம் சுமத்தியிருந்தது.

இவர் கடந்த நாடாளுன்றத் தேர்தலில் மாற்றுக் கட்சியில் போட்டியிட்டிருந்தார். இதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாக அறிவித்திருந் தது. கட்சியின் செயலாளர் தேர்தல்கள் திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

இதனடிப்படையில் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் பத்தாம் பிரிவின் கீழ் தேர்தல்கள் அலுவலகம் இவரின் உறுப்புரிமை இழக்கப்பட்டுள்ளதாக சட்டரீதியாக அறிவித்துள்ளது.

# அக்கரைப்பற்றில் வீட்டின் மீது அதிகாலையில் துப்பாக்கிச் சூடு

தமண, செப். 15

அக்கரைப்பற்றைச் சேர்ந்த சற்.எம்.இப்றாஹிம் என்பவரின் வீட்டின் மீது கடந்த சனிக்கிழமை அதிகாலை1.20 மணியளவில் இனந்தெரியாதவர்களினால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரவு வேளையில் அனைவரும் நித்திரையில் ஆழ்ந்திருந்த சமயம் வீட்டின் மேல் மாடியை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. வீட்டின் மீது நான்கு துப்பாக்கி ரவைகள் பாய்ந்துள்ளன. எனினும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட வர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

மகள் மீது துஷ்பிரயோகக் குற்றச்சாட்டின் பேரில், கடந்தமாதம் கல்முனை மேல் நீதிமன்றத்தினால் அக்கரைப்பற்றைச் சேர்ந்த நான்கு இளைஞர்களுக்கு கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் இச்சம்பவத்துடன் தொடர்புபட்டிருக்கலாம் என அக்கரைப்பற்றுப் பொலிஸாரிடம் வீட்டுச் சொந்தக்காரர் சந்தேகம் தெரிவித்துள்ளார். இதனையடுத்து விசாரணைகளை அக்கரைப்பற்றுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வடமுனை கிராம அபிவிருத்திக்கு 75 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

மட்டக்களப்பு, செப்.15

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமமான வடமுனை மீள்குடியேற்றக் கிராமத்தின் அபிவிருத்தி வேலைகளுக்காக கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் 75 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

பல தேவைக் கட்டடம், பாலர் பாடசாலை, பொது மலசலகூடம், போக்குவரத்துக்கான சிறிய ரக உழவு இயந்திரம், விவசாய பொதுக் கிணறு,கால்நடை வளர்ப்பு ,நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்களுக்குத் தோணிகள் மற்றும் வலைகள் என்பன இதனுள் உள்ளடக்கப்படுகின்றன.

# மூதூரிலிருந்து தமிழகத்துக்கு கடத்தப்பட்ட முருகன் சிலை மீண்டும் இலங்கைக்கு

## தமிழக மாநில அரசு அறிவிப்பு

திருகோணமலை, செப்.15

மூதூர் வெருகல் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் இருந்து தமிழ் நாட்டுக்குக் கடத்தப்பட்ட முருகன் சிலையை மீண்டும் இலங்கை அரசிடம் கையளிப்பதற்குத் தயாராக இருப்பதாகத் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோவிலில் இருந்த இந்தச் சிலை 2006 ஆம் ஆண்டு தமிழகத்துக்குக் கடத்தப்பட்டது.

பஞ்சலோகத்தினால் உருவாக்கப்பட்ட இந்த முருகன் சிலை தற்போது திருச்சியில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளது எனத் தமிழகப் பொலிஸ் உயரதிகாரியான ராஜேந்தி ரன் தெரிவித்தார்.

இலங்கையில் அமைதியின்மை நிலவிய காலப்பகுதியில் இந்தச் சிலை இந்தியாவுக்குக் கடத்தப்பட்ட போது தமிழகப் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளின் மூலம் குறித்த முருகன் சிலை இலங்கைக்குச் சொந்தமானது எனத் தெரிந்து கொண்டதுடன் அதனை மீண்டும் இலங்கை அரசிடம் ஒப்படைக்கத் தயாராக இருப்பதாகவும் பொலிஸ் அதிகாரி ராஜேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

---

# ஆழிப்பேரலையின் போது சிறையிலிருந்து தப்பி சிங்கராஜ வனத்தில் வாழ்ந்த கைதி சிக்கினார்!

## மரத்தில் பரண் அமைத்து உயிர்வாழ்ந்தாராம்

கொழும்பு, செப். 15

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது மாத்தறை சிறையிலிருந்து தப்பிய கைதி ஆறு வருடங்களின் பின் கைது செய்யப்பட்டார்.

2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது மாத்தறை சிறைச்சாலையிலி ருந்து தப்பிச் சென்ற மேற்படி கைதி சிங்கராஜ வனத்தின் அடர்ந்த பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

காட்டு விலங்குகளை வேட்டையாடி நெருப்பில் வாட்டி உட்கொண்டு மரமொன்றில் அமைக்கப்பட்ட பரணில் கடந்த ஆறு வருடங்களாக இவர் வாழ்க்கை நடத்தி வந்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சமயம் கித்துள் மரமொன்றிலிருந்துகள் இறக்கிக் கொண்டிருந்தார் என்று பொலிஸார் தெரிவித் தனர்.

''பாலம் கெட்டா'' என்று அழைக்கப்பட்ட மேற்படி கைதி அக்குரஸ்ஸ பொலிஸ் பிரிவில் நடந்த கொலைச் சம்பவத்துக்காக கைது செய்யப்பட்டு மாத்தறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

ஆழிப்பேரலை சமயம் ஏற்பட்ட அல்லோல கல்லோலத்தை சாதகமாக்கிக் கொண்டு நில்வளா கங்கையில் பாய்ந்து நீந்தித் தப்பியுள்ளார்.

## யானைகள் சரணாலயத்தில் கூடுதலான வசதிகள்

மாவனல்லை, செப்.15

இலங்கையின் பிரசித்திபெற்ற இடங்களில் ஒன்றான பின்னவலை யானைகள் சரணாலயம் உல்லாசப் பயணிகளின் நன்மை கருதி அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் சமாதானச் சூழல் நிலவுவதால் பெருமளவு உள்ளூர், வெளியூர் உல்லாசப் பயணிகள் பலரும் இந்நாள்களில் பின்னவலை யானைகள் சரணாலயத்திற்கு வருகை தருகின்றனர்.

# மாணிக்கக்கல் வேட்டையில் கான்ஸ்டபிள் உயிர் இழப்பு!

இரத்தினபுரி,செப். 14

இரத்தினபுரி, குறுகங்கையில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்தவர்களைப் பிடிக்கச் சென்ற கான்ஸ்டபிள் ஆற்றில் மூழ்கி பரிதாபமாக மரணமாகியுள்ளார்.

இவ்வாறு மரணமாகியவர் எஹலியகொடை பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்த 46 வயதானவரும், இரத்தினபுரி மல் வல, மீஹிட்டிய பிரதேசவாசியும், இரு பிள்ளை களின் தந்தையுமான எம்.டீ. ஜய ரத்ன என்பவ ரென இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர்.

ஹெலியகொட பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்த இவர் அண்மையில் இரத்தினபுரி பொலிஸ் பிரிவில் புதிதாக அமைக்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு பிரிவுக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வண் ணம் குறுகங்கையில் சட்டவிரோத மாணிக் கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்தவர்களை கைது செய்ய முயன்ற பொலிஸ் குழுவுடன் இவர் சென்ற போதே ஆற்றில் மூழ்கி மரண மாகி யுள்ளார். நீரில் மூழ்கிய இவரை உடனி ருந்த பொலிஸார் மீட்டு இரத்தினபுரி வைத்திய சாலையில் சேர்த்த போதும் சிகிச்சைகள் பலனளிக்காமல் அவர் உயிரிழந்துள்ளார்.




# கிழங்கு செய்கை சீரழிந்தால் வெளிமடை விவசாயிகள் பாதிப்பு

## அடகுநகையை மீட்கமுடியாது போகும் நிலை

வெளிமடை, செப்.15

கிழங்குச் செய்கைக்காக வெளிமடை விவசாயிகள் 200 கோடி ரூபா நகைகளை அடகு வைத்திருக்கிறார்கள். இருப்பினும் எதிர் பார்த்த விளைச்சலும், வருவாயும் கிடைக்கத் தவறினால் நகைகள் மூழ்கி விடும் அபாயம் இருக்கிறது எனத் தெரிவிக்கப் படுகிறது.

வெளிமடை மற்றும் ஊவா பரணகம பிரதேச விவசாயிகள் கடன் சுமையால் வாடிப் போயுள்ளனர் எனவும், கிழங்கு செய் கைக்காக ஒன்பது தனியார் வங்கிகளிலும், அடகு நிலையங்களிலும் அடகு வைக்கப் பட்டுள்ள நகைகளின் பெறுமானம் 200 கோடி ரூபாவுக்கும் அதிகமாக உள்ளது என வும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் வெளிமடை பிரதேச செயலாளரும், முன்னாள் விவசாய சேவை உதவி ஆணையாளருமான எஸ்.பீ. ஜயசுந்தர பின்வருமாறு தெரிவித்தார்.

''கிழங்கு மற்றும் மரக்கறி பயிர்ச் செய்கைக்காக விதைகள், உரம், இரசாயனப் பொருள்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதற்காக விவசாயிகள் நகைகளை அடகு வைப்பது வழக்கம்.

அறுவடையின் பின் அந் நகைகள் மீட்கப்படும். அறுவடை குறைந்தாலோ அல்லது விலை வீழ்ச்சியடைந்தாலோ நகைகள் மூழ்கிவிடும் அபாயம் உண்டு.

இதன் காரணமாக இப்பிரதேச இளைஞர்கள் கட்டட நிர்மாணங்களில் உதவியாளர்களாகவும், யுவதிகள் ஆடைத் தொழிற்சாலைகளிலும் பணிபுரிய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது''- என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# திறந்த பல்கலை கற்கை நெறியில் மலையக மாணவர்கள் ஆர்வம்

கண்டி, செப்.15


''திறந்த பல்கலைக்கழகத்தில் கற்கை நெறி மேற்கொள்ளும் மலையக மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் திறந்த பல்கலைக்கழகத் துக்கான கட்டடத் தேவை ஏற்பட்டுள்ளது. இக்கட்டடத்தைப் பெற்றுக்கொடுக்கத் தேவையான முயற்சிகள் எடுக்கப்படும்.'' இவ்வாறு தெரி வித்தார் மத்திய மாகாண தமிழ்க்கல்வி, இந்து கலாசார அமைச்சர் அனுஷியா சிவராஜா.

திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளரும், இணைப்பாளருமான கலாநிதி எஸ். சந்திரபோஸுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னரே அமைச்சர் அனுஷியா சிவராஜா இதனைத் தெரிவித்தார்.

மலையகத்தில் ஹட்டன் நகரில் திறந்த பல்கலைக்கழகப் பாடநெறிகளுக்கான முன்னெடுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் போதிய கட்டட வசதியில்லை. இந்த குறைபாடு, உரியவர்களின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் அனுஷியா சிவராஜா தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நீங்கா நினைவலைகள்



தாய்மடியில்
23.12.1923

ஆண்டவன் அடியில்
16.08.2010

# அமரர் சு.வி. முருகேசு

(பிரபல தொழிலதிபர், **SVM** கூட்டு நிறுவனங்கள்)

ஆண்டவனின் பாதங்களையடைந்த எம் ஐயா!
மாதம் ஒன்று கடந்தாலும் - எங்கள்
மனதில் இருந்து உங்கள் நினைவுகள் போகாது ஐயா!
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உங்களிடம்
கற்றவையும், நீங்கள் கற்பித்தவையும் எங்களால் மறக்க முடியாது.
வாழ்க்கை என்றால் உழைப்பு மட்டும் இல்லை
இறை பக்தி, சமூக சேவை, மற்றவர்களை மதித்தல்
என்றெல்லாம் எங்களுக்குப் புரிய வைத்தவர் நீங்கள் - ஐயா
நீங்கள் எங்களுடன் இல்லை என்றாலும்
நாங்கள் உங்கள் நினைவுகளுடன் நீங்காமல் வாழ்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!


*171டி, பொன்சேகா வீதி,*
*கொழும்பு -05, 0114378676*

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(570890)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நீங்காத நினைவஞ்சலி



# அமரர் எஸ்.வி. முருகேசு

**(பிரபல தொழிலதிபர், SVM கூட்டு நிறுவனங்கள்)**

**தாய் மடியில்:**
**23.12.1923**

**ஆண்டவன் அடியில்**
**16.08.2010**

ஆண்டவனின் பாதங்களையடைந்த எம் ஐயா!
மாதம் ஒன்று கடந்தாலும் - எங்கள்
மனதில் இருந்து உங்கள் நினைவுகள் போகாது ஐயா!
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உங்களிடம்
கற்றவையும், நீங்கள் கற்பித்தவையும் எங்களால் மறக்க முடியாது.
வாழ்க்கை என்றால் உழைப்பு மட்டும் இல்லை
இறை பக்தி, சமூக சேவை, மற்றவர்களை மதித்தல்
என்றெல்லாம் எங்களுக்குப் புரிய வைத்தவர் நீங்கள் - ஐயா
நீங்கள் எங்களுடன் இல்லை என்றாலும்
நாங்கள் உங்கள் நினைவுகளுடன் நீங்காமல் வாழ்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*154, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம். 021-222 8899*

உரிமையாளரும், ஊழியர்களும்
ச.வி.முருகேசு நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் இறுதிக் கட்டத்தில் களத்துக்கு செய்தியாளர்களை அனுப்பாமல் அரசும் இராணுவமும் தவறிழைத்துவிட்டன

## மூத்த பத்திரிகையாளர் மணிக் டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, செப். 15

''இலங்கையில் போரின் இறுதிக் கட்டத்தில் செய்தியாளர்களை களத்துக்குச் செல்வதில் இருந்து பெரும்பாலும் தவிர்த்ததன் மூலம் இலங்கை அரசும், இராணுவமும் தவறிழைத்திருக்கின்றன''

-. இவ்வாறு மூத்த பத்திரிகையாளர் மணிக் டி சில்வா கூறியுள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் நேற்று முன்தினம் சாட்சியமளித்தபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தப் போர்க் காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டார்கள் என்று வெளிநாட்டு மற்றும் உள்ளூர் செய்தியாளர்கள் மீது அவ்வப்போது இலங்கை அரசு குற்றஞ்சாட்டி வந்துள்ளது.

சில அரச ஊடகங்களின் செய்தியாளர்களைத் தவிர, ஏனைய செய்தியாளர்களை அதிகாரிகள் போர்ப் பகுதிக்கு அருகே செல்ல அனுமதிக்காததால், தாம் கேள்விப்பட்டதை மாத்திரம் வைத்துக் கொண்டே பல செய்திகள் வெளிவந்தன. அதனால்தான் போரில் செய்தி ஊடகங்கள் ஆக்கப்பூர்வ பங்காற்றவில்லை.

முன்னர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருக்கும் செய்தியாளர்களின் நிலைமையை விடுதலைப் புலிகளும் கடுமையாக்கியிருந்தனர்.

போரின்போது யார் என்ன செய்தார்கள் என்பதை வைத்து பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் எந்தப் பலனும் கிடையாது.

அதற்குப் பதிலாக அனைவரது மனக் காயங்களும் ஆற்றப்பட வேண்டும் என்பதை நாடு அங்கீகரிக்க வேண்டும். அனைத்து மக்களும் சமமாக நடத்தப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களினதும், இராணுவத்தினதும் வாழ்க்கையை வழமைக்கு திரும்பச் செய்யும் நடவடிக்கைக்கு உதவும் நிதிக்காக இலங்கையர் ஒவ்வொருவரும் ஒரு வரியைச் செலுத்த வேண்டும்.

இலங்கையின் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் அடிமட்டத்தில் எந்த விதமான இனமுரண்பாடும் கிடையாது.

-- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

கல்பேட் புறோயிலர் தினமும் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். **நல்லூர் பாம் செவிறர்,** *19, முருகேசர் லேன், நல்லூர்.*

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

விகிர்தி வருஷம் ஆவணி மாதம் 22 ஆம் நாள் (07.09.2010) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தாயார்

திருமதி

### பஞ்சாட்சரக்குருக்கள் இராசம்மா

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும்.

16.09.2010 வியாழக்கிழமை காலை 10 மணி தசாகம்
17.09.2010 வெள்ளிக்கிழமை காலை 10 மணி ஏகோதிஷ்டம், மாசியம்
18.09.2010 சனிக்கிழமை காலை 10 மணி சபிண்டீகரணம்.
19.09.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி கிருஹயக்ஞ (மதிய போசனம்)

மேற்படி தினங்களில் வந்து கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவாச்சாரிய பீடம்,
அம்மன் கோயில், ஊரெழு மேற்கு,
சுன்னாகம். தொ.பே.0212240828

குடும்பத்தினர்.

**தொழிற் பயிற்சிகள்**

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தொழில்நுட்பத் துறையில் இலகுவாக தொழில் வாய்ப்பை பெறுவதற்கான பயிற்சிகள்

* ஏயர் கொண்டிசனிங் — காலம்: 6 மாதம்
* றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங் — காலம்:10 மாதம்
* Mobile Phone Repairing — காலம்: 3 மாதம்

சகல பயிற்சிகளும் செய்முறைப் பயிற்சியளிக்கப்பட்டு பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சிகள் ஆரம்பம்: 15.09.2010 புதன், 18.09.2010 சனி

விவரங்களுக்கு:

**JAFFNA TECHNICAL INSTITUTE**

No. 45, மணிக்கூட்டு வீதி (பெருமாள் கோயில் முன்பாக), யாழ்ப்பாணம். தொ.பே. 0718561654, 0779254078

◆ A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவியரே!
◆ வெளிநாடு செல்ல விருக்கும் மங்கையரே!
◆ உள்ளூரில் தொழில் புரிய விரும்பும் நங்கையரே!
◆ இல்லத்தரசிகளே! மற்றும் ஆர்வமுள்ள மகளிரே!

**இதோ உங்களுக்கான 3மாத பயன்மிகு பயிற்சிகள்**

**கிழமைநாள் பயிற்சிகள் ஆரம்பம்: 22-09-2010**

* கேக் ஐசிங்
* உணவு தயாரித்தல்
* கூந்தல் அலங்காரம்
* பப்றிக் வர்ணம் தீட்டுதல்
* கைவேலை
* பூவேலை

மேற்குறித்த பயிற்சிகளின் நடுப்பகுதியில் 15 நாள் Facial, மணப்பெண் அலங்காரம், Pedicure, Manicure, முடிஅயன்செய்தல், Perming, நிறமூட்டுதல், முடிவெட்டுதல் பயிற்சிகளும் நடைபெறும்.

தையல் அறிவு அற்றவர்களுக்கான **6மாத உடை தயாரித்தல் பயிற்சிகள்**
தையல் தெரிந்தவர்களுக்கான 15 நாள் சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ், சுரிதார், சட்டை, Skirt தைக்கும் பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.

*மேற்குறிப்பிட்ட தையல் பயிற்சிகள் சனி, ஞாயிறு தினங்களிலும் நடைபெறவுள்ளன.*

ஆரம்பம்: 19-09-2010 (ஞாயிறு)

மேலும் விபரங்களை தினமும் பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

25வது ஆண்டில் **கலாலயா** பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

இந்த அரிய வாய்ப்பினைத் தவறவிடாதீர்கள்!

2009 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியின் பாரிய வெற்றியின் பெருமிதத்துடன் Pico Events வழங்குகிறது.

Organized by pico Events

அனுமதி இலவசம்

**செப்டம்பர் 18-19ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் மத்திய கல்லூரியில்**



யாழ் கல்விக் கண்காட்சியானது அதிகரித்து வரும் கல்வி, உயர்கல்வித் தேவைகளை வடமாகாணத்தில் நிறைவு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னோடி கண்காட்சியாகும். முதலாவது கண்காட்சியின் வெற்றியின் அடிப்படையில், யாழ்ப்பாணத்து மாணவர் சமூகத்தினை நேரடியாக ஒரேயிடத்தில் பார்ப்பதற்கு விரும்பும் எவருக்கேனும் இதுவே பொருத்தமான இடமாகும். முதலாண்டு கண்காட்சியைப் போன்றே இந்நிகழ்வும் உலகின் பலபாகங்களிலுமுள்ள முன்னணி கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை பிரதிபலிப்பதாக இருக்கும்.

**காட்சிப்படுத்தப்படும் அனைத்துப்பிரிவுகள்**

கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், வணிகக்கல்லூரிகள், மற்றும் பொறியியல், மருத்துவ, மருந்தாக்க, சுகாதார, விமானசேவை, தகவல் தொழில்நுட்பம், பல்லூடகம், இணைய வடிவமைப்பு, முகாமைத்துவம், வர்த்தகம் என்பவற்றிற்கான பயிற்சி நிறுவனங்கள்.

நிர்வாகம், மனிதவள அபிவிருத்தி, விற்பனையும் சந்தைப்படுத்தலும், வங்கியியல், சட்டம், கணக்கீடு, புதுத்தோற்ற வடிவமைப்பு.


ஆடைதயாரிப்பு, அழகுக்கலையும் ஆட்கள் அலங்கரிப்பு, கட்டடக்கலையும், நில அளவீடும், ஹோட்டல்துறை மற்றும் உணவு வழங்கல், மொழிகள், இசைநடனம், மயக்கமூட்டற் கற்கைகள், தொழிற் பயிற்சி மற்றும் ஆதாரசேவைகள் (நூல்கள், வெளியீடுகள், கல்விசார் துணைக்கருவிகள், கணினி, காகிதாதிகள்)

JEF

Jaffna Education Fair 2010

BRITISH COUNCIL — Main Sponsor
Co-Sponsors
Daily News — Print Media Sponsor
உதயன் — Official Tamil Newspaper
Official Electronic Media Sponsor
pico — Official stall contractor
Ministry of Education & Ministry of Higher Education
Northern Provincial Council
Governor's Sub Office, Northern Province

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Your child's future is in safe hands with one of the top global education providers

Complete an Australian degree at acbt with the option of transferring to many Australian or UK universities

Navitas, Australia, is among the top global education providers, and as a part of it, acbt is Sri Lanka's pioneer and leading education provider. At acbt we pride ourselves on offering the same standards which make Navitas a world leader. If you are after O/Ls or A/Ls, come talk to our experienced and knowledgable counsellors and discover the pathway to a globally-recognised international degree from ECU, Australia.

MBA (International)

| Undergraduate Programmes | University Foundation Level (UF/L) |
| --- | --- |
| • Diploma in Business | • Certificate in Business |
| • Diploma in IT | • Certificate in IT |
| • Bachelor of Business | • Certificate in Engineering |
| • Bachelor of Computer Science | • Certificate in Science |

ECU CRICOS Provider code 00279B

The 7th Frontier

**Australian College of Business & Technology (acbt)**
**Colombo College:** 442, Galle Road, Colombo 03.
T: **2565511** Hotline: **077 3000 900**
E: **info@acbt.lk** W: **www.acbt.net**

**Kandy College:** 3A, Mahamaya Mawatha, Kandy.
T: **081-2205800** Hotline: 0772 27 33 33

**Enrol now for the September intake.**
Students with pending A/L results are welcome

acbt

in association with ECU

# 2 ஸ்ட்ரோக் என்ஜின் ஒயில்

## சிறந்த இயந்திர பாதுகாப்புக்கு




LAUGFS OIL

# எல்லா 2-ஸ்ட்ரோக் திரீ வீலர்களுக்கும்

## சிபாரிசு செய்யப்பட்டது

**MOTOTEC 2T PLUS,** சர்வதேச தரத்தின் கீழ் 2 ஸ்ட்ரோக் திரீ வீலர்களுக்கு விசேட மாத உற்பத்தி செய்யப்பட்டது. உங்கள் திரி வீலர்களுக்கும் உயர்தர செயல்பாடு, தரம், மற்றும் நீண்ட நாள் பாவனையை உறுதிபடுத்துகிறது.

யாழ்ப்பாணத்தில் ஏக விநியோகத்தர்கள்:
**சுரேஷ் மோட்டர்ஸ் அன்ற் என்ஜினியர்ஸ்**
71, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-7900800
ஹொட்லைன்: 0777632454


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**



வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை விணடிப்பீர்கள். உதவி கேட்ட சிலருக்கு கொடுக்க மனம் இல்லாமல் கையை விரிப்பீர்கள். போட்டிகள், எதிர்ப்புகள் அதிகரிக்கலாம். சிலர் உங்களின் நல்ல எண்ணத்தை புரிந்து கொள்ளாமல் நடக்கலாம். சிலரைச் சந்திக்க முற்பட்டு அது முடியாமல் போகலாம். தண்டச் செலவுகள் நேரும்.

**இடபம்**



பிள்ளைகளால் வீட்டில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். உடன் பிறப்புக்கள் உதவிகரமாக இருப்பர். அதிக செலவாகும் என நினைத்த காரியம் ஒன்று குறைந்த செலவில் முடியலாம். உறவினர்களுக்காக சிறு தொகையை செலவு செய்வீர்கள். நண்பர்கள் சிலர் உங்களுக்காக பிணை கொடுக்கலாம். கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும்.

**மிதுனம்**



கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பல நாள்களாக தள்ளி வைத்த வேலை ஒன்றை இன்று வெற்றிகரமாகச் செய்வீர்கள். கடனாகக் கொடுத்த பணம் திரும்ப வரும். அயலவர் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். உங்களின் புத்திசாலித்தனமான செயற்பாடுகளைப் பார்த்து மற்றவர்கள் வியப்படைவர்.

**கடகம்**



எதிர்காலம் பற்றிய கவலைகள் அதிகரிக்கும். மற்றவர்கள் சாதித்த ஒரு விடயத்தை, உங்களால் சாதிக்க முடியவில்லையே என வருத்தம் அடைவீர்கள். வயிறு உபாதைகள், வாயு உபாதைகளால் அவதிப்படலாம். எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். பொலீஸ் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். நீண்ட தூர பயணங்கள் செல்லலாம்.

**சிங்கம்**



மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனி போல விலகி விடும் நாள். பல நாள்களாக உங்களின் வீட்டிற்கு வராத உறவினர்கள் வரலாம். தாயார் உடல் நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை அவசியம். மாமன், மைத்துனர்கள் வழியில் எதிர் பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். அரசியல் வாதிகளுக்கு செல்வாக்கு அதிகரிக்கும்.

**கன்னி**



உங்களின் பிரச்சினை ஒன்றை மற்றவர்களிடம் சொல்லி யோசனை கேட்பீர்கள். புதிய வருமானத்திற்கு அடித்தளம் அமைப்பீர்கள். நீண்ட நாள்களாக பேசாத நண்பர் ஒருவரை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசலாம். மனதில் இனம் புரியாத சந்தோஷம், நிம்மதி குடிகொள்ளும் நாள். நாடி வந்த சிலருக்கு இல்லை என்று சொல்லாமல் உதவுவீர்கள்.

**துலாம்**



உறவினர்கள் சிலர் உங்களை விமர்சிக்கலாம். நீங்கள் விரும்பாத ஒருவரை முக்கியமான இடத்தில் சந்திக்கலாம். சில வேலைகளை செய்ய திட்டமிட்டு, பின்னர் திடீரென மாற்றி அமைப்பீர்கள். அயலாருடன் பழங்கதைகள் பேசி நேரத்தை விணடிப்பீர்கள். மனைவி, குழந்தைகளின் விருப்பங் களை நிறைவேற்றி வைப்பீர்கள்.

**விருச்சிகம்**



மனக் குழப்பங்கள் நீங்கி, நிம்மதி குடிகொள்ளும் நாள். பிடித்தமான ஒரு பொருளை அதிக விலை கொடுத்தாவது வாங்குவீர்கள். புதிய முயற்சி ஒன்றில் இறங்கலாம். என்றோ வருவதாக சொன்ன உறவினர்கள் சிலர் இன்று உங்களின் வீட்டிற்கு வரலாம். எந்த வேலையையும் மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்ய முற்படுவீர்கள்.

**தனுசு**



வீட்டைச் சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். ஒரு செலவை நினைத்து கவலைப்படும் நேரத்தில் மற்ற சில செலவுகளை எதிர்கொள்ளலாம். உங்களுக்கு வாக்குக் கொடுத்த சிலர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். மறதியால் அவதியுண்டு. மனதிற்கு சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம்.

**மகரம்**



வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள். நாடி வந்த ஒருவருக்கு மற்றொருவரிடம் வாங்கிக் கொடுத்தாவது உதவுவீர்கள். நண்பர்கள் வட்டம் விரிவடையும். எந்த விடயத்திற்காகவும் பெரிய அளவில் அலட்டிக் கொள்ளாமல் நிதானமாகச் செயற்படுவீர்கள். வீட்டிற்கு வரும் சிலரை உபசரித்து அவர்களின் மனதில் இடம் பிடிப்பீர்கள்.

**கும்பம்**



எண்ணங்கள் நிறைவேறும் நாள். ஓய்வாக இருக்காமல் ஏதாவது வேலைகளைச் செய்து கொண்டிருப்பீர்கள். உறவினர் ஒருவர் வீட்டிற்கு வரலாம். விரும்பிய உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். பெரிய பிரச்சினையாகி விடுமோ என பயந்த விடயம் ஒன்று சுமுகமாக முடியலாம். அயலாருக்கு நல்ல யோசனைகள் சொல்வீர்கள்.

**மீனம்**



அலுப்பு, சலிப்பு ஆள்கொள்ளலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலை ஒன்று முடியாமல் அவற்றை நீங்களே மீண்டும் செய்யலாம். பழைய நண்பர்கள் மூலம் புதிய நண்பர்களின் நட்பு கிடைக்கும். சுயநலமாக செயற்படும் உறவினர்களைக் கண்டு எரிச்சல் அடையலாம். மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுக்கலாம்.

---

# ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை ரத்துச்செய்யக்கோரிய சரத்பொன்சேகாவின் மனு விசாரணைக்கு ஏற்பு

கொழும்பு, செப். 15

கடந்த ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை ரத்து செய்யுமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துகொள்ளப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் அசோக்க என்.சில்வா தலைமையிலான ஐந்து நீதியரசர்களை கொண்ட குழாம் முன்னிலையிலேயே இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணைகளின்போது நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா நீதிமன்றில் முன்னிலைப் படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை சிறைச்சாலை அதிகாரிகள் வழங்க வேண்டும் என அவர் சார்பாக நீதிமன்றில் ஆஜரான வழக்கறிஞர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனையடுத்து சரத் பொன்சேகா இன்று காலை 10 மணிக்கு உயர்நீதிமன்றில் சமூகமளிக்கலாம் எனவும் பின்னர் பிற்பகல் 2.30 மணிக்கு இராணுவ நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் கலந்துகொள்ளலாம் எனவும் நீதிமன்றத்தால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய விசாரணைகளின்போது வழக்கறிஞர் டி.எஸ். விஜேசிங்ஹ முன்னிலையாகி சில ஆட்சேபனைகளை தெரிவித்தார்.

இந்த விசாரணைகளுக்கு உரிய ஏதுநிலையோ அல்லது ஆதார பூர்வமான ஆவணங்களோ சமர் பிக்கப்படாத நிலையில் மனுவை ஆரம்ப நிலையிலேயே தள்ளுப்படி செய்யும்படி வேண்டிக்கொண்டார்.

இதுதவிர பல குற்றச்சாட்டுக்கள் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் ஆவண சான்றுகளோ அல்லது உண்மை தன்மையோ இல்லை என்பதும் பிரதிவாதி சார்பான வழக்கறிஞர் நீதிமன்றத்திற்கு தெரிவித்தார்

இந்தநிலையில் உயர்நீதிமன்ற விசாரணைகள் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் என நீதியரசர் குழாம் உத்தரவிட்டுள்ளது. (சி)

# இந்தியாவில் கைதான இலங்கை மீனவர் விரைவில் விடுதலை

கொழும்பு, செப். 15

இந்தியக் கடல் எல்லையில் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல இலங்கை மீனவர்களும் எதிர்வரும் இரண்டு மாதகாலப் பகுதிக்குள் விடுதலை செய்யப்படுவார்கள் எனக் கடற்றொழில் அமைச்சுத் தெரிவிக்கிறது.

இது தொடர்பாக இந்திய அதிகாரிகளுடன் கடற்றொழில் அமைச்சர் ராஜித்த சேனரத்ன பேச்சுகளை ஆரம்பித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது 57 இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இது தவிர 13 மீன்பிடிப் படகுகளும் இந்தியக் கரையோரப் பாதுகாப்புப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வருடத்தின் இது வரையிலான காலப் பகுதியில் இந்தியாவினால் 176 இலங்கை மீனவர்கள் கைது செய்யப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(சி)


சகல பிரிவினருக்கும் கணினி கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் 17/9/2010 முதல் ஆரம்பமாகின்றன.....

**Diploma in**
- Microsoft Office 2007
- Java Programming
- Macromedia Applications
- Web Design & Web Development
- Computer Programming
- Desktop Publishing

100% Practical

80% கட்டணக் கழிவு

சர்வதேச தராதரமிக்க சான்றிதழுடன் கூடிய கற்கை நெறிகள்.

விரிவுரைகள் யாவும் பட்டதாரி ஆசிரியர்களாலேயே மேற்கொள்ளப் படுகின்றன.

விசேட கட்டணக்கழிவுடன் சிறுவர்களுக்கான கணினி வகுப்புகளும் ஆரம்பமாகின்றன......!

- Certificate in English
- Certificate in Internet & Email
- Certificate in Video Editing



**Global COMPUTER EDUCATION**

#5, First Floor, New Market Building, Jaffna. Tel : 011-3050111, 0776684302



**தவறிவிட்டது**

மீசாலை மேற்கு, கண்டி வீதி, மீசாலையைச் சேர்ந்த அப்பாக்குட்டி ஆறுமுகம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல. (421870497 V) கடந்த 10.09.2010 வெள்ளிக்கிழமை யாக்கரைச் சந்திக்கும், சந்நிதி [illegible] கோவிலுக்கும் இடையில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்படி முகவரிக்கோ அல்லது [illegible] சன்மானம் வழங்கப்படும்.

0779753434, 0771393660



**பனை அபிவிருத்திச் சபை**
**தொழில் வாய்ப்பு**

பருத்தித்துறை வீதி, சரசாலையில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் பனந்தும்பு உற்பத்தி நிலையத்திற்கு பின்வரும் பணிக்கான தொழில் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

01. இயந்திரம் ஊடாக பனந்தும்பு அடிப்பவர்கள் (துண்டுக்கூலி அடிப்படையில் வேதனம் வழங்கப்படும்).

02. தரமான பனம் மட்டைகளை சரசாலை உற்பத்தி நிலையத்திற்கு ரூபா 1.00 வீதம் வழங்குபவர்.

மேற்படி தொழில் வாய்ப்பைப் பெற விரும்புவோர் சபையின் **கீழ்க்காணும் முகவரிக்கு 25.09.2010ஆம் திகதி காலை 9 மணிக்கு** சமூகம் அளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

தேசிய வீடமைப்புச் செயலகக்கட்டடம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர், பனை அபிவிருத்திச் சபை.

தொ.பே:- 021 222 2034


**15ஆம் ஆண்டு நினைவலைகள்**

தோற்றம்
18 ★ 04 ★ 1907



மறைவு
02 ★ 09 ★ 1995

**அமரர் ஆறுமுகம் கந்தையா**
(இளைப்பாறிய தபாலதிபர், கோப்பாய்)

திதி:- ஆவணி மாதம் பூர்வபட்ஷ அட்டமி (15.09.2010) புதன்கிழமை

எம் அருமை அப்பாவே! பதின்ஐந்து ஆண்டென்ன
பதின்ஐயாயிரம் ஆண்டுகள்தான்
உருண்டாலும் உங்களது நினைவுகள் எங்களை
என்றும் விட்டு அகலாது! உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி தெற்கு, கைதடி.
க.குலராசன்-மகன்
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சத்துக் கெடாத சமையல்

சமையல் யார் வேண்டுமானாலும் செய்யலாம். அது பரவாயில்லை! சமையல் ருசியாக இருந்தால் மட்டும் போதாது! சத்துக் கெட்டுப்போகாமல் சமைப்பது எப்படி என்று தெரிந்திருக்கவும் வேண்டும். சத்தில்லாத ஆகாரத்தை எவ்வளவு சாப்பிட்டும் எந்தப் பயனும் கிடையாது!

காய்கறி உணவில் இருக்கின்ற சத்து, முழுதாக நமக்குக் கிடைக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் என்பதில் 10 முக்கியமான விடயங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள்!

முதலாவது - தானியங்களையும், பருப்பு வகைகளையும் நிறைய தீட்டக்கூடாது. ஏனென்றால் தாவர உணவுகளில் வெளிப்புறப் பகுதியில் தான் (தோல்பகுதியில்) சத்து அதிகமாக இருக்கிறது!

இரண்டாவது - தகரப் பேணியில் அடைத்த உணவு பதப்படுத்திய உணவு இவற்றையெல்லாம் தவிர்ப்பது நல்லது. ஏனென்றால் அவற்றையெல்லாம் தயார் செய்யும் போது அதில் உள்ள விற்றமின் C, $B_6$ போன்ற சத்து அழிந்துவிடும்.

மூன்றாவது - காய்கறி, பழம் வாங்கும் போது நிறம் கவனித்து வாங்க வேண்டும். நிறம் அடர்த்தியாக இருந்தால் சத்து அதிகமாக இருக்கும். சாதாரணமாக முட்டைக்கோஸ் வெள்ளையாக பார்ப்பதற்கு பளிச் சென்று இருக்கும். இன்னொன்று கரும்பச்சையாக இருக்கும். வெள்ளையாக உள்ளதை எடுக்கத் தோன்றும். ஆனால் அதில் சத்துக் குறைவாக இருக்கும். கரும்பச்சையாக உள்ளதில் சத்து அதிகமாக இருக்கும். கரட்டில் மஞ்சளாக உள்ளதை விட சிவப்பாக இருப்பது நல்லது.

நான்காவது - உணவு தானியங்கள், பருப்பு வகைகள் இவற்றையெல்லாம் ஈரமில்லாத பாத்திரத்தில் காற்றுப்புகாத அளவிற்குக் கவனமாக வைத்திருக்க வேண்டும்.

ஐந்தாவது காய்கறி, பழம் இவற்றையெல்லாம் புதிது புதிதாக வாங்குவது நல்லது. குளிர்சாதனப் பெட்டியில் 2,3 நாள்களிற்கு மேலாக வைத்திருந்தால் விற்றமின் C சத்து பாதியாகக் குறைந்துவிடும்.



இன்னொரு முக்கியமான விடயம் முடிந்த அளவிற்கு காய்கறி, பழங்களினுடைய தோலை ஒதுக்கி எறிந்துவிடாதீர்கள். அதில்தான் சத்து அதிகம். தோலை உரித்து எறிவதை விட அதனை சுரண்டி சுத்தப்படுத்துவது நல்லது. சிலவற்றின் தோலை அப்புறப்படுத்தி ஆக வேண்டுமென்றால் முதலில் அப்படியே வேக வைத்துவிட்டு அதன் பின்பு தோலை உரிக்கலாம்.

முடிந்த அளவிற்கு எவற்றையெல்லாம் பச்சையாகச் சாப்பிட முடியுமோ அவற்றையெல்லாம் பச்சையாகச் சாப்பிடுங்கள். அது போல தண்ணீரில் வேக வைக்கும்போது நீரில் கரையக்கூடிய விற்றமின் B,C இவையெல்லாம் வீணாகிவிடும். எண்ணெயில் சமைத்தால் விற்றமின்களான A,D,E,K இவையெல்லாம் வீணாகிவிடும்.

சாப்பிடக்கூடிய காம்பு, தண்டு, இலை இவற்றையெல்லாம் வீணாக்காதீர்கள்.

அடுத்தபடியாக சமைக்கும்போது, ஆவியில் வேக வைப்பதை பிரஷர் குக்கரில் வேக வைப்பது நல்லது. வேக வைக்கும் போது குறைவாக தண்ணீர் விட வேண்டும். தண்ணீர் கொதித்த பின்பு காய்கறி களைப்போட வேண்டும். பாத்திரத்தை மூடி வைக்க வேண்டும். இதனால் நீரில் கரையும் விற்றமின் இழப்பை முடிந்த அளவிற்கு குறைக்கலாம். இவ்வளவு தான் சத்துக் கெடாமல் சமைப்பதன் இரகசியம்

# கனவுகள்

அமெரிக்கா ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கன் தன் மனைவியிடம் ''அண்மையில் தான் ஒரு ாவு கண்டேன்'' என்றார்.

என்ன கனவு?

''ஒருநாள் வெள்ளை மாளிகையிலே அழுகைச் சத்தம் கேட்டது. நான் திடுக்கிட்டு முழிக்கிறேன்.

மக்களெல்லாம் கூட்டம் கூட்டமாக அழுது கொண்டு நிற்கிறார்கள். எனக்கு எதுவுமே புரியவில்லை. மாடியிருந்து கீழே இறங்கி வருகிறேன். அறைகள் முழுவதும் வெளிச்சம். அழுகை சத்தம் தொடர்ந்து கேட்டது. அந்தச் சத்தம் எங்கிருந்து வருகிறது. ஒவ்வொரு அறைகளாத் தேடினேன். கிழக்குப் பக்கத்து அறையினுள் போகிறேன் சவ ஊர்வலத்திற்கு தயாரான ஒரு உடலை கிடத்தியிருக்கிறார்கள். முகம் மூடியிருக்கிறது. அதைச் சுற்றி அழுது கொண்டிருக்கிறார்கள்.

''யாருடைய சவம்? ''என்று கேட்கிறார்கள்.

''ஜனாதிபதியினுடையது. அவரை யாரோ கொலை செய்திருக்கிறார்கள்'' என்றார் ஆப்ரகாம்லிங்கன்.

கனவு என்பது என்ன?

கனவிலே நடப்பதற்கும் கண்முன்னே நடப்பதற்கும் சம்பந்தம் இருக்குமா?

கனவுகள் விடைகாணாத புதிர்.

'கனவு மனசாட்சியின் குரல் என்கிறார்- சாக்ரடீஸ். 'உடல் அசதியினால் ஏற்படுகிற ஒரு வீண்காட்சி என்கிறார் வால்டோ.

உணர்வற்ற ஒரு நிலைகங்கு அழைத்துக் கொண்டு போகிற ராஜபாட்டை என்கிறார்- ஃபிராய்டு.

ராமாயணத்திலே திரிசடை கண்ட கனவு.

சிலப்பதிகாரத்திலே கண்ணகி கண்ட கனவு இதெல்லாம் நடக்கப் போவதை முன்னனே சொல்கின்றன.

பொதுவாக மூன்று நிலைமைகளிலே கனவுகள் வரலாம். கடுமையான அசதியினால் உடல் நிலை பாதிப்பினால் மனதில் உள்ள ஆசைகள் வெளிப்படுத்துகிற வகையில் ஏற்படுகின்றன.

பொதுவாக கனவு காண்பது நல்லது என்று பல பேர் சொல்வார்கள். ஆழ்ந்த தூக்கம் போதுமான ஓய்வை நம் மூளைக்குக் கொடுக்கிறது. தீர்க்க முடியாத சிக்கல்களுக்கு கனவு மூலமாக தீர்வு ஏற்படுகிறது.

கனவுக்கு நல்ல பலன் உண்டு. எதிர்மறையாக பலன் உண்டு என்றும் சொல்வார்கள். இதெல்லாம் பெரியவர்கள் சொல்லி வைத்தது.

எவ்வளவு பேர் தினமும் கனவு காண்கிறார்கள். அபூர்வமாக சில நடப்பதுண்டு. அவ்வளவும் உடனே நடப்பதில்லை!

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# இறந்த காலத்தில் விலங்கு; எதிர்காலத்தில் தெய்வம்



ஆராய்ச்சியாளர் ஒருவர் குரங்கைப் பிடித்து வைத்து அதன் குணங்கள், இயல்புகள் பற்றி ஆராய்ந்தார். ஒரு தனி அறையில் குரங்கையடைத்துவைத்து அது என்ன செய்கிறது என்பதைக் கண்டறிய கதவில் இருந்த துவாரம் வழியாக உற்றுப் பார்த்தார்.

குரங்கின் செயலைப் பார்த்து வெட்கப்பட்டார். தன்னை அறைக்குள் அடைத்து வைத்த பேராசிரியர் என்ன செய்கிறார் என்பதை அதுவும் துவாரம் வழியாக உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது. குரங்கு நமது மூதாதை இனம் அதிலிருந்து தான் நமது இயல்புகள் தோன்றியிருக்க வேண்டும் என்று முடிவுக்கு வந்தனர்.

நமது கடந்த காலம் விலங்கு, நிகழ்காலம் மனிதன் எனவே எதிர்காலம் தெய்வம். வாழ்க்கை என்பது ஒரு பயணம்.

குனிந்து நடந்த விலங்கு. பரிணாம வளர்ச்சியால் நிமிர்ந்து பார்க்க ஆரம்பித்தது. இப்படியாக உருவாக்கப்பட்டவன் தான் மனிதன். மனிதனுக்குள் இருந்த விலங்குக் குணவியல்புகளால் சண்டை, பகை என்பன உருவாக ஆரம்பித்தது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கான சட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் உருவாகியது.

மனிதன் விலங்காகாமல் தடுக்கும் சக்தி சட்டத்திற்கு உண்டு. மனிதனும் தெய்வமாகலாம் என்பதை சமயம் எடுத்துக் காட்டியது. அதனால்தான் சமயத்தை கையில் வைத்திருக்கும் துறவிகளை வணங்க ஆரம்பித்தார்கள்.

மனிதனுக்குள் இருக்கும் விலங்கினை தண்டிக்க சட்டத்திற்குத் தெரியும். அவனைத் தெய்வமாக்குவது சமயத்தால் மட்டுமே முடியும்.

*சுகி.சிவம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவூதி அரேபியாவில் வாகனவிபத்து; இலங்கையைச் சேர்ந்த ஒருவர் பலி

கொழும்பு,செப்.15

சவூதி அரேபியாவின், தமாம் நகரில் இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவ மொன்றில் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொரு இலங் கையர் படுகாயமடைந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தில், கம்பளை - தெல்பிட்டிய ஹிஜ்ராகமையைச் சேர்ந்த எம்.இக்பால் (வயது-32) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார் என்றும் கம்பளை - கண்டி வீதியைச் சேர்ந்த எஸ்.எம்.பவாஸ் என்பவர் காயடைந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது விபத்துக்குள்ளான இரு வாகனங்களில் ஒன்று இவர்கள் மீது தூக்கி வீசப்பட்டமையினால் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று மேலும் கூறப்படுகிறது. (சி)

## சைவநெறித்தேர்வு - 2009 பரிசளிப்பு விழா 19ஆம் திகதி

யாழ்ப்பாணம்,செப்.15

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் நடாத்தப்பட்ட கடந்த ஆண்டுக்கான அகில இலங்கை சைவநெறித் தேர்வின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும். சைவ பரிபாலன சபையின் தலைவர் த.சண்முகலிங்கத்தின் தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை கலந்து கொள்வார். சிறப்புரையை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் க.குமாரவேல் ஆற்றுவார். தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள். (க)

## மணவாளக்கோல விழா

கரவெட்டி கிழக்கு பரமானந்த கனகராவளவு விநாயகர் ஆலய மணவாளக் கோலத் திருவிழா நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் விநாயகருக்கு அபிஷேகம், வசந்த மண்டபப் பூசை, சுவாமி வீதி உலாவரும் காட்சி இடம்பெறும் விஷேட பூசைகள் ஆலய பிரதமகுரு ஸ்ரீ கிருஷ்ண பவானந்த குருக்கள் தலைமையில் நடைபெறும். (204)

## ஜயோதா உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 681 திகதி 13-09-2010

வெற்றி எண்கள்

**02 18 27 29 S**

ஜக்பொட் பரிசு ரூ. 14,074,240/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 14,074,240/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 20 | 2,000/= | 40,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 420 | 1,000/= | 420,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 665 | 1,000/= | 665,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16915 | 60/= | 1,014,900/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8041 | 40/= | 321,640/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 198567 | 20/= | 3,971,340/= |
| | | மொத்தம் ரூ. | 6,832,880/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மாத்தளை | 600366493-2-32 |
| அனுராதபுரம் | 600370370-2-22 |
| பதுளை | 600366075-1-11 |
| கம்பஹா | 600372467-2-22 |
| குருநாகல் | 600360783-8-08 |
| கண்டி | 600368901-8-48 |
| புத்தளம் | 600367686-1-31 |
| அம்பாந்தோட்டை | 600363425-5-05 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,232,880/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 14,611,090/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்
2010 செப்டம்பர் 16 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

## கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 772
சீட்டிழுப்பு திகதி 13.09.2010

எழுத்து: **K** — வெற்றி இலக்கங்கள்: **02 11 44 65**

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 23,663,747.20 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 02 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 15 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 319 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 626 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 15890 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 8987 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 225096 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 35453 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 10,723,460.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 23,784,204.00

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதகங்களுக்குள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ இதற்குகூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 02.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/நடேஸ்வர கனிஷ்ட வித்தியாலயம்.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்து பாடசாலைகளின் வளர்ச்சிக்கு வழிகாட்டி, இன்று மாகாணக் கல்விப் பணிப்பாளராக உயர்ந்து நிற்கும்

**உயர்திரு ப.விக்னேஸ்வரன்**

அவர்களின் பணி சிறக்கப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.

(570896)


Alpha Travels holidays (Pvt) Ltd.

தங்களின் அனைத்து விதமான விமான கட்டணங்கள், விடுதிக் கட்டணங்கள், விடுமுறைக்கான சலுகைகள் மற்றும் (பயணங்கள் அனைத்துக்குமான சிறப்புச் சலுகைகள்

தொடர்புகளுக்கு:

Alpha Travels & holidays (Pvt)Ltd.
S.Jesurah

இல.249, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 3207741, 0777420075

(சி/570985)

நாளை வாருங்கள்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 10ஆவது ஆண்டு நிறைவையொட்டி மாபெரும் கல்விக் கண்காட்சியில்....

நல்லூர் சரவணா ரெக்ஸ்

மாபெரும் மலிவு விற்பனையில்

இந்தியன் கொட்டன் சாறிகள், இந்தியன் சில்க் சாறிகள், இந்தியன் ரெடிமேற் பஞ்சாபிகள், பஞ்சாபித் துணிகள் மற்றும் விதவிதமான சாறிகள் எங்கும் கிடையா அதிரடி விலைக்கழிவில் நான்கு நாள்களுக்கு மட்டும்.

இடம்:- யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.
காலம்:- 16 தொடக்கம் 19 செப்ரெம்பர் 2010 வரை

★ மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறாது கலந்துகொள்ளுங்கள்.
★ ஆடித் தள்ளுபடி விலையைவிட மிகக் குறைவு
★ இந்தியாவில் இருந்து நேரடியான இறக்குமதியும் நியாயமான விலையும்.

| | உண்மையான விலை | தள்ளுபடி விலை |
|---|---|---|
| ★ இந்தியன் சில்க்ஸ் சாறி (Office Wear Saree) | ~~950/=~~ | 700/= |
| ★ இந்தியன் பன்சி கொட்டன் சாறி (Office Wear Saree) | ~~2450/=~~ | 1500/= |
| ★ இந்தியன் கொட்டன்சாறி (Office Wear Saree) | ~~1250/=~~ | 800/= |
| ★ இந்தியன் கில்ரவேக்சாறி | ~~1450/=~~ | 1000/= |
| ★ இந்தியன் சில்க்சாறி (Office Wear Saree) | ~~1300/=~~ | 900/= |
| ★ இந்தியன் கொட்டன்சாறி (Rich Cotton vijaluxme) | ~~4000/=~~ | 2850/= |
| ★ இந்தியன் சில்க் பஞ்சாபித்துணி (Special Quality- Gurgupa) | ~~1400/=~~ | 1000/= |
| ★ இந்தியன் கொட்டன் பஞ்சாபித்துணி (Special Quality) | ~~2000/=~~ | 1400/= |
| ★ இந்தியன் கொட்டன் பஞ்சாபி ரெடிமேற் | ~~2850/=~~ | 2000/= |
| ★ இந்தியன் கொட்டன் பஞ்சாபித்துணி | ~~1350/=~~ | 850/= |
| ★ பாகிஸ்தான் பஞ்சாபித்துணி | 650/= | |

SARAVANA TEX, NALLUR, JAFFNA.

IELTS அவசியமில்லை STUDY IN UK யாழ்.நகரில் மிகக் குறைந்த செலவில்...

லண்டனில் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் உங்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கு
★ கல்விக் காலத்திலேயே குடும்பத்தினரை U.K.க்கு அழைக்கும் வாய்ப்புகள்

★ Admission within 3 days
★ 100% Visa உத்தரவாதம் - ஆவணங்கள் சரியாக இருப்பது முக்கியம்
★ ஆகக் குறைந்த கல்வித் தகைமை(O/L)
★ விசா நிராகரிக்கப்படுமானால் College fee மற்றும் Sponsor fee திரும்பப் பெறும் வசதிகள்
★ அனைத்து நாடுகளுக்குமான விசா பெறுவதற்குரிய ஆலோசனைகள்
★ விசா கிடைக்க முன்போ கிடைத்த பிறகோ எதுவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
★ விரைவான பயண ஏற்பாடுகள்
★ மிகக் குறைந்த கட்டணத்தில் Sponsor வசதிகள்

இறுதிச் சந்தர்ப்பத்துக்கு முந்திக்கொள்ளுங்கள்

தொடர்புகளுக்கு: 0770871616


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய ரீதியில் முதலிடம் வென்ற

# சென்.ஹென்றிஸ் உடற்பயிற்சி அணிக்கு யாழ்.நகரில் நேற்று அமோக வரவேற்பு

யாழ்ப்பாணம்,செப்.15

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையே நீர்கொழும்பில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடம் வென்று சாதனை படைத்த இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி உடற்பயிற்சி அணிக்கு நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.நகரில் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த வரவேற்பு நிகழ்வில் கல்லூரியின் மாணவர்கள், ஆசிரியர்கள், புழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் என நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

கொழும்பிலிருந்து நேற்று முற்பகல் 10.30 மணியளவில் உடற்பயிற்சி அணியினர் யாழ்.நகரை வந்தடைந்தனர். வவேற்பு நிகழ்வு யாழ்.ஆரியகுளம் சந்தியில் ஆரம்பமானது. அங்கு அணியை வரவேற்பதற்குப் பெரும் எண்ணிக்கையானோர் திரண்டிருந்தனர்.

முற்பகல் 10.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியை வந்தடைந்த இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் அதிபர் அருட்திரு. ஜே.ஏ.ஜேசுதாஸ் அடிகள், விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்கள் பயிற்றுநர்கள் ஆகியோர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். அதன் பின்னர் உடற்பயிற்சி அணிவீரர்கள் அனைவரும் மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர். இதன் பின்னர் அவர்கள் 'பான்ட்' வாத்திய அணிவகுப்புடன் வேம்படி வீதி, யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி வழியாக யாழ். வின்சர் சந்திவரை அழைத்துவரப்பட்டனர். அணியினர் வீதியால் அழைத்துவரப்பட்ட வேளை பொதுமக்களும் வீதிகளில் நின்று கையசைத்து வரவேற்பளித்தனர். யாழ். போக்குவரத்துப் பொலிஸார் வீதி ஒழுங்குகளை சீரமைத்து வழித்துணை வழங்கினார்கள். (த-23)

## ஞானமுருகன் வென்றது

யாழ்ப்பாணம்,செப்.15

நாமகள் விளையாட்டுக் கழகத்துடனான ஆட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று கடந்த திங்கட்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாமகள் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய நாமகள் விளையாட்டுக்கழக அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (த-23)









அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையே தேசிய மட்டத்தில் இடம்பெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தைப் பெற்றுச் சாதனை படைத்த இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியினருக்கு கல்லூரி சமூகத்தினரால் நேற்று யாழ். நகரில் வைத்து அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

கல்லூரி அதிபர் அருட்திரு ஜே.ஏ.ஜேசுதாஸ், விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள், பயிற்றுநர்கள், உடற்பயிற்சி அணியினர் கல்லூரி சமூகத்தினரால் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதை முதல் இரு படங்களிலும் கல்லூரி 'பான்ட்' வாத்திய அணிவகுப்புடன் யாழ். நகர வீதிகள் வழியாக அணியினர் அழைத்துவரப்படுவதை மூன்றாவது படத்திலும் இந்த நிகழ்வில் கலந்துகொண்ட ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்:தமிழினியன்)

## அமிர்தரட்ணம் மூன்றாமிடம்



யாழ்ப்பாணம்,செப்.15

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு அநுராதபுரத்தில் இடம்பெற்ற தேசிய மட்டத் தடகளப் போட்டியில் ஆண்கள் பிரிவில் 800 மீற்றர் ஓட்டத்தில் வடமாகாண அணி சார்பில் கலந்துகொண்ட முருங்கன் அஞ்சல் அலுவலகத்தைச் சேர்ந்த அமிர்தரட்ணம் மூன்றாம் இடத்தினைப் பெற்றுள்ளார். (த-23)

## 'ருவென்ரி-20' சிறந்த வீரர்கள்

வலி.வடக்கு,செப்.15

யாழ்.மாவட்ட பொதுமக்கள் - படையினருக்கு இடையே நல்லுறைவைப் பேணும் முகமாக யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தலைமையகமும் யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கமும் இணைந்து நடத்திய 'ருவென்ரி-20' கிரிக்கெட் போட்டியில் சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்கள் வருமாறு:-

* போட்டியின் சிறந்த ஆட்டநாயகன் - வி.ஹரிவதனன்(ஜொனியன்ஸ் வி.கழகம்)
* சிறந்த களத் தடுப்பாளர் - வி.பிரணவன் (விக்கெட் காப்பாளர், ஜொனியன்ஸ் வி.கழகம்)
* போட்டியின் நாயகன் ரி.நதீரா (இலங்கை விமானப் படை)
* சிறந்த பந்துவீச்சாளர் - வம்படி விதாரண (இலங்கை இராணுவம்)
* தொடர் போட்டி நாயகன்- ஜெயவர்த்தனா(இலங்கை இராணுவம்)(த-86)

## சக்கோட்டை சென்.சேவியர் வெற்றி

யாழ்ப்பாணம்,செப்.15

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்திவரும் யாழ்.மாவட்ட கழகங்களுக்கு இடையிலான லீக்முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த வாரம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

இதில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிவானந்தா விளையாட்டுக் கழக அணி மோதியது.

சிவானந்தா விளையாட்டுக் கழக அணியை சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வென்றது. (த-23)

## தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட பாடசாலைகளின் உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,செப்.15

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளின் 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் இவ்வார இறுதியில் ஆரம்பமாகவுள்ளன.

இப்போட்டிகளில் ஆறு பாடசாலைகள் கலந்துகொள்ளவுள்ளன. இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு தலா மூன்று பாடசாலைகள் என்ற அடிப்படையில் முதல் சுற்றுப்போட்டிகள் லீக் முறையில் நடைபெறவுள்ளன.

'ஏ' பிரிவில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி, காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் ஆகியனவும் -

'பி' பிரிவில் மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம், தெல்லிப்பழை கட்டுவன் புலம் மகா வித்தியாலயம், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆகியனவும் இடம்பெற்றுள்ளன. (த-86)

## மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் தடகளப் போட்டிகளின் முடிவுகளில் சில

வலி.வடக்கு,செப்.15

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கிடையே நடத்திய ஆண்களுக்கான தடகளப் போட்டிகள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு :-

**நீளம் பாய்தல்**

எல்.சர்மிலன்(வவுனியா),என்.ரஜீம்ராஜ் (யாழ்ப்பாணம்), ஆர்.எ.ஜெகதீஸ்வரன் (வவுனியா)

**உயரம் பாய்தல்**

ஆர்.ஜெயரூபன்(யாழ்ப்பாணம்), பி.பாலசங்கர்(யாழ்ப்பாணம்), எஸ்.ரஜீவன் (யாழ்ப்பாணம்).

**குண்டுபோடுதல்**

எஸ்.வாகீசன்(யாழ்ப்பாணம்), பி.பிரகாஸ் (யாழ்ப்பாணம்), ரி.நீகன்(வவுனியா).

**தட்டெறிதல்**

வி.ஹரிகரன்(யாழ்ப்பாணம்), எம்.பிரதீபன் (யாழ்ப்பாணம்), எ.கிருஷ்ணமூர்த்தி (யாழ்ப்பாணம்).

**ஈட்டி எறிதல்**

பி.ஆரோக்கியராஜ்(மன்னார்), எம்.கஜதீபன்(யாழ்ப்பாணம்), ஜே.ஆர்.விமலதாஸ் (மன்னார்)

**4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

முதலாம் இடம் - வவுனியா மாவட்டம், 2ஆம் இடம் - யாழ்ப்பாண மாவட்டம், 3ஆம் இடம் - மன்னார் மாவட்டம்.

**4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

முதலாம் இடம் - வவுனியா மாவட்டம், 2ஆம் இடம் மன்னார் மாவட்டம், 3ஆம் இடம் - யாழ்.மாவட்டம். (தொடரும்) (த-86)

## பாரம்தூக்குதல், கட்டழகன் போட்டிகள் கொழும்பில்

வலி.வடக்கு,செப்.15

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையே இலங்கை கல்வித் திணைக்களம் தேசிய மட்டத்தில் நடத்தும் ஆண்கள், பெண்களுக்கான பாரம் தூக்கும் போட்டி மற்றும் ஆண்களுக்கான கட்டழகன் போட்டிகள் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை கொழும்பு ஆனந்தா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

கட்டழகன் போட்டியில் 50 வீரர்களும் பாரம்தூக்கும் போட்டியில் ஆண்கள் 100 வீரர்களும் பெண்கள் 100 வீராங்கனைகளுமாக 250 வீர வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இப்போட்டிகளில் வடமாகாணத்திலிருந்து எந்தவொரு பாடசாலைகளும் கலந்துகொள்ளவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (த-86)

## 5000 மீற்றர் ஓட்டப் போட்டியில் அனுசியாவின் சாதனை பதிவு

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டப் போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.அனுசியாவின் சிறந்த பெறுபேறு புதிய சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் புதிய சாதனையை பதிவுசெய்ய வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

2007ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.அனுசியா 20:52:5 செக்கனிலும் 2009ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஈ.எம்.சி.எல். ஹேரத் 22:16:4 செக்கனிலும் 2010ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.அனுசியா 20:41:9 செக்கன்களிலும் ஓடி பெறுபேறுகளைப் பதிவு செய்துள்ளார். இந்தப் பெறுபேறு வடமாகாணத்தின் சாதனையாக பதிவு செய்யப்படவுள்ளது.(த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

* பயிற்சி பெற்ற தாதி
(அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்)
* உதவித்தாதிப் பயிற்சி பெற விரும்புபவர்கள்
G.C.E. O/L, 6 மாதகாலப் பயிற்சி
பயிற்சிக் கட்டணம் எதுவுமில்லை.
* பயிற்சியின் போது உதவித்தொகை மாதாந்தம் வழங்கப்படும், தூர இடத்தில் உள்ளோருக்கு இலவச தங்குமிட வசதி.
* 18.09.2010 சனி முற்பகல் 10 மணிக்கு முன் சுயவிவரத்துடன் நேரில் வரவும்.
* Pharmacy அனுபவமுள்ளோரும் நேரில் வரவும்.

**சம்பந்தர் மொடேன் வைத்தியநிலையம்,**

இல 08ஏ, இராமையாச் செட்டியார் லேன், யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 7259



# CANADA Work Permit

## பெறுவதற்கான ஆலோசனைகள்

- வயதெல்லை – upto 40 years
- ஆங்கில அறிவு சரளமாக இருத்தல் வேண்டும்.
- அங்கிகரிக்கப்பட்ட Diploma / Degree உடையவர்களுக்கு முன்னுரிமை
- குறைந்த பட்சம் ஒரு வருட வேலை அனுபவம் தேவை.

SIC Center, 734, Hospital Road, Jaffna.
Tel : 077-900 4194



## 25 ஆம் ஆண்டு திருமண நாள் வாழ்த்துக்கள்

### மனோகரன் - குமுதினி (கிருஷா)



இன்று!
இருபத்தைந்து ஆண்டுகள்
இனிதே பூர்த்தி ஆகின்றது
இல்லறம் கண்டு!

இதுபோல்
இன்னும் பல்லாண்டு
உங்கள் திருமண நாளை
நாங்கள் கொண்டாட வேண்டும்

இல்லற வாழ்வில்
இன்பமே பெற வேண்டும்
என்றுமே மணப்பூர்வமாய் வாழ்த்தி
உங்கள் ஆசி வேண்டும்
உங்கள் அன்புச் செல்வங்கள்

**கஜானி, காயத்ரி, பிரஷாந்**



## இடமாற்ற அறிவித்தல்

இதுவரை காலமும் இல 55, RG கட்டடம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலிருந்து யாழ் மக்களுக்கு சேவையாற்றி வந்த **ஆயுட் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரையானது** யாழ் மக்களுக்கு இலகுவான சேவைகளை வழங்கும் பொருட்டு யாழ் மத்திய பேருந்து நிலையத்திற்குஅருகிலேயுள்ள **இல 281 1/1 மணிக்கூட்டு வீதி, (ஞானம்ஸ் ஹொட்டேல் அருகில்) யாழ்ப்பாணம்** எனும் புதிய முகவரியில் எதிர் வரும் **16.09.2010** முதல் புதுப் பொலிவுடன் தனது சேவைகளை யாழ் மக்களுக்கு வழங்கத் தயாராகிக்கொண்டிருக்கின்றதென்பதனை வாடிக்கையாளர் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

LIC
Life Insurance Corporation (Lanka) Ltd.

தலைமைக்காரியாலயம்
இல 29/2 ஷார்னல் கட்டடம் விசாகா வீதி, கொழும்பு 04


## '5 எஸ்' நிலையங்களின் கட்டடப் பணி ஆரம்பம்

தென்மராட்சி, செப். 15

சுகாதாரத் திணைக்களத்தின் 5 எஸ் செயற்திட்டம் யாழ்.மாவட்டத்தில் மூன்று நிலையங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், மந்திகை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியவற்றில் இத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-207)

## வடமராட்சி கிழக்கு மீனவருக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கல்

வடமராட்சி, செப். 15

வடமராட்சி கிழக்கின் மீள்குடியேறிய மீனவர்கள் கடற்றொழிலை மேற்கொள்ள வசதியாக பாசிக் நிறுவனம் மீன்பிடிப்படகுகளையும், அவற்றிற்கான வெளி இணைப்புகளையும் வழங்கவுள்ளது. முதற்கட்டமாக 56 பேருக்கு இவற்றை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்திற்கான பயனாளிகளை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர், யாழ். பிராந்திய நீரியல் வள மற்றும் மீன்பிடித் திணைக்கள உதவிப்பணிப்பாளர்கள் உள்ளிட்டோர் ஆகியோர் இணைந்து தெரிவு செய்துள்ளனர். (த-236)

## அழகியற் போட்டிகள் பிற்போடப்பட்டன

யாழ். வலயக்கல்வி அலுவலகத்தினால் எதிர்வரும் 18 ஆம் திகதி பாடசாலை மாணவர்களுக்குகோட்டமட்டத்தில் நடத்தப்படவிருந்த அழகியற் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளன.

இந்தப் போட்டிகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (த-9)

## வாய்மொழிப் பரீட்சை

தென்மராட்சி, செப். 15

அரச கரும மொழி வினைத்திறன் காண் தடை எழுத்துப் பரீட்சையில் சித்தி பெற்ற உத்தியோகத்தர்களுக்கு வாய் மொழிப் பரீட்சை நடாத்தப்படவுள்ளது.

இப் பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் பிராந்திய உதவி உள்ளூராட்சிப் பணிப்பாளர் பணிமனையில் நடத்தப்படவுள்ளதாக அரச கரும மொழித் திணைக்கள ஆணையாளர் எஸ்.குணசேன சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவித்துள்ளார். (த-207)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### கலைப்பீடம்

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்
இதழியல் டிப்ளோமா (முழுநேரம்-இரண்டு ஆண்டுகள்)
கல்வியாண்டு-2010/2012

மேற்படி முழுநேர இதழியல் டிப்ளோமாக் கற்கைநெறி அனுமதிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்: க.பொ.த உயர்தர பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியும் பெற்றிருக்கவேண்டும்.

அனுமதிக்கான தெரிவு முறை: எழுத்துத் தேர்வும் (எழுத்து ஆற்றல், அறிக்கையிடும் திறன், மொழியாற்றல், சமூக அறிவு) நேர்முகத்தேர்வும்.

கற்கை நெறிக்காலம்: 2 ஆண்டுகள் (முழுநேரம்)

கட்டணங்கள்:

| | | |
|---|---|---|
| கற்கைநெறிக்கட்டணம் | ரூபா | 20,000.00 |
| பதிவுக் கட்டணம் | ரூபா | 750.00 |
| நூலக வைப்புப்பணம் (மீளளிக்கத்தக்கது) | ரூபா | 750.00 |
| நூலக பயன்பாடு | ரூபா | 1000.00 |
| மொத்தம் | | 22,500.00 |

விண்ணப்பப் படிவங்கள்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் ரூபா.100.00 செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளை அலுவலகத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபாலிலோ, நேரிலோ உதவிப்பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி: 08.10.2010.

14.09.2010 பதிவாளர்



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### கலைப்பீடம்

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்
இதழியல் டிப்ளோமா
(பகுதி நேரம்-இரண்டு வருடங்கள்)
கல்வியாண்டு-2010/2012

பகுதி நேர இதழியல் டிப்ளோமா கற்கைநெறியினை ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் கற்க விரும்பும் ஊடகவியலாளராகப் பணிபுரிவோரிடமிருந்து விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன.

விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்:

*க.பொ.த (சா.த) தேர்வில் தமிழ், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தி உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்திருக்கவேண்டும்,

*அச்சு ஊடகத்தில் அல்லது மின்னியல் ஊடகத்தில் ஓராண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

*பணிபுரியும் ஊடக நிறுவனத்திலிருந்து இக்கற்கை நெறியிற் சேர்வதற்கான அனுமதிக்கடிதம் சமர்ப்பிக்க வேண்டும்.

அனுமதிக்கான தெரிவுமுறை: நேர்முகத்தேர்வு

கற்கைநெறிக்காலம்: 2 ஆண்டுகள்-விரிவுரைகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் (தேவைப்படின் அரச விடுமுறை நாள்களிலும்) நடைபெறும்.

கட்டணங்கள்:

| | | |
|---|---|---|
| கற்கைநெறிக்கட்டணம் | ரூபா | 20,000.00 |
| பதிவுக் கட்டணம் | ரூபா | 750.00 |
| நூலக வைப்புப்பணம் (மீளளிக்கத்தக்கது) | ரூபா | 750.00 |
| நூலக பயன்பாடு | ரூபா | 1000.00 |
| மொத்தம் | | 22,500.00 |

விண்ணப்பப் படிவங்கள்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் ரூபா.100.00 செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளை அலுவலகத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பதிவுத் தபாலிலோ, நேரிலோ உதவிப்பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ் பல்கலைக்கழகம்,திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி: 08.10.2010.

14.09.2010 பதிவாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேபாளத்தில் புரட்சியை ஏற்படுத்தி ஆட்சியைப் பிடிக்க மாவோ திட்டம்

## பிரதமர் தேர்தலில் ஏழாவது முறையாகவும் இழுபறி

காத்மண்டு, செப். 15

நேபாளத்தில் பிரதமர் பதவிக்குரிய தேர்தல் ஏழு முறை நடந்தும், யாரும் தேர்வு செய்யப்படாததால், மக்கள் புரட்சி மூலம் ஆட்சியைப் பிடிக்க மாவோயிஸ்ட்டுக்கள் திட்டமிட்டுள்ளனர்.

நேபாளத்தில் 2008இல் நடந்த பொதுத் தேர்தலில் மாவோயிஸ்ட்கள் பெரும்பாலான இடங்களில் வெற்றிபெற்று ஆட்சியைப் பிடித்தனர். இதைத் தொடர்ந்து நேபாளத்தில் மன்னராட்சி ஒழிக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி அமுலானது.

மாவோயிஸ்ட்களை இராணுவத்தில் சேர்ப்பதற்கு இராணுவத் தளபதி ஒப்புக் கொள்ளாததால் பிரதமர் பிரசாந்தா அவரை பதவிநீக்கம் செய்தார் .

ஆனால், ''மன்னராட்சி காலத்தில் நிய மிக்கப்பட்ட இராணுவத் தளபதியைப் பதவி நீக்கம் செய்வதற்கு பிரதமருக்கு அதிகாரம் இல்லை'' எனக்கூறி, இராணுவத் தளபதியை பதவியைத் தொடரச் செய்தார் ஜனாதிபதி ராம்பரன் யாதவ்.

ஜனாதிபதியுடன் ஏற்பட்ட கருத்து மோதலால் தன் பதவியை இராஜிநாமா செய்தார் பிரதமர் பிரசாந்தா. அதன் பின்னர் நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் மாதவ் குமார் நேபாள் பிரதம ராகப் பொறுப்பேற்றார்.

மன்னராட்சிக்குப் பின்னர் நேபாளத்தில் அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்படாததை கண்டித்து, மாவோயிஸ்ட்கள் நெருக்கடி கொடுத்ததால், மாதவ் குமார் நேபாள் பதவி விலகினார். அவருக்குப் பின்னர் பிரதமரை தேர்வு செய்வதற்காக ஏழு முறை தேர்தல் நடந்துவிட்டது.

நாடாளுமன்றில் திங்கட்கிழமை ஏழாவது முறையாக நடந்த பிரதமர் தேர்தலில் எவருக் கும் போதுமான வாக்கு கிடைக்கவில்லை. பிரதமர் பதவிக்கு போட்டியிட்ட பிரசாந்தா, இதனால் சோர்வடைந்துள்ளார்.

எட்டாவது முறையாக தான் போட்டியிடப் போவதில்லை என அவர் அறிவித்துள்ளார். எட்டாவது முறையாக நடக்கும் தேர்தலில் உரிய நபரை பிரதமராக தேர்வு செய்வது குறித்து மற்ற கட்சிகளுடன் பேச்சு நடத் தவும் மாவோயிஸ்ட்கள் திட்டமிட்டுள்ளனர்.

இனி பிரதமர் பதவிக்குப் போட்டியிடு வதைத் தவிர்த்து, மக்கள் புரட்சி மூலம் ஆட்சியைத் தாம் கைப்பற்ற போகிறார் என மாவோயிஸ்ட்களின் தலைவர் மோகன் வைத்யா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 17ஆம் திகதி முதல், இதற் கான நடவடிக்கைகளை தாம் மேற்கொள்ள விருக்கிறார் என்றும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

''பொது கூட்டங்கள், தர்ணா போராட் டங்கள் என அமைதியான வழியில் தங்கள் புரட்சி நடவடிக்கைகள் தொடரும்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மாவோயிஸ்ட் கட்சியின் தகவல் தொடர் பாளர் தீனாநாத் சர்மா குறிப்பிடுகையில், ''பிரதமர் தேர்தலில் இருந்து வாபஸ் பெறும் முடிவை நாங்கள் இன்னும் எடுக்கவில்லை'' எனத் தெரிவித்துள்ளார்.

## வெனிசுலா விமான விபத்து: இருவர் பலி; 21 பேர் தப்பினர்!

வெனிசுலா, செப். 15

வெனிசுலாவில் திங்கட்கிழமை 51 பேருடன் சென்ற விமானம் மோதி கீழே விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் 2 பேர் உயிரிழந்தனர்; 21 பேர் உயிர் பிழைத்தனர் எனக் கூறப்படுகிறது.

மற்ற பயணிகள் என்ன ஆனார்கள் என்பது உள்ளிட்ட இந்த விபத்து குறித்து உடனடி யாக முழுமையான தகவல் ஏதும் இல்லை.

மகர்கரிதா தீவிலிருந்து விமானம் சென்றுள்ளது. இதில் 47 பயணிகள், 4 விமான ஊழியர்கள் சென்றுள்ளனர். விமானம் பியூர்டோ ஆர்தேஸ் விமான நிலையத்தில் இறங்குவதாக இருந்தது. ஆனால், விமானம் இறங்குவதற்கு முன்னரே மோதி கீழே விழுந்து விபத்துக் குள்ளானது என போக்கு வரத்துத்துறை அமைச்சர் பிரான்சிஸ்கோ கார்செஸ் தெரிவித்தார்.

## பங்களாதேஷை குலுக்கிய இரு பூகம்பங்கள்

பங்களாதேஷில் வெள்ளிக்கிழமை இரண்டு முறை பூகம்பங்கள் ஏற்பட்டன. வெள்ளிக் கிழமை இரவு 10.45 மணிக்கு முதல் முறையும், 11.24 மணிக்கு இரண்டாவது முறையும் பூகம்பங்கள் ஏற்பட்டன.

முதல் பூகம்பம் ரிச்டர் அளவுகோலில் 4 புள்ளிகளாகவும், இரண்டாவது பூகம்பம் ரிச்டர் அளவுகோலில் 4.6 புள்ளிகளாகவும் பதிவாகின எனப் பூகம்ப ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த இரு பூகம்பங்களும் தலைநகர் டாக்காவிலிருந்து 71 கி.மீ.தொலைவில் தென்மேற்குப் பகுதியில் கடலுக்கு அடியில் 14 கி.மீ. ஆழத்தில் நிகழ்ந்துள்ளன.

பூகம்பங்கள் காரணமாக அடுக்குமாடி கட்டடங்கள் உள்ளிட்டவை சற்று குலுங் கின. இதனால் மக்கள் அலறியடித்துக் கொண்டு தெருவுக்கு ஓடி வந்தனர். உயிர்ச்சேதம், பொருட்சேதம் ஆகியவை குறித்த விவரங்கள் உடனடியாகத் தெரியவில்லை.

## பின்லேடனின் புதல்வர் அமர்த்திய வாடகை தாய் மீது தாக்குதல்

அல்-குவைதா தலைவர் ஒசாமா பின்லேடனின் பேரக் குழந்தைகளைச் சுமந்த வாடகைத் தாயின் மீது மர்ம நபர்கள் தாக்குதல் நடத்தினர். இதில், கருவிலிருந்த இரட்டைக் குழந்தைகள் உயிரிழந்தன.

ஒசாமா பின்லேடனின் புதல்வர் ஓமர் (வயது 29). லண்டனில் வசிக்கும் இவர், அந் நாட்டைச் சேர்ந்த ஜாய்னாவை (வயது - 54) திருமணம் செய்தார். இவர்கள், சிரியாவைச் சேர்ந்த லூயிஸ் என்ற பெண்ணை வாடகைத் தாயாக நியமித்தனர்.

அதன்படி ஓமரின் உயிரணு மூலம் கருத்தரித்த லூயிஸ், இரண் டரை மாதங்கள் கர்ப்பமாக இருந்தார். சிரியாவில் தங்கியிருந்த லூயிஸ் மீது மர்ம நபர்கள் அண்மையில் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில், கருவில் இருந்த இரட்டைக் குழந்தைகள் உயிரிழந்துவிட் டன.

பிரிட்டிஷ் நாளிதழ்கள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளன. இதனிடையே, ஓமரின் மனநிலை பாதிக்கப்பட்டிருப்பதால் தான் அவரிடமிருந்து பிரிந்துவிட்டார் என ஜாய்னா தெரிவித்துள்ளார்.

## பலஸ்தீனத்தின் மேற்குக்கரைப் பகுதியில் புதிய குடியிருப்புக்கு இஸ்ரேல் அனுமதி

ஜெருசலேம், செப். 15

பலஸ்தீனத்தின் மேற்குக்கரைப் பகுதியில் 13 ஆயிரம் வீடுகளைக் கட்டும் புதிய குடியிருப்புத் திட்டத் துக்கு இஸ்ரேல் அரசு அனுமதி அளித்துள்ளது.

இதனால், அமைதிப் பேச்சுகளிலிருந்து தாம் விலகப் போகிறார் என பலஸ்தீன ஜனாதிபதி மெஹ்மூத் அப் பாஸ் எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவின் முயற்சியின்பேரில் இஸ்ரேல் - பலஸ்தீன அமைதிப் பேச்சு அண்மையில் ஆரம்பிக்கப் பட்டது. அப்போது, இரு தரப்பிலும் பல்வேறு கோரிக்கை கள் முன்வைக்கப்பட்டன.

சர்ச்சைக்குரிய பகுதிகளில் இஸ்ரேல் அரசு புதிய குடியிருப்புகளை அமைக்கக்கூடாது, பலஸ்தீன பகுதிகளிலுள்ள இஸ்ரேலிய குடியிருப்புகளைப் படிப்படியாக அகற்றவேண்டும் என்று பலஸ்தீனம் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஹமாஸ் அமைப்பின் தீவிரவாத நடவடிக்கை களை நிறுத்துமாறு இஸ்ரேல் தரப்பில் வலியுறுத் தப்பட்டது. இந்நிலையில், மேற்குக்கரைப் பகுதியில் 13 ஆயிரம் வீடுகளைக் கட்ட இஸ்ரேல் அனுமதி அளித்திருப்பதால் இரு நாடுகளுக்கும் இடையில் விரிசல் அதிகரித்துள்ளது. இந்த விவகாரத்தில் பொறுமை காக்குமாறு இரு நாட்டு ஜனாதிபதிக ளையும் அமெரிக்க அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

## 14 சீன மாலுமிகள் விடுவிப்பு

பீஜிங், செப். 15

கிழக்கு சீன கடற்பரப்பில் அத்துமீறி பிரவேசித்த சீன மீன்பிடி படகுகளிலிருந்த 14 மாலுமிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என ஜப்பான் அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள் ளனர்.

கடல் எல்லையில் ஏற்பட்ட அத்துமீறிய பிரவேசம் தொடர்பான சர்ச்சை காரணமாக கப்பல் தலைவர் மாத்திரம் சிறைக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படு கின்றது.

சந்தேக நபரை எதிர்வரும் 19ஆம் திகதி வரை காவலில் வைத்து அவருக்கு எதிராக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் முடிவு எடுக்கப்படும் எனத் தெரி விக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்துக்கு எதிராக சீனா தொடர்ச்சியாக பல ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வந்த நிலையில் இருநாடுகளுக்கிடையிலான உறவிலும் விரிசல் ஏற்படக்கூடிய அபாயம் நிலவு வதாக ஜப்பானுக்கு எச்சரிப்பு விடுத்திருந்தது.

கடலோர பாதுகாப்பு ரோந்து நடவடிக் கைகளில் ஈடுபட்டிருந்த ஜப்பான் படகுகளை சீன மீன்பிடிப் படகுகள் சேதப்படுத்தின என ஜப்பான் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக அறிவுபூர்வமான அரசியல் தீர்மானத்தை ஜப்பான் எடுக்கவேண்டுமென சீன இராஜதந்திரி டாய் பிங்கியூ எச்சரித்திருந்தார்.

ஜப்பானுக்கு எதிராக சீனா பல்வேறு ஆர்ப்பாட்டங்களை வலயத்தில் மேற்கொண்டதுடன் சீனாவுக்கான ஜப்பான் தூதுவரான நிவாவை நான்கு தடவைகள் அழைத்து இந்தச் சம்பவம் தொடர்பாக சீனா கலந்துரை யாடியுள்ளது.

உலக அரங்கில்

## ஆப்கான் - தஜிகிஸ்தான் எல்லையில் துப்பாக்கிச் சமர்; 20 தீவிரவாதிகள் பலி

ஆப்கானிஸ்தான் - தஜிகிஸ்தான் எல்லையில் தீவிர வாதிகளுக்கும், எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் தீவிரவாதிகள் 20 பேர் கொல்லப்பட்டனர். இராணுவத் தரப்பில் ஒருவர் உயிரிழந்தார்.

ஆப்கானிஸ்தான் அரசுக்கு எதிரான தீவிரவாதிகள் ஆப்கானிஸ் தான் - தஜிகிஸ்தான் எல்லையிலுள்ள பியந்த் நதி பகுதியில் பதுங்கியிருந்தனர். இதையடுத்து அவர்களை பாதுகாப்புப் படையி னர் பிடிக்கச் சென்றனர். அப்போது இருதரப்பினரிடையே கடுமை யான துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டது. புதன்கிழமை ஆரம்பித்த இந்த துப்பாக்கிச் சண்டை வியாழக்கிழமை அதிகாலை முடிவுக்கு வந்தது. 24 மணி நேரம் நடந்த இந்தச் சண்டையில் 20 தீவிரவாதிகள் கொல்லப் பட்டனர். பாதுகாப்புப் படை தரப்பில் ஒருவர் உயிரிழந்தார்.

# 'வீடியோ கேம்' மோகம் காரணமாக தமது பிள்ளைகளைப் பரிதவிக்கவிட்ட பெண்!

பிரிட்டனைச் சேர்ந்த ஒரு பெண், ''வீடியோ கேம்' மீது கொண்ட வெறித் தனமான ஆர்வத்தால், தன் பிள்ளைகளைப் பட்டினியால் பரிதவிக்க விட்டதுடன், செல்ல மாக வளர்த்த இரண்டு நாய்களையும் பட்டினியில் போட்டு சாகடித்துள்ளார்.

பிரிட்டனைச் சேர்ந்தவர் கிளாடியா என்ற பெண் (பெயர் மாற்றப்பட்டுள் ளது). இவருக்கு 33 வயதாகிறது. 9, 10 மற்றும் 13 வயதுகளில் மூன்று பிள்ளை கள் உள்ளனர்.

இவர், செல்லமாக இரண்டு நாய்களை யும் வளர்த்து வந்தார். இவரின் கணவர் இறந்துவிட்டார். கடந்த சில மாதங்களா கவே, 'வீடியோ கேம்' விளையாடுவதில் கிளாடியா ஆர்வம் காட்டினார்.

குறிப்பாக, 'ஸ்மாலர் வேர்ல்ட்' என அழைக்கப்படும், 'வீடியோ கேம்' மீது இவருக்கு அதிக ஆர்வம் ஏற்பட்டது. ஆரம் பத்தில் சில மணி நேரங்களை இதற்காக செல விட்ட கிளாடியா, அடுத்த சில மாதங்களில், விளையாட்டிலேயே மூழ்கிவிட்டார்.

நேரம் காலம் தெரியாமல், அந்த விளை யாட்டிலேயே தொடர்ந்து ஈடுபட்டார். ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் கூட தூங்குவது இல்லை. அந்த அளவுக்கு, 'வீடியோ கேம் மோகம்' அவரை அடிமைப் படுத்திவிட்டது.

இதனால், இவரது குழந்தைகள் சாப் பிட உணவில்லாமல் அவதிப்பட்டனர். குழந்தைகள் பசியால் துடித்தால், கடைக ளில் விற்கும் குளிர்பானங்களை வாங்கி கொடுத்து விடுவார். மேலும், பேக் செய்யப்பட்ட உணவு வகைகளையும், அவ்வப்போது வாங்கி கொடுப்பார்.

'வீடியோ கேம்' மோகத்தில், நாய்களை கவனிப்பதையே கிளாடியா மறந்து விட்டார். இதனால், நாய்கள் பசியால் துடித்து, இறந்துவிட்டன. ஆறு மாதங்களாக, அந்த இரண்டு நாய்களின் உடல்களும் வீட்டுக் குள்ளேயே கிடந்தன.

அவற்றை வெளியில் தூக்கிப் போட வேண்டும் என்ற எண்ணம் கூட இல்லா மல், தொடர்ந்து, 'வீடியோ கேம்' விளை யாடினார். இறந்துபோன நாய்களின் உடல் கள் அழுகி, துர்நாற்றம் அடித்தன.

இது குறித்து தகவல் தெரிந்த பக்கத்து வீட்டுக்காரர், பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார். கிளாடியா வீட்டுச் சூழலை பார்த்து, பொலிஸார் அதிர்ச்சி அடைந்த னர். சாப்பாட்டு அறையிலேயே, இரண்டு நாய்களின் உடல்களும் அழுகிய நிலை யில் கிடந்தன.

இது குறித்து கிளாடியாவுக்கு எதிரா கப் பிரிட்டன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிமன்றம், ''இனி மேல் கிளாடியா, 'வீடியோ கேம்' விளையாடக் கூடாது. செல்லப் பிராணிக ளையும் வளர்க்க அவருக்குத் தடை விதிக்கப்படுகிறது. அவருடைய அஜாக் கிரதை காரணமாக இரண்டு நாய்கள் இறந்துள்ளதோடு, அவரின் குழந்தை களும் பசியால் வாடியுள்ளன. எனவே, 75 மணி நேரம், அவர் வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டும். இதற்காக, அவருக்குப் பணம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது'' என தீர்ப்பளித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வளாகத்தில் ஜப்பானிய சர்வதேச அபிவிருத்திக்கும் நிவாரணத்துக்குமான அமைப்பினால் 30 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சிறுவர் விடுதி மற்றும் சிறுவர் பூங்கா கையளிப்பு நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

ஜப்பானிய சர்வதேச அபிவிருத்திக்கும் நிவாரணத்துக்குமான அமைப்பின் முகாமைத்துவப் பணிப்பாளர் நோபுகிகோ இக்காவா மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, நோபுகிகோ, அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் ஆகியோர் நாடாவெட்டித் திறந்து வைப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்: தென்னவன்)

# வடக்கு, கிழக்கில் ஜனநாயக வழியில் உறுதியுடன் போராடும் இளைஞர் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்

## சுவிஸில் நடைபெற்ற நிகழ்வில் பத்திரிகையாளர் வித்தியாதரன்



கொழும்பு, செப். 15

''தமிழ்த் தேசியத்திற்கான பாதை புதிய கட்டத்திற்குள் பிரவேசிக்க வேண்டிய காலம் வந்திருக்கிறது. ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட இடத்திலிருந்து உரிமைகளை மீட்க ஜனநாயக வழியில் போராடுவதற்கான பொறுப்பு எம் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. எனவே, வடக்கு, கிழக்கில் ஜனநாயக வழியில் உறுதியோடு போராடக்கூடிய இளைஞர் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இந்தப் பணிக்காக ஊடகத்துறையிலிருந்து தற்போது விலகியிருக்கும் நான் முழுமையாக ஈடுபடத் தயாராக இருக்கிறேன்.''

- இவ்வாறு மூத்த பத்திரிகையாளர் ந.வித்தியாதரன் சுவிஸில் நடைபெற்ற 'சுற்றத்து முற்றம்' நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசும்போது தெரிவித்தார்.

இதற்கான முழுப்பொறுப்புகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுச் செயற்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியவை வருமாறு -

ஆயுதப் போராட்டத்தை இலங்கை அரசு தோற்கடித்து விட்டது என்பதற்காக எமது உரிமையையும் இறைமையையும் விட்டுவிட முடியாது. அதை மீட்கவேண்டிய மிகப்பெரிய பொறுப்பு இப்போது அனைத்து தமிழ் மக்களுக்கும் உள்ளது.

ஆயுதப் போராட்டத்தின் மூலம் உரிமைகளை - இறைமையை மீட்கப் போராடிய எங்களை வரலாறு வேறு திசைக்குத் திருப்பிவிட்டுவிட்டது. ஆனாலும் ஜனநாயகப் பாதை ஊடாக எமது பயணத்தைத் தொடர்ந்து முன்னெடுத்து உரிமை - இறைமை என்ற இலக்கை நாம் அடைய வேண்டும். ஜனநாயக வழியில் நாங்கள் செல்லும் போது யாரிடமும் மண்டியிட முடியாது.

இலங்கை அரசு இப்போது வைத்திருக்கின்ற தீர்வு ஒன்றுதான். சிங்கள தேசம் என்ற தீர்வைத் தவிர வேறு எதுவும் மஹிந்த ராஜபக்ஷ அரசிடம் இல்லை. போர் முடிவடைந்த பின்னர் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை நான் சந்தித்தபோது - தற்போது பிரிக்கப்பட்டிருக்கும் வடக்கு, கிழக்கை இணைத்து தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்க வேண்டும் எனக் கோரிய போது அவர், வடக்கு, கிழக்கு இணைப்பு என்பது ஒருபோதும் நடக்காது. அதை நாங்கள் பிரபாகரனுடன் புதைத்து விட்டோம் எனச் சொன்னார். இந்த மனநிலை தான் இலங்கை அரசுக்கு இருக்கிறது.

எனவே ஜனநாயக வழியில் உறுதியோடு செயற்படக்கூடிய இளைஞர் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிராமங்கள் தோறும் கிளைகளை அமைக்க வேண்டும். இந்த இரு கட்டமைப்புகளும் இணைந்து செயற்பட வேண்டும். புலம்பெயர் தேசங்களிலும் இந்தக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். இந்த முழுப்பொறுப்புகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுச் செயற்பட வேண்டும். இந்தப் பணிக்காக ஊடகத்துறையிலிருந்து தற்போது விலகியிருக்கும் நான் முழுமையாக ஈடுபடத் தயாராக இருக்கிறேன்.

புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து கொண்டு அரசியல் செய்வதை விட்டு நேரடியாக உங்கள் மண்ணுக்கு வாருங்கள். அங்குள்ள யதார்த்த நிலையை நேரடியாக பாருங்கள். நல்லூர் கோவில் திருவிழாவுக்கு 50 ஆயிரம் பேர் வெளிநாடுகளிலிருந்து வர முடியுமாக இருந்தால் உங்கள் கிராமங்களின் அழிவுகளைக் காண அதை மீண்டும் கட்டி எழுப்ப ஏன் நீங்கள் வரக்கூடாது. இங்கிருந்து அரசியல் பேசுவதை விடுத்து வரக்கூடியவர்கள் அனைவரும் நேரடியாக அங்கு வரவேண்டும்.

- இப்படி சிரேஷ்ட பத்திரிகையாளர் வித்தியாதரன் தெரிவித்தார்.

**பாதிக்கப்பட்ட கிராமங்களை மீளக்கட்டியெழுப்ப புலம்பெயர் கிராம அமைப்புகள் உதவ வேண்டும்**

அங்கு உரையாற்றிய ஊடகவியலாளர் இரா.துரைரத்தினம் கூறியவை வருமாறு -

போரினால் பாதிக்கப்பட்ட கிராமங்களை மீளக்கட்டி எழுப்புவதற்கு புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள அந்தந்த கிராம அமைப்புக்கள் முன்வர வேண்டும். வேரோடு பிடுங்கி எறியப்பட்டிருக்கும் அந்தக் கிராமங்களின் உட்கட்டுமானப் பணிகளுக்காக புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள அந்தந்த கிராம அமைப்புகள் உதவ முன்வர வேண்டும்.

புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள ஒவ்வொருவரும் மாதாந்தம் தனது கிராமத்திற்காக 50 டொலர்களை வழங்குவார்களாக இருந்தால் இலங்கை அரசையோ அல்லது வேறு நாடுகளையோ கையேந்தாது எமது கிராமங்களை அபிவிருத்தி செய்ய முடியும்.

இந்தப் பணிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றிணைக்க வேண்டும். அரசியல் பணிகள் மட்டும்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன் உள்ள கடமையல்ல, வீழ்ந்து போய் கிடக்கும் மக்களைத் தூக்கி விட்டு அவர்கள் உறுதியோடு நடப்பதற்கான உதவிகள் கிடைப்பதற்கு உரிய வழிவகைகளைச் செய்ய வேண்டும்.

- இப்படி ஊடகவியலாளர் இரா.துரைரத்தினம் தெரிவித்தார். (அ-சி)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் இலங்கை முதலுதவிச் சங்கத்தில் விரிவுரையாளர் பயிற்சியைப் பெற்ற ஆசிரியர்களுக்கான மீட்டல் செயற்பாடும், சான்றிதழ் வழங் கும் நிகழ்வும் எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு வருகைதரும்போது, இணைவு மாணவர்கள் விவரத்தை எடுத்து வருமாறும், சீருடைக்கான நிதி சேகரிப்பு அட்டையும் தேவையான மாணவர்களுக்குப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-15)

## பாரதிபுரம் காளி கோயிலுக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், செப். 15

திருநெல்வேலி பாரதிபுரம் காளி கோயிலுக்கான அடிக்கல்லை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த 12 ஆம் திகதி நட்டுவைத்தார்.

கலாசாலை வீதியிலுள்ள காளியம்மன் கோயில் இதுவரை காலமும் கோபுரக் கலசம் இல்லாதிருந்த நிலையில் கோயிலுக்கான கோபுரக் கலசத்தை அமைக்கும் திட்டத்திற்கமைய இந்த அடிக்கல் நடப்பட்டது. (த)

### அமெரிக்காவில் குர் ஆன் எரிக்கப்பட்டது எனப் பரவிய

# வதந்தியால் காஷ்மீரில் அனல் பறக்கிறது; ஒரே நாளில் 17 பேர் பலி; 70 பேர் காயம்

ஸ்ரீநகர், செப். 15

அமெரிக்காவில் குர் ஆன் எரிக்கப்பட்டது என வதந்தி பரவியதை அடுத்து காஷ்மீரில் நேற்றுமுன்தினம் மீண்டும் பயங்கர வன்முறை வெடித்தது. பல்வேறு அரச அலுவலகங்கள், அதிகாரிகளின்வாகனங்கள் மற்றும் தனியார் பாடசாலை ஆகியவற்றை வன்முறையாளர்கள் தீ வைத்து எரித்தனர்.

வன்முறை மற்றும் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் 16 பேர் உயிரிழந்தனர். மேலும் 70 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

வன்முறையை அடக்கும் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் ஒருவரும் வாகனம் மோதிப் பலியானார்.

ஏற்கெனவே பிரிவினைவாதிகளின் தூண்டுதலால் காஷ்மீர் வன்முறைப் பூமியாக மாறிவிட்டது. இந்நிலையில், அமெரிக்காவில் குர் ஆன் எரிக்கப்பட்டது எனப் பரவிய வதந்தியை அடுத்து, காஷ்மீரில் இளைஞர்கள் நேற்றுமுன்தினம் மீண்டும் வன்முறையில் ஈடுபட்டனர்.

பாரமுல்லா மாவட்டம் தங்மார்ங் பகுதியில் உள்ள கிறிஸ்தவ அமைப்புக்குச் சொந்தமான தேவாலயம் ஒன்றை வன்முறையாளர்கள் சூறையாடி தீ வைத்தனர்.

இததையடுத்து அவர்களைக் கலைக்க பொலிஸார் தடியடி நடத்தினர். எனினும் வன்முறை கட்டுக்கடங்காமல் போனதால் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதில் 5 பேர் கொல்லப்பட்டனர்; 20 இற்கும் மேற் பட்டோர் காயமடைந்தனர். மற்றும் சில சம்பவங்களில் மேலும் 11 பேர் கொல்லப்பட்டனர்.

மாவட்டத்தின் பிற இடங்களில் வட்டார வளர்ச்சி அலுவலகம், தாசில்தார் அலு வலகம், சுற்றுலா வளர்ச்சித்துறை அமைத்திருந்த இரண்டு குடில்கள், சமூக வளர்ச்சி அலுவலகம் மற்றும் அங்கிருந்து வாகனங்கள் ஆகியவற்றுக்கு வன்முறையாளர்கள் தீவைத்தனர். அக்கட்டடங்கள் கொழுந்து விட்டு எரிந்தன. வன்முறையாளர்களின் வெறியாட்டத்தால் அப்பகுதியே போர்க்களமாகக் காட்சியளித்தது.

தொடர்ந்து பொலிஸ் நிலையம் ஒன்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. பின்னர் பொலிஸ் நிலையத்துக்குள் புகுந்து சூறையாட அவர்கள் முயன்றனர். இதையடுத்து படையினர் அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 20 பேர் காயமடைந்தனர்.

இதேவேளை, வன்முறை அதிகரிக்கக் காரணமாக இருந்த குர் ஆன் அவமதிப்பு செய் தியை வெளியிட்ட பிரஸ் ரி.வி. ஒளிபரப்பை காஷ்மீரில் உடனடியாகத் தடை செய்வதாக மாநில அரசு அறிவித்தது. ஈரானில் இருந்து ஒளிபரப்பாகும் ஆங்கில செய்திச் சனல் இது.

இதையடுத்து, இந்தச் செய்தி தவறானது என்று அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் திமோதி ஜெ.ரோமர் டில்லியில் தெரிவித்தார். அமெரிக்காவில் பல்வேறு சர்வதேச பத்திரிகைகள், செய்திச் சனல்கள் உள்ளன. அவற்றில் இதுபோன்ற குர் ஆன் எரிப்புச் சம்பவம் நிகழ்ந்தது எனச் செய்திகள் வெளியாகவில்லை. பிரஸ் ரி.வி. வெளியிட்டது அதிகாரபூர்வமற்ற தவறான செய்தி என்றும் அவர் தெரிவித்தார்.

# பிரபாவின் தாயாருடன் நெடுமாறனின் பிரதிநிதி



சென்னை, செப். 15

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளை, உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ.நெடுமாறனின் பிர்திநிதி நேரில் சந்தித்து உடல் நலம் விசாரித்தார்.

பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள் பக்க வாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். தற்போது அவர் யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை அரச வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்.

தமிழர் தலைவர்கள் அடிக்கடி வைத்தியசாலைக்குச் சென்று அவரைச் சந்தித்து நலம் விசாரிக்கிறார்கள். அதேபோல் யாழ்ப்பாணம் செல்லும் சுற்றுலாப் பயணிகளும் அவரைச் சந்தித்து வருகின்றனர்.

பார்வதி அம்மாளை பார்ப்பதற்க்க உலகத் தமிழர் பேரவை செயலாளரான ராமசாமி பத்மநாதன் வல்வெட்டித்துறைக்குச் சென்றிருந்தார். பழ.நெடுமாறன் சார்பில் அவரது பிரதிநிதியாக இவர் சென்று பார்வதி அம்மாளை சந்தித்துப் பேசி உடல் நலம் விசாரித்தார். மேலும் சிவாஜிலிங்கத்தையும் ராமசாமி பத்மநாதன் சந்தித்துப் பேசினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்று செவ்வாய்க்கிழமை பளை மத்திய கல்லூரிக்கு விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. கல்லூரியின் இடிந்த கட்டடங்களை பாடசாலை அதிபர் க.குணபாலசிங்கம் நாடாளுமன்ற உறுப்பினருக்குக் காட்டுவதையும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை கையளிப்பதையும் பாடசாலையின் சிரமதானப் பணிகளை மேற்கொள்ள சரவணபவன் எம்.பி. ஒரு தொகைப் பணத்தை அதிபர், ஆசிரியர்களிடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: ஔண்யன், தமிழரசன்)

### போர் முடிவுற்றும் அடக்கு முறைகள் ஓயவில்லை

# கிளிநொச்சி மாவட்ட மாணவர்களுக்கான சலுகைகளை இல்லாமற் செய்ய திரைமறைவில் சதி

## பளை மத்திய கல்லூரி நிகழ்வில் சரா எம்.பி. தெரிவிப்பு

பளை, செப். 15

போர் முடிந்த் பின்னும் தமிழ் இனத்தின் மீது பல்வேறு வழிகளில் அடக்கு முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் ஒரு பகுதியாக தமிழ் மக்களின் மிகப்பெரிய சொத்தான கல்வியையும் ஒடுக்க - சீரழிக்க முயற்சிகள் துரித கதியில் நடந்து வருகின்றன. குறிப்பாக பின் தங்கிய மாவட்டமாகக் கணிக்கப் பட்டு வந்த கிளிநொச்சிக்கு 'கோட்டா' முறையில் மாணவர்களுக்கு கிடைத்து வந்த சலுகைகளை இல்லாமல் செய்வதற்கான திரைமறைவு வேலைகள் நடந்து வரு கின் றன.

இவ்வாறு குற்றம் சாட்டினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

பளை மத்திய கல்லூரி மாணவர்களுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை, கற்றல் உபகரணங்களைக் கையளித்த பின்னர் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கு, 1972 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட வெட்டுப்புள்ளி முறையும் ஒரு பிரதான காரணம். இந்த வெட்டுப்புள்ளி முறை மூலம் பெரும்பான்மை இனத்தவர்கள் எந்தெந்த இலக்குகளை அடைய விரும்பினார்களோ அவற்றை அடைந்துவிட்டனர்.அதனால் இப்போது வெட்டுப்புள்ளி முறையை நீக்க அவர்கள் விரும்புகின்றனர்.இதனால் அதிகம் பாதிக்கப்படப்போவது கிளிநொச்சி போன்ற பின்தங்கிய மாவட்டங்கள்தான். பின்தங்கிய மாவட்டங் களுக்கு கிடைத்து வந்த கோட்டா முறையிலான பல்கலைக் கழக அனுமதி, வேலை வாய்ப்பில் சலுகைகள், அபிவி ருத் திதிட்டங்கள் போன்றனகிட்டாமல் போகும் அபாய நிலை உருவாகியுள்ளது.

அபவிருத்தி திட்டங்கள் மூலம் கிடைக்கும் நன்மைகள் மாத்திரமே எமது இனத்தின் ஒட்டு மொத்தத் தேவை என்பது போல சிலர் காட்ட முற்படுகின்ற னர்.தமிழினத்தின் அரசியல் எதிர்காலத்தை மழுங்கடிக்கவே அவர்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றனர். கூடவே எமது இளம் சமூகத்தினரின் அரசியல் ரீதியிலான சிந்தனைகளையும் ஒடுக்கிவருகின்றனர். பல்கலைக்கழகங்களில் கூட அரசியல் சார் கருத்துக்களைப் பேச முடியாதளவுக்கு நிலைமை மோசமாகியுள்ளதால்,எமது இருப் புக்காக இன்னொருமுறை உரத்துக் குரல் கொடுக்க முடியாத- அரசியல் ரீதியாகவேனும் போராட முடியாத- நிலைக்கு நாம் சென்று கொண்டிருக்கிறோம்.

பளை மத்தியகல்லூரியில் எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லை. ஒழுங்கான வகுப்பறைகளோ, மண்டபங்களோ, ஆய்வுகூடங்களோ எதுவும் இல்லை. இங்குள்ள ஒரேயொரு கிணறுகூடப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. தென்பகுதியில் சிறு பாடசாலை ஒன்று கொண்டுள்ள சராசரி வசதிகள் கூட இந்தக் கல்லூரியில் இல்லை.அப்படியிருந்தும் ,விடாமுயற்சியோடு இயங்கிவரும் கல்லூரியைப் பார்க்கும் போது பிரமிப்பாகவேயுள்ளது.இன்னும் ஒரு மாதத்துக்குள் பளை மத்தியகல்லூரிக்கு நீரிறைக்கும் இயந்திரம் ஒன்ற வழங்க நடவடிக்கை எடுப்பேன் - என்றார். (ஒ-எ-6)

## தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களுக்கு வேதனம்

யாழ்ப்பாணம், செப்.15

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நிரந்தரமாகக் கடமையாற்றித் தற்காலிக இணைப்பில் யாழ்.மாவட்ட கல்வி வலயங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான செப்ரெம்பர் மாத வேதனப் பட்டியல் யாழ்.கல்வி வலய நிதிக் கிளைக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் யாழ். கல்வி வலயத்தில் இன்று புதனும், நாளை வியாழக்கிழமையும் வேதனப் பட்டியலில் ஒப்பமிடுமாறு யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஒ-15)

# வடமராட்சி கிழக்கு மக்களின் நலன்கருதி பல்வேறு நலச்சேவைகள் நேற்று ஆரம்பம்

## அரச அதிபர் தலைமையிலான நிகழ்வுகளில் அமைச்சர் டக்ளஸ், அதிகாரிகள்

யாழ்ப்பாணம், செப். 15

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மீளக் குடியேறிய மக்களின் நலன்கருதி அங்கு பல்வேறு நிலையங்களுக்கான அடிக்கல் நடும் நிகழ்வும், கட்டடங்களைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கும் நிகழ்வும் நேற்று இடம்பெற்றன.

யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுகளில் பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

- கொடிகாமத்துக்கும் - ஆழியவளைக்குமான இ.போ.சபை பஸ் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.
- பருத்தித்துறைப் பிரதேசசபை செம்பியன்பற்று உப அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.
- வடமராட்சி ப.நோ.கூ. சங்கக்கிளை ஒன்று வத்திராயன் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.
- செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை மீள இயக்குவதற்காக சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.
- இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளும் இதன்போது கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வுகளில் யாழ். மாவட்ட செயலக திட்டமிடல் பிரிவு அதிகாரிகள், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் எஸ். லிங்கநாதன் மற்றும் அதிகாரிகள், 55 ஆவது பிரிகேட் கட்டளைத் தளபதி எ.எல்.எஸ்.கே. பெரேரா மற்றும் இராணுவ உயரதிகாரிகள் சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, கூட்டுறவு, நீர்வழங்கல், வீதி அபிவிருத்தி போன்ற துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கான புதிய கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து மருதங்கேணி ஆதார வைத்தியசாலை திறந்துவைக்கப்பட்டது. (ஒ-14-236)

### பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு உதைபந்தாட்டம்

# அகில இலங்கை ரீதியில் மூன்றாமிடத்தை மானிப்பாய் இந்து பெற்றுச் சாதனை

கொழும்பு, செப். 15

அகில இலங்கை ரீதியாகப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது.

நீர்கொழும்பு, டொன் பொஸ்கோ கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற 3ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரியும் மன்னார் சென் சேவியர் கல்லூரி அணியும் மோதின.

ஆரம்பம் முதல் ஆட்டம் முடியும்வரை இரு அணிகளும் ஆக்ரோஷமாக விளையாடின. ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்லர் என்றவகையில் இருதரப்பினரும் மோதினர்.

மானிப்பாய் இந்து வீரர்களின் சளைக்காத ஆட்டத்தால் 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைக் கைப்பற்றிச் சாதனை படைத்தது.

இதற்கு முன்னர் அரைஇறுதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்து, கொட்டாஞ்சேனை சென். பெனடிக் கல்லூரியுடன் மோதியது.

அபாரமாக இரு அணிகளும் மோதியதால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இரு அணிகளுக்கும் வழங்கப்பட்ட 'பனால்ட்டியில்' சென்.பெனடிக் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றது.

நேற்று நடந்த இறுதியாட்டத்தில் சென். பெனடிக் அணியும் மருதானை சாகிராக் கல்லூரியும் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சாகிராக் கல்லூரி சம்பியனாகத் தெரிவாகியது. (ஒ-ஐ)

# இ.போ.சபைக்கு நியமனம் பெற்றுள்ள சாரதிகள், காப்பாளர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 15

புதிதாக நியமனம் பெறவுள்ள சாரதிகள், காப்பாளர்களை இன்று புதன்கிழமை இலங்கை போக்குவரத்துச் சபையின் கோண்டாவிலிலுள்ள வடக்கு தலைமைக் காரியாலயத்துக்கு வருகைதருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

சாரதிகள்

வேலும்மயிலும் ரமேஸ், செல்லத்துரை மணிவ[illegible] குமார், கிருஸ்ணசாமி [illegible], குணரட்ணம் றொபேட், சின்னையா சுதாகரன், உருத்திரநாதன் இளங்கோ, பரராஜசிங்கம் குணரட்ணம், வேலுப்பிள்ளை ஜெகன் மோகன்.

காப்பாளர்

இராஜதுரை பகீதரன், வடிவேல் தவசீலன், அப்துல் கபூர் ஜெஸ்மல், லில்லிகுமார் பிரசாத், பாலிபோட் வினோதரன், தேவநாயகம் தயாபரன், தவராஜா பிரபாகரன், மகாலிங்கம் பார்த்தீபன், வீரராஜா கிரிதரன், [illegible]ன், பசுபதி ஸ்ரீவிக்கினேஸ்வ[illegible], யோகராஜா கமலதாசன். (ஒ-ஐ)


CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை - யாழ்ப்பாணம்
புரட்டாதி 14, 2010
பங்குச்சந்தைச்சுட்டிகள்

அனைத்துப்பங்கு(ASPI)6,175.06↑
மிலங்கா(MPI) 6,452.26↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 3859.27Mn
பங்குகளின் அளவு(No.) 101.31Mn
வியாபாரம்(No.) 25,104
சந்தை முதல்(Mkt.Cap) 2033.02Bn
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
கெ(g)ஸ்ற் அனேர்ஸ் 68.20
எம்.ரி.டி. வோக்கேர்ஸ் 447.70
றோயல் செரமிக் 259.70
அலயன்ஸ் 891.40
பீபிள்ஸ் லீசிங் பைனான்ஸ் 138.20
குறைவு(Top 5 losers) - விலை Rs.
பிறவுண்ஸ் 318.60
மீறம பீச் ஹொட்டல் 100.00
நுவரெலியா 912.10
சிலோன் காடியன் 920.00
லங்கா வென்சர்ஸ் 42.10
மேலதிக தகவல்கள் -www.cse.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கப்பட்டுள்ளன. இதேவேளை குறித்த தோட்டத்தின் மேற்பிரிவில் இரண்டு குழுக்களுக்கிடையில் இடம் பெற்ற கைக்கலப்புச் சம்பவமொன்றில் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஒருவர் காயத்துக்கு உள்ளாகியுள்ளார். சம்பவத்தைத்தொடர்ந்தும் தமிழர்களின் இரண்டு வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

இதனையடுத்து தோட்டங்களைச்சேர்ந்த 100 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்தப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்துள்ளன. இந்த நிலையில் பிரதேசத்தில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

## யாழ். வருகின்றார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, வடக்கு மகாண சபை ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் உட்பட பலர் கலந்துகொள்வர்.

குடாநாட்டில் முன்னெடுக்கப்படும் பல்வேறு திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாக மீளாய்வு செய்யப்படும்

**ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்**

அதைத் தொடர்ந்து முதலாவது மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் முற்பகல் 11.30 மணிக்கு செயலகத்தில் நடைபெறும்.

இணைத் தலைவர்களான பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, வடக்கு மாகாண சபை ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகி யோர் தலைமையில் இக்கூட்டம் இடம் பெறும்.

இக்கூட்டத்திலும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வர். (ஒ-ஐ-15)


தற்போது வல்வை மண்ணில் புதிய கிளை

**Shaam Private Hospital**
SPH ஷாம் தனியார் மருத்துவமனை

(கம்பர்மலை சந்திக்கு அருகில்)
T.P.: 021 7200178

நோயாளர்களின் வசதி கருதி தற்போது விசேட வைத்திய நிபுணர்களின் வைத்தியசேவை வல்வை கிளையில்,

1. பொது மருத்துவம்
   Dr.R.கேதீஸ்வரன் (VP) *26.09.2010 5 pm*
2. பொது சத்திரசிகிச்சை
   Dr.S.ராஜேந்திரா (VS) *29.09.2010 5.30 pm*
3. பெண் நோயியலும் மகப்பேறும்
   Dr.S.சுரேஸ்குமார் (VOG) *26.09.2010 9.30 am*

குறிப்பு: பிரதான மருத்துவமனைக்கு (புலோலி மேற்கு, பருத்தித்துறை) கீழ்வரும் வெற்றிடங்கள் உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். (0772845175)

1. பெண் பயிற்சி தாதியர்
2. பகல் நேர ஆண் காவலாளி
3. பகல் நேர சுத்திகரிப்பாளர் (பகுதி நேரம்)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மாதகல் மேற்கு மாதகலைச் சேர்ந்த
திருமதி பூபாலசிங்கம் பாக்கியம்

பிறப்பு
04.06.1935
இறப்பு
16.08.2010



*ஆலமர விழுதுகளாய் எமைத்தாங்கி*
*அனைத்திலும் நாம் வளர ஏணியாகி*
*அன்பினிலே எமக்கொரு ஆலயமாகிய அன்பு அம்மாவே!*
*கொடிய நோய் வாழ்வில்*
*காலன்கொன்று விட்டானே உம்மை*
*அன்று மாலை வரை நீ புரிந்த அன்பு மழை*
*இன்னும் எம் கண்முன்னே வந்து செல்லுதம்மா*
*நாடு கடந்து வந்து நாம் உம்மைக் கண்டு*
*நாளும் பொழுதும் மகிழ்ந்திருந்த கணங்களும்*
*பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும்- நீ*
*கொஞ்சிக் குலாவிய தருணங்களும் என்றும் உம்மை*
*நினைவூட்டுதம்மா உன் சிரித்த முகத்தினையும்*
*உன் சீரிய அன்பினையும் இனி என்று காண்போம் நாம்*
*ஜென்மங்கள் கழிந்தாலும் எம் சந்ததி இருக்கும் வரை*
*தொடர்ந்திடும் உம் நினைவு....*

கடந்த 16.08.2010 அன்று அமரத்துவம் எய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணக் கிரியைகளின்போது எமக்கு உறுதுணையாய் நின்ற உற்றார், உறவினர்களுக்கும், அயலவர், நண்பர்களுக்கும் தொலைபேசி, தந்தி, கடிதம் என்பனமூலம் ஆறுதல் தெரிவித்தோருக்கும் பத்திரிகை, கண்ணீர் அஞ்சலி மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் எமக்கு உதவி ஒத்தாசை புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*இன்று(15.09.10) புதன் கிழமை மு.ப. 10.00மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

பழைய தபால்கந்தோர்
ஒழுங்கை,
சங்கானை.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
**குடும்பத்தினர்.**

## இன நல்லிணக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இலங்கை குறித்து எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் அலிஸ் ரெயர் பேர்ட் - மேலும் தெரிவித்தவையாவது :-

இலங்கையில் இப்போது நடைபெறுவன குறித்து, தள நிலை தொடர்பாக எங்களுக்கு எல்லாம் தெரியும்.

அந்த நாட்டில் மனித உரிமைகளை மீறும் செயல்கள் நடைபெற்றுவருகின்றன என்பதனை நாம் அறிவோம். குறிப்பாக கருத்துச் சுதந்திரம் மற்றும் ஊடகங்கள் மீதான அழுத்தங்கள் என்பன விரும்பத்தக்கவை அல்ல.

விடுதலைப் புலிகளுடனான போரின் பின்னர் மனித உரிமை மீறல்கள் ஓரளவுக்குக் குறைந்துள்ளன. சிறிதளவான முன்னேற்றம் உண்டு. ஆனால் அது எந்தளவுக்குத் தொடரும் என்பது தெரியவில்லை. அதனா லேயே இது விடயத்தில் நாம் இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றோம்.

போர் முடிந்த கையோடு இலங்கை அரசு உறுதி அளித்த இன நல்லிணக்கம் சொல்லில் அன்றி செயலில் நடை முறைக்கு வர வேண்டும். அதனையே நாம் தொடர்ந்து வலியுறுத்துகிறோம்.

போர் காரணமாக இடம்பெயர்ந்து மூன்று இலட்சம் தமிழ் மக்களில் இன்னமும் சுமார் 25,000 பேர் முகாம்களில் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவும் பொருட்டு பிரிட்டிஷ் அரசாங்கம் இது வரை 13.5 மில்லியன் பவுண்டுகளை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

முகாம்களில் தொடர்ந்து தங்கியுள்ள இடம் பெயர்ந்த தமிழ் மக்களின் நிலை குறித்து அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் மற் றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுடன் எமது அரசு இப்போதும் தொடர்புகொண்டு வருகிறது - என்றார். (அ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வேன் என அச்சுறுத்தியுள்ளார்.

நாட்டில் இளைஞர் யுவதிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்றும் இதற்குத் தீர்வுகாண ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கூறும் பதாகை ஒன்றையும் அந்தக் கம்பிக் கூட்டின் மீது பொருத்தியிருந்தார்.

இந்நிலையிலேயே இவர் பொலிஸாரால் நேற்றுமாலை கைதுசெய்யப்பட்டார் .

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பினர்களான எஸ்.சுரேந்திரன், எஸ்.சிவகுமார், இ.கனகையா புளொட் உறுப்பினர்களான எதிர்க்கட்சித் தலைவர் ரி.லிங்கநாதன், சு.குமாரசாமி, பார்த்தீபன், பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் லலித் ஜெயசேகர, அப்துல் பாரி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எல்.முனாபா ஆகிய பத்து உறுப்பினர்களும் கட்சி பேதமின்றி தலைவரின் நடவடிக்கையை ஆட்சேபித்து தாம் இந்தப் போராட்டத்தில் இறங்கினர் எனக் குறிப்பிட்டனர்.

காலை சபைக் கூட்டம் நடைபெற்ற போது தலைவருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை வழிமொழியப்பட்டது. அதையடுத்து, தலைவர் கூட்டத்தை நிறுத்தி வைத்து வெளியேறினார்.

நிகழ்ச்சிநிரலில் இல்லாத விடயங்கள் சபைக்குக் கொண்டுவரப்பட்டன. அதனால் தான் கூட்டத்தை நிறுத்தினேன் என நகர சபைத் தலைவர் ஜி.நாதன் தெரிவித்தார். நடைபெற்ற சம்பவங்கள் குறித்து ஆளுநருக்கு அறிவிக்கப் போவதாகவும் அவர் கூறினார்.

"கூட்டம் கூட்டப்பட்ட நோக்கத்துக்கு மாறாக தலைவர் செயல்பட்டார். அவரின் தனி மனித சர்வாதிகார போக்கை கண்டிக்கும் முகமாகவே நாம் கட்சி பேதமின்றி 10 உறுப்பினர்களும் எதிர்ப்பை வெளிகாட்டியுள்ளோம்" என எதிர்க்கட்சித் தலைவர் ரி.லிங்கநாதன் தெரிவித்தார்.

இந்நிலையில், மைதானத்துக்கு வருகை தந்த வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவசக்தி ஆனந்தன், வினோநோகராதலிங்கம் ஆகியோர் சபை உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று கட்சியின் தலைமைப் பீடத்துக்கு விடயத்தை தெரிவித்து அடுத்த மாதாந்தக் கூட்டத்துக்கு முன்னர் இதற்கான தீர்வுகள் முன்வைக்கப்படும் எனத் தெரிவித்ததைத் தொடர்ந்து சபை உறுப்பினர்கள் மைதானத்தை விட்டு வெளியேறினார்கள். (ஒ-சி)


**விற்பனைக்கு**

52 - XXXX இலக்க (குறுகப்) டபிள் கப் கன்ரர் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: பிரகாஷ் எலக்ரோனிக்ஸ், பருத்தித்துறை. *0773222837*

**Personal Class (கணனி)**

★ கற்கைநெறிகள் யாவும் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
★ MS Office, DTP, Internet and E.mail, Web Design, Graphic Design.
★ சான்றிதழ்கள் வழங்கப்படும்.
குறிப்பு: கணனி இல்லாதவர்களுக்கு எனது Laptop மூலமாகப் பயிற்சியளிக்கப்படும்.
T.P.: 0779672038 நல்லூர்.


## ஐ.தே.கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

18ஆவது அரசமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு மூன்று மாதங்கள் நிறைவடையும்போது நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும். இது குறித்து ஆராய சிவில் அமைப்புகளுடன் இன்று விரிவாக பேச்சு நடத்தினோம்.

18ஆவது அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளை மீறும் வகையில் அமைந்துள்ளது. இது குறித்த நீதிமன்றத் தீர்ப்பும் கேள்விக்குரிகியதாக உள்ளது.

அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த ஏர்ள் குணசேகர, லக்ஷ்மன் செனவிரத்ன ஆகியோர் கட்சிப் பொறுப்புகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். முதலாவது இராணுவ நீதிமன்றத்தில் சரத் பொன்சேகாவுக்கு எதிராக சாட்சியளித்தமைக்காக லக்ஷ்மன் செனி விரட்ணவுக்கு விளக்கம் கேட்டு ஏற்கனவே கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

- இப்படி ரணில் கூறினார்.

இந்தச் செய்தியாளர் மாநாடு நடைபெறுவதற்கு முன்னர் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் ரணில் விக்கிரமசிங்க பேச்சு நடத்தினார். இதில் சுயேச்சைக் குழுவாக இயங்கப் போவதாக அச்சுறுத்தல் விடுத்திருந்த தயாசிறி ஜயசேகர, ரோஸி சேனநாயக்க ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட கரு ஜயசூரிய, மங்கள சமரவீர, ஜோஸப் மைக்கல் பெரேரா, லக்ஷ்மன் கிரியெல்ல, காமினி ஜயவிக்ரம பெரேரா, ரவி கருணாநாயக, ஆர்.யோகராஜன், ருவன் விஜயவர்தன, நிரோஷன் பெரேரா ஆகியோரும் கலந்துகொண்டனர்.


**கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**

வீடு கட்டுதல், திருத்துதல், மாபிள் பதித்தல், சுற்றுமதில் கட்டுதல் போன்ற வேலைகள் குறித்த காலத்தில் தரமாகவும் நியாயவிலையிலும் செய்து கொடுக்கப்படும்.
AXSHAYA CONSTRUCTIONS, JAFFNA.
T.P: 0776679564, 021 320 7202

**AAA MOVIES International**

எமது வெற்றிகரமான தயாரிப்புகளான
★ பேசாத கண்ணும் பேசுமே
★ காதல் டாட் காம்
★ கோடம்பாக்கம்
திரைப்படங்களின் வரிசையில்......
எமது நிறுவனத்தின் நான்காவது படைப்பாக
**"பனைமரக்காடு"**
திரைப்படம் தயாராக உள்ளது. இதில் பங்குபற்றுவதற்காக
★ நடிக, நடிகையர்
★ சிறுவர் நடிகர்கள்
★ உதவி இயக்குநர்கள்
★ துறைசார் பயிலுநர்கள்
போன்றவர்களைத் தேடுகின்றோம்.
ஆர்வமுள்ளவர்கள் உடனடியாக தொடர்புகொள்ளவும்.
**தொடர்புகளுக்கு....**
AAA VENTURES (PVT) LIMITED
# 92, Brown Road, Jaffna, Sri Lanka.
E.Mail: aaamoviesintl@hotmail.com
Tel. +94(0)213207386, +94(0)213734742


## மரண அறிவித்தல்





யாழ்ப்பாணம், சங்கிலியன் வீதியை இல்லற வாழ்விடமாகவும், கொழும்பை தொழில் வாழ்விடமாகவும், கொழும்பு புதிய சோனகத் தெரு 'ஜெமினி' தொழில் நிலைய உரிமையாளருமான மாணிக்கம் - சம்புலிங்கம் வாகன விபத்தொன்றில் 12.09.2010 ஞாயிற்றுக் கிழமை அன்று அகாலமரணமானார். அத்துடன் அன்னாரின் பாசமிகு பேரனான கமலராஜன் சந்தோஷ் அவர்களும் அவ் விபத்தில் காலமானார்.

அமரர் சம்புலிங்கம் அவர்கள் காலஞ்சென்ற மாணிக்கம் - பார்வதி தம்பதிகளின் அருமை மகனும், சிவமலரின் (ரதி) அன்புக் கணவரும், கோபிநாத், அனுசியா, பிரதீபா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேஷ்குமார், கமலராஜன், வினிற்பிரீடா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற க. சந்தோஷ் மற்றும் க.சாருஸ், சு. திசானா, சு. சஞ்ஜே ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற சண்முகம் - துரையம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ச.திருச்செல்வத்தின் அன்பு மைத்துனருமாவார்.

அமரரான செல்வன் க. சந்தோஷ் அவர்கள் கமலராஜன் - பிரதீபா தம்பதிகளின் அருமை சிரேஷ்ட மகனும் சாருஷ் அவர்களின் அருமை அண்ணாவும் கந்தசாமி - யோகம்மா தம்பதிகளின் (தந்தைவழி) பாசமிகு பேரனும், காலஞ்சென்ற சம்புலிங்கம் - சிவமலர் (ரதி) தம்பதிகளின் (தாய்வழி) பாசமிகு பேரனும், ராசன் - லலி, கௌரி - சிறி, கண்ணன் -சசி, பிரியன் - ஜனந்தா ஆகிய தம்பதியினர்களின் (தந்தைவழி) பெறாமகனும், கோபிநாத் - வினித்பிரீடா தம்பதிகளின் மருமனும் சுரேஸ்குமார் - அனுசியா தம்பதிகளின் பெறாமகனும் ஆவார்.

அமரர்களான சம்புலிங்கம், சந்தோஷ் ஆகிய இருவரினதும் பூதவுடல்கள் புஞ்சி பொறளையிலுள்ள 'லங்கா' மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளன. அப்பூதவுடல்கள் பொறளை கனத்தை இந்து மயானத்திற்கு 16.09.2010 வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு இறுதித் தகன/ அடக்கக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

174, 3/ 12 Messenger Street
Colombo - 12.
தொ.பே.இல. - 011 2392146
077 6256304 , 077 6256270

தகவல்: ச. கோபிநாத்,
க. கண்ணன்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org